KALKI 24.3.96 ரூ. 3.00

கல்கி



ஜெ.வுக்கு சொன்ன ஜோதிடம்!





ஸ்பெஷல் ரிப்போர்ட் :

பிரதமர் பார்த்த நாடி ஜோதிடம்!

மாற்றமில்லாத கொள்கைகள்
1946 முதல்

A TRADITION OF TRUST & SERVICE
SINCE 1946
FIFTY GOLDEN YEARS

50 ஆண்டு திட நம்பிக்கை மற்றும் சிறந்த சேவைக் கொண்டாட்டம்

பிக்செட் டெபாசிட்டுகளை வரவேற்கிறது

பிக்செட் டெபாசிட் திட்டங்கள்

காலம் மாதங்களில்	ஆண்டுக்கு வட்டி விகிதம்	
	மாதாந்திரம்	காலாண்டு (மாதந்தோறும் கூட்டு வட்டியாக)
12 மாதங்கள் & 1 நாள் 25 மாதங்கள் 36 மாதங்கள் 48 மாதங்கள் 60 மாதங்கள்	15%	15.19%

* குறைந்தபட்ச டெபாசிட் ரூ. 1000/- பின்பு ஆயிரம் மடங்குகளில்.
** ரூ. 15,000 வரையிலான டெபாசிட் [illegible] வரிக்கழிப்பு இல்லை.

குமுலேட்டிவ் டெபாசிட் திட்டங்கள்

காலம் மாதங்களில்	ரூ. 1000 டெபாசிட்டுக்கு முதிர்வடையும் போது தரப்படும் தொகை	ஆண்டு வருவாய் (மாதந்தோறும் கூட்டு வட்டியாக)	நீங்கள் டெபாசிட் செய்தால் வரை வரிக் கழிப்பு இல்லை
12 மாதங்கள் & 1 நாள்	ரூ. 1161	16.10%	ரூ. 15000
25 மாதங்கள்	ரூ. 1364	17.47%	ரூ. 13000
36 மாதங்கள்	ரூ. 1564	18.80%	ரூ. 11000
48 மாதங்கள்	ரூ. 1815	20.38%	ரூ. 10000
60 மாதங்கள்	ரூ. 2107	22.14%	ரூ. 8000

* குறைந்தபட்ச டெபாசிட் ரூ. 1000/- பின்பு ஆயிரம் மடங்குகளில்.

ரெக்கரிங் டெபாசிட் திட்டங்கள்
(குறைந்தபட்ச தொகை ரூ. 500)

ICRA RATING
MAA +
HIGH SAFETY

காலம் மாதங்களில்	ஆண்டு ஒன்றுக்கு வட்டி	முதிர்வடையும் போது மதிப்பு (ரூ. 500-க்கு)	கூடுதலான முதிர்வுத் ரூ. 100-க்கும்
12 மாதங்கள் & 1 நாள்	14%	ரூ. 6477	ரூ. 1295
25 மாதங்கள்	15%	ரூ. 14749	ரூ. 2949
36 மாதங்கள்	15%	ரூ. 22840	ரூ. 4568

தி இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா லிட்
ஒரு H. C. கோத்தாரி குரூப் நிறுவனம்

மஞ்கூ பில்டிங்ஸ், 1 கிருஷ்ணமாச்சாரி சாலை, நுங்கம்பாக்கம் சென்னை 600 034
தொ. பே 827 6297, 827 4571, 823 3202

For statutory details, refer to our advertisement in The Hindu dated 7.9.95

வானவில்லின் கர்ப்பக்கிருகங்கள்



• பட்டாம் பூச்சியே!
சிறகுகளால் 'கைகுவித்து'
வணக்கம் சொல்கிறாய்!
வாழ்க்கையின்
வசந்தம் நோக்கி
உன் 'அழைப்பா' அது?

• அசையும் சிறகுகளால்
பூக்களின் 'ராஜா'வான
'ரோஜாவுக்கு' சாமரம் வீசுகின்றாய்!
பதிலுக்கு மகரந்த மணிகள்
உன் காலில் சலங்கைகளாய் மாறி
ஒரு மௌன சங்கீதத்தை - கருவின்
இசையாக்கி-
அரங்கேற்றுகிறது

• உன் சிறகுகளை
உற்றுப்பார்க்கிறேன்.
சிறகுகளா அவை?
வானவில்லின் கர்ப்பக்கிருகங்கள்.
வண்ணங்களின் அரிச்சுவடியை
எழுதி எழுதிப் பார்க்கும்
இயற்கை தேவனின் சிலேட்டுப்பலகை
ஆதாம்-ஏவாளின்
முதல்துடிப்பு
முதல் கனவு
முதல் முதலாக வரையப்பட்டு
நம் பார்வைக்கு அனுப்பப்பட்ட
ஓவியக் கண்காட்சி

• அழகான பெண்ணை
உனக்கு உவமையாக்கும்போது - உன்
சிலிர்க்கின்ற சிறகுகள்... கனவுகளின்
சித்திர கூடம்.
ஆனால் - பெண்ணை
உண்மையாய்ப் பார்க்கும் போது
உன் சிறகுகளெல்லாம்
பிய்த்து எறியப்பட்டு மிஞ்சிகிடக்கும்
புழுவெனும் சித்திரவதைக் கூடம்.

• பட்டாம்பூச்சியே
ஆயிரம் கவிஞர்கள் உன்னை
ஆயிரம் ஆயிரம் பாடி விட்டார்கள்.
ஆயினும்... உன்னிடமே-
பிரபஞ்சங்களின் சுரங்கம்.
கற்பனை எப்போதுமே
பட்டுப்போகாத
'பாட்டுப்பூச்சி'யும் நீதானே!

• வண்ணத்துப் பூச்சியே!
வண்ணாத்திப்பூச்சி என்று
கூப்பிடுகிறார்களே உன்னை!
எப்போது-
இந்த 'அழுக்கு' மனக்காரர்களை
'அடித்துத்துவைக்க'ப் போகிறாய்?

— ருத்ரா

ஒரு சின்ன ஃபிளாஷ்பேக். 12.11.95 கல்கியில், காஞ்சிபுரத்தை அடுத்த மாகரல் கிராமத்தின் சாராய சோகம் பற்றி கவர் ஸ்டோரி வெளியிட்டிருந்தோம். காலனிப் பெண்கள் ஒன்று திரண்டு சாராய வியாபாரிகளை அடித்து விரட்டிய தீரத்தைச் சொல்லி, குமுதவல்லி என்ற ஒரு சாராய வியாபாரியின் கொட்டத்தை மட்டும் அடக்க முடியவில்லை என்று அவர்கள் புலம்பியதையும் வெளியிட்டிருந்தோம்.

போலீஸ்காரர்களே அந்தக் கள்ளச் சாராய வியாபாரிப் பெண்ணுக்கு ஆதரவாகப் பேசியதையும், அதனால் கிராமத்துப் பெண்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை இருப்பதையும் எடுத்துக் காட்டி, மாவட்டக் கலெக்டருக்கு அவர்களின் பாதுகாப்புக்காக வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

செங்கை கலெக்டர் ராமமோஹன ராவ், உரிய நடவடிக்கை எடுக்கும்படி காஞ்சிபுரம் காவல் துறை



• துரைசாமிப் பிள்ளை & சண்முகப் பிள்ளை

இன்ஸ்பெக்டருக்குக் (மதுவிலக்கு மற்றும் கலால் பிரிவு) கடிதம் எழுதி அதன் நகலை நமக்கு அனுப்பியிருந்தார்.

இப்போது மாகரலில் நிலைமை எப்படி இருக்கிறது? இதோ நமது ரீ-விஸிட் ரிப்போர்ட்!

கிராமத்துச் சாலையில் இரண்டு பெரிசுகள் வந்து கொண்டிருந்தார்கள். நடையில் தள்ளாட்டம்; வயதின் காரணமாக அல்ல. நாம் நினைத்தது சரிதான்! 'போட்டிருக்கிறார்கள்.'

"என்ன பெரியவரே! எங்க இடைக்குது சரக்கு?"

நம் கேள்வியால் ஒரு நிமிடம் ஆடிப்போன பெரிசுகளில் ஒன்று கொஞ்சம் மிரண்டு, பின்னர் பதில் 'மொ'ழ்லியது.

"கண்ணு! ஆத்துக்கு அந்தாண்ட இடைக்குது துப்பா. எங்க ஊரு காஞ்சிபுரம். மாடு பிடிக்க வந்தோம்" என்று சொல்லி நடையைக் கட்டினர், பெரிசுகளான துரைசாமி பிள்ளையும் சண்முகம் பிள்ளையும்.


ஆக, மாகரலுக்கு உள்ளே கள்ளச் சாராயம் விற்கப்படுவதில்லை என்பது புரிந்து போயிற்று! கொஞ்சம் சந்தோஷத்துடன் நடையை எட்டிப் போட்டு, காலனியை அடைந்தோம். நாம் சென்றது, நண்பகல் நேரமாகையால் பெண்கள் அனைவரும் வயல் வேலைக்குச் சென்றிருந்தனர்.

"ஏண்டி பார்வதி... தங்கவள்ளி, காமாட்சி எல்லாம் எங்கடி வேலை செய்யறாங்க... போஸ்தகம் போடறாங்களே அவுங்க வந்துருக்காங்க!" வீட்டுக்கு வீடு போய் அந்தக் காலனி பெண்மணி விசாரித்து வந்தார். பெண்கள் சங்கப் பொறுப்பாளர்களில் ஒருவரான காமாட்சி தமது வீட்டில் இல்லை! மாடு பிடிக்கப் போயிருந்தார்.

"சங்கம் வைச்சிருக்காங்க! எல்லாம் நமக்கு வந்த கேடு!"

காமாட்சியின் கணவர் புலம்பியது நம் காதுக்குக் கேட்டு விட்டது.

"ஊர்ல குடிக்க முடியலேன்ற கோபத்திலே ஆம்பளைங்க இருக்கறாங்க!" என்று சொன்னார் காலனிப் பெண்மணி. கடைசியில் தங்க வள்ளி, வேர்க்கடலைத் தோட்டத்தில் களை பிடுங்கிக் கொண்டிருந்தது தெரிய வந்தது. அங்கேயே சென்று சந்தித்தோம். மற்ற பெண்களும் சேர்ந்து கொண்டார்கள்.



• ஆளில்லாத போலீஸ் அவுட் போஸ்ட்

சோகம் எப்போதும்





• "எங்கள் சோகம் தீராது!"

"நீங்க போட்டோ பிடிச்சு எழுதினதுக்குப் பின் கலெக்டர் கிராமத்தில் கூட்டம் போட்டார். 'யாரும் பயப்பட வேண்டாம். கள்ளச் சாராய விற்பனையை ஒழிச்சுடுவோம்'னு சொல்லி விட்டுப் போனார். அதன் பிறகு குமுதவல்லியைப் (அதிகார வர்க்கத்தின் ஆதரவுடன் கள்ளச் சாராய ராணியாக இருந்தவர்) பிடித்து குண்டர்கள் சட்டத்தில் ஒரு வருடம் வைச்சுட்டாங்க. வேலூரில் இருக்கிறாள். வெளியே வந்து எல்லோரையும் 'கவனிப்பதாகச்' சொல்லிக் கொண்டிருக்கிறாள். நாங்க இரண்டு, மூன்று வருடம் போராடியும் முடியாத காரியத்தை உங்க பொஸ்தகம் செஞ்சுடுச்சி சார்!" என்று சொல்லி சந்தோஷப் பட்டார் தங்கவள்ளி.

"இந்த ஊர்ல சாராயம் இப்ப இல்லைங்கறது சந்தோஷம்தான். ஆனா ஆத்துக்கு அந்தாண்ட உள்ள ஆதரப்பாக்கம் கிராமத்துல சரக்கு ஓடுது சார்! இரண்டு கடை இருக்கு! இப்ப எங்க கிராமத்து ஆம்பளைங்க பொழுது சாயற நேரத்துலே அங்கே போயிடறாங்க. நாங்க முதுகு ஒடிய தோட்டத்திலே வேலை செஞ்சு பத்து, பன்னிரெண்டு ரூபாய் சம்பாதிக்கிறோம். எங்க பசங்களுக்கு முழு வயிறு கஞ்சி கூட ஊத்த முடியாம, பணத்தைப் பிடுங்கிகிட்டு குடிக்கப் போயிடறாங்க அய்யா. எங்க கஷ்டம் தீரவே தீராதுங்க!" என்று வயிற்றெரிச்சல் முகத்தில் தெரியச் சொன்னார் சந்திரா என்ற பெண்மணி.

அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு மண்டையைப் பிளந்த மாசி மாத வெயிலில் ஆற்று மணலில் ஆதரப்பாக்கம் கிராமத்தை நோக்கி நடந்தோம். அந்தக் கரையில் ஆற்று ஓரத்தில் புதர்களிடையே, கறுப்பு கேன்கள், சாராயக் கடைகள். சிவந்த கண்கள்; சில்லறைத் தகராறுகள். ஆம்! பகிரங்கமாக பட்டப் பகலில் கள்ளச் சாராயம்!

"பக்கத்து மாகரல் கிராமம் போல நாங்க ஒன்று பட்டுப் போராட முடியலை சார். இளைஞர்கள் எவ்வளவோ முயன்று பார்த்தோம். இதனால் பல பிரச்னைகள் வந்ததே தவிர, வேறெதும் செய்ய முடியவில்லை" என்றார் ஆதரப்பாக்கம் இளைஞர் சங்கத்தின் பொறுப்பாளரான அருள் என்பவர்.

ஆதரப்பாக்கம் கிராமத்துக்குப் போலீஸ் ஸ்டேஷன் பன்னிரெண்டு கி.மீ. தாண்டி உள்ள உத்தரமேரூர்தானாம். மாதத்திற்கு நான்கு முறை வரும் கலால் பார்ட்டி, ரெகுலர் பார்ட்டி போலீஸ்காரர்கள் மாமூலைப் பெற்றுக் கொண்டு வண்டியில் விரைந்து விடுவார்களாம். புரட்சித் தலைவியின் ஆட்சியில் சந்தோஷமாக இருக்கும் ஒரே துறையான காவல் துறையை எண்ணி வியந்தபடி மாகரல் போலீஸ் அவுட் போஸ்டுக்கு வந்தோம்.

யாருமே இல்லை. தலைமைக் காவலர் சீட் காலியாக இருக்க, பக்கத்தில் குவியலாகப் பச்சை வேர்க்கடலை!

மாகரலில் கள்ளச்சாராயம் ஒழிய, நாம் கேட்டுக் கொண்டபடி உதவிய கலெக்டருக்கு நன்றி சொல்லும் வேளையில், பக்கத்து கிராமமான ஆதரப்பாக்கத்தில் அது மறுபடி வேர் விட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். உள்ளூரில் கடை இல்லை என்றாலும் ஓயாத சோகம்தான், மக்களுக்கு! உருப்படியாக தமிழகம் தழுவிய ஓர் அதிரடி நடவடிக்கை எடுத்தாலொழிய விமோசனமே இல்லை!

- ப்ரியன்

படங்கள் : கிருஷ்ணமூர்த்தி

தொடர்கதை தான்...!

திட்டத்தில் சேரும் முதல் 1000 உறுப்பினர்களுக்கு வியப்பூட்டும் ஓர் அன்பளிப்பு!

இந்த அருமையான திட்டம் 1996 மார்ச் 31 வரை மட்டும்

தங்க வளையம் -- பரிசுகள், அன்பளிப்புகள் மட்டுமல்ல பொன்னான வாய்ப்பு ஒன்றையும் உங்களுக்கு வழங்குகிறது. இந்தப் பொன்னான காலத்தில் நீங்கள் எங்களிடம் வாங்கும் தங்க நகைகளின்மீது சிறப்பு தள்ளுபடி பெறலாம். 1996 மார்ச் 31 வரை இவற்றுக்கு செய்கூலி கிடையாது.

கேரளா ஃபாஷன் ஜூவெல்லரி -- 22-வது ஆண்டு நிறைவு விழா!

22-வது ஆண்டு நிறைவை ஒட்டி, எங்களுடைய தங்க வளையம் திட்டத்தின் கீழ் உங்களுக்காகவே பல மகத்தான வாய்ப்புகளை வழங்குகிறோம். மாதம்தோறும் மிகச் சுலபமாக, சிறுகச் சிறுகச் சேர்த்துச் செலுத்தி, 30 மாதங்களின் முடிவில் மகத்தான மதிப்புக்குத் தங்க நகைகளை நீங்கள் வாங்கிக்கொள்ளலாம்.

பொன்னான வாய்ப்பு

கேள்வி : 1996 பிப்ரவரி 15-ஆம் தேதியன்று ஒரு கிராம் தங்கத்தின் விலை என்னவாக இருந்தது?

விடை : ____________________

பெயர் : ____________________

முகவரி : ____________________

____

____________________ தொலை பேசி ____________________

இந்த கூப்பனை பூர்த்தி செய்து கொடுத்து சிறப்பு தள்ளுபடி பெறவும்.

KERALA FASHION JEWELLERY

லஸ் கார்னர், மயிலாப்பூர், சென்னை - 600 004. தொலை பேசி : 843610

இருபத்து இரண்டு ஆண்டுகளாக
இணையற்ற தரம், தூய்மையான தங்கம்.

திட்ட காலத்தில் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் தங்க வளையம் சீட்டு அலுவலகம் திறந்திருக்கும்.

"லீப் வருஷத்தைக் கண்டுபிடிச்சவனை கட்டுத் தள்ளணும்" என்றார் முணுமுணுதாசன்.

"அவன் ஏற்கெனவே செத்துப் போயாச்சே" என்று நினைவூட்டினார் சூதாட்டநேசன்.

"அதுதானே வயத்தெரிச்சலை இன்னும் அதிகமாக்குது" என்றார் முணுமுணுதாசன். "கூடுதல் சம்பளம் ஒரு பைசா கூட இல்லாம ஒரு நாள் முழுதும் அதிகப்படி வேலை செய்யறது எவ்வளவு கொடுமை!"

இரண்டு பேரும் ஒரு கூல் பாரில் உட்கார்ந்து கொக்கோ கோலா கொண்டு வரச் சொல்லி விட்டுக் காத்திருந்தார்கள்.

"அதான் தேர்தல் வருதே. தேர்தல் தினம் விடுமுறைதானே? 29-ம் தேதி வேலைக்குப் போனதற்கும் இதுக்கும் சரியாப் போச்சுன்னு வைச்சுக்கோ!"

"அதெப்படி? தேர்தல் தினம் விடுமுறை என்கிறது நமது உரிமையாச்சே! அதை விட்டுக் கொடுக்க முடியுமா?"

"அது சரி, ஆனா அன்றைக்கு ஒண்ணும் வேலை செய்யப் போறதில்லியே!"

"அதென்ன, அப்படி சொல்லிட்டே..?" என்றார் முணுமுணுதாசன். "ஜனநாயகக் கடமை ஆற்ற வேண்டாமா? பொழுது விடிந்ததும் யாருக்கு வோட்டுப் போடற துன்னு மண்டையைக் குடைஞ்சுக்கிட்டு யோசிச்சாகணும். அப்புறம் வாக்குச்சாவடி வரை நடந்தாகணும். கியூவில் நிற்கணும். நாம யாருங்கிறதை நிரூபிச்சு, கைநீட்டி, மை குத்திக்கணும். அப்புறம் வோட்டுப் பெற்று, முத்திரை குத்தி, பெட்டியிலே போட்டு, உள்ளே தள்ளணும். பிறகு வெயிலைப் பொருட்படுத்தாமல் நடந்து வீடு திரும்பணும். அடேயப்பா! எவ்வளவு வேலை! நினைச்சுப் பார்க்கவே களைப்பா இருக்கு!"

"பிஸ்ஸ்ஸ்ஸ்ஸ்க்!" கொக்கோ கோலா கேன் உடைத்து, கிளாஸில் ஊற்றினார் சூதாட்ட நேசன். "சாப்பிடு, களைப்புத் தீர்ந்து கூல் ஆயிடுவே!"

இன்னொரு கேன் உடைத்து தமக்கும் ஊற்றிக் கொண்டார். "தேர்தல் தினத்தை விட்டுத் தள்ளு. கதவடைப்பு நாட்களை நினைச்சுப் பாரு. நம்ம அரசியல்வாதிங்க இந்த வருஷக் கணக்குக்கு ரெண்டு மூணு கதவடைப்புக்களாவது நடத்திக் காட்ட மாட்டாங்களா? ஆபீஸ் போகாமல் டீவி பார்த்துக்கிட்டு ஜாலியா உட்கார்ந்திருக் கலாம். கதவடைப்புக்குப் பிரச்னைகளா இல்லே?"

"மானாவாரியா இருக்கு. மொழிப் பிரச்னை, ஈழத் தமிழர் பிரச்னை, பங்கு மார்க்கெட் சரிவு, பணவீக்கம் குறைந்த போதிலும் விலைவாசி உயர்வு... ஏன், இந்த கொக்கோ கோலாவையே எடுத்துக்க - பதினைஞ்சு ரூபா!"

"இங்கே உட்கார்ந்து, உடைச்சு, கிளாஸ் தம்ளரில் ஊற்றிக் குடிக்க ரெண்டு ரூபா எக்ஸ்ட்ரா!"

"வெய்ட்டருக்கு டிப் வேற. ஆக மொத்தம் பதினெட்டு ரூபா... அநியாயம்! கட்டுப்படியாக வேண்டாமா?"

"அதுக்காகத்தான் லஞ்சம் வாங்கறதே!" என்றார் சூதாட்ட நேசன். "ஹவாலா ஆட்சி நடத்தி, அரசு கஜானாவை திவாலா நிலைக்குக் கொண்டு வரதும் அதுக்காகத்தான். கறுப்புப் பணத்தை நம்பித்தானே விலைவாசிகளே ஏறுது!"

முணுமுணுதாசனும் சூதாட்ட நேசனும்!

"உன்னோட சூதாட்ட புத்தியைக் காட்டுறே" என்றார் முணுமுணுதாசன். "மாட்டிக்கிட்டா என்ன பண்ணுவே?"

"பண்ணுறது என்ன? ஜாமீன் கொடுத்துட்டு வெளியே வந்துட வேண்டியதுதான். அப்புறம் வக்கீல் வைச்சு வாதாட வேண்டியது. வக்கீல் கெட்டிக் காரனாயிருந்தா வாய்தா வாங்கியே வழக்கை



இழுத்தடிபபான். அதுக்குள்ள ஆட்சி மாறிடும்; இல்லே, நம்ம ஆயுசே முடிஞ்சுடும்!"

"ஜாமீன் கிடைக்காட்டி, ஹார்ட் அட்டாக்னு சொல்லி ஆஸ்பத்திரிலே ஏ.ஸி. சொகுசு அறையிலே குடியேறுவீங்க! அக்கிரமம்!"

"சும்மா முணுமுணுத்துக்கிட்டே இருக்காதே! சத்யமேவ ஜயதே! நீதி நிலைக் கட்டும். சட்டம் தன் போக்கில் செயல் படும்... ஒரு பெட் கட்டறியா? ஹவாலா புள்ளிங்க ஒருத்தர் கூட தண்டனை பெற மாட்டாங்க!"

"அதுலயும் ஸ்டேக்கா! குதிரை ரேஸ் சூதாட்டமில்லே, அழகானது; புத்தி பூர்வமானதுன்னு உச்சநீதிமன்றத் தீர்ப்பு வந்தாலும் வந்தது, துணிஞ்சு கட்டையாகி எதுக்கெடுத்தாலும் வை ராஜா வைன்றே! வின் போஸ்ட் நோக்கிக் குதிரைங்க தலை தெறிக்க ஓடறதுல அழகுணர்ச்சி என்ன இருக்கு? புத்தியைச் செலுத்த என்ன இருக்கு? ஒண்ணும் புரியலே!"

"மரிலின்மன்ரோவுக்கு அழகுநடையைக் கற்றுத் தந்ததே குதிரைங்கதான். கவனிச்சுப் பார்த்தா தெரியும்" என்றார் சூதாட்ட நேசன். "ஜாக்பாட் குதிரைங்களைத் தேர்ந்தெடுக்க ஒண்ணுலேர்ந்து பத்து வரை எண்ணத் தெரிஞ்சிருக்கணும். அந்த எண்களைப் புரட்டிப் புரட்டிப் போட்டு எழுதவும் தெரியணும். இதெல்லாம் புத்திபூர்வமானதில்லையா?"

"அப்படிப் பார்த்தா மூணு சீட்டு கூட புத்தி பூர்வமானதுதான்! பெரிய சீட்டு எது, சின்ன சீட்டு எதுன்னு தெரிஞ்சிருக்கணுமே!"

"கரெக்ட்! வாழ்க்கைல எதுதான் சூதாட்டமில்லே? நீ ஜனநாயகக் கடமைன்னு நினைக்கிற வோட்டுப் போடுகிற காரியம் கூட ஒரு சூதாட்டம்தானே!"

"அதெப்படி?"

"நீ புத்திபூர்வமா யோசிச்சு ஒருத்தனுக்கு வோட்டுப் போடலாம். ஆனால் அந்த மனுஷன் தேர்ந்தெடுக்கப்படுவான்றது என்ன நிச்சயம்? அப்படியே ஜெயிச்சாலும் தொடர்ந்து யோக்கியமாவே இருப்பான்றதுக்கு என்ன உத்தரவாதம்? சட்டமன்ற, நாடாளுமன்றக் குதிரை வியாபாரங்களிலே அவனும் விலை பேசப்படலாம். தேர்தலுக்குச் செலவழிச்ச பணத்தைப் பல மடங்கு லாபத்தோட திரும்பப் பெற அவன் தன் பதவிக் காலத்திலே முயற்சி செய்யலாம். நாங்க குதிரை ரேஸ்ல புத்திபூர்வமா குதிரையைத் தேர்ந்தெடுத்து பெட் வைக்கிறது இதைவிட எவ்வளவோ மேல்!"

"ஆமாமாம்! நம்ம ஜனநாயகம் சூதாட்ட மில்லேன்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஒன்று தான் பாக்கி. வழக்குப் போட்டால் அந்த முத்திரையும் கிடைச்சுடும்" என்று கூறி விட்டு கொக்கோகோலாவின் கடைசித் துளி களை "சர்ர்ர்ர்ர்" என்ற பெருஞ்சத்தத்துடன் உறிஞ்சினார் முணுமுணுதாசன்.

பில்லை யார் கொடுப்பது என்பதற்கு எட்டணா மதிப்பும் தோற்றமும் கொண்ட ஐந்து ரூபாய் நாணயத்தைச் சுண்டினார் சூதாட்டநேசன்.

செம்பியன்

அற்புதம் செய்து அசத்துங்கள்!

தேங்காய்க்குள் மல்லிகைப் பூக்கள்!

தேங்காயை உடைக்கும்போது அதி விருந்து மல்லிகைப் பூக்கள் சிதற வேண்டுமா? தாராளமாகச் சிதறும்! எப்படி என்கிறீர்களா?

நாளைக்கு இந்த அற்புதத்தை நிகழ்த்த வேண்டுமானால் இன்றைக்கே சில வேலைகளைச் செய்ய வேண்டும். தேங்காயின் குடுமிக்குள் இருக்கும் மூன்று கண்களில் ஒன்றைப் பக்குவமாகத் திறக்க வேண்டும். அதற்குள் பத்துப் பதினைந்து மல்லிகை மொட்டுகளைப் போட்டு விட்டுப் பழையபடி 'கண்ணை' மூடி வைத்து விட வேண்டும். குடுமியும் பழையபடி இருக்குமாறு பார்த்துக் கொள்வது அவசியம்.

இரவில், தேங்காய்க்குள் இருக்கும் மொட்டுகள் மலர்ந்து விடும் என்பதால் அடுத்த நாள் நீங்கள் தேங்காயை உடைக்கும்போது மல்லிகைப் பூக்கள் சிதறும்! பார்க்கிறவர்களுக்கு 'விஷயம்' தெரியாது என்பதால் உங்கள் மந்திர சக்தியால்தான் பூக்கள் வந்தன என்று நம்புவார்கள்.



நெருப்பையும் விழுங்கலாம்!

சாதாரணமாகவே மனிதத் தோல் 1200 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தைக் கூட ஒரு விநாடி நேரத்துக்குத் தாங்கக்கூடிய சக்தி படைத்ததுதான். இப்படி மூன்று விநாடிகளுக்குக் கூட நம்மால் அதிவெப்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியும். தீப்பந்தத்தை வாய்க்குள் திணிப்பது போலவும் கற்பூரத்தைக் கையிலேற்றி விழுங்குவது போலவும் வித்தை காட்டுவது இந்த விஞ்ஞான உண்மையின் அடிப்படையில்தான். தேவை யெல்லாம் கொஞ்சம் துணிச்சல் மட்டுமே!

ஆவி (பேய்)யைப் பிடித்து எரிக்கலாம்!

பேய் பிடித்திருப்பது போல் நடிப்பதற்கு ஒருவரை .ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். செம்பு, தேங்காயெல்லாம் எடுத்து, மஞ்சள், குங்குமமெல்லாம் பூசிக் கலசம் 'செட்அப்' செய்து பேய் பிடித்தவர் முன்பு வைத்து மந்





"கட்சியிலேதான், உனக்குக் கொள்கை பரப்புச் செயலாளர் பதவி கொடுத்துட்டாங்களே; அப்புறம் ஏண்டா சோகமா இருக்கே?"

"சோகத்துக்குக் காரணமே அதாண்டா; இல்லாததை எப்படிப் பரப்பறதுன்னே பிடிபடலை!"


— வி. ரெங்கநாதன்



ஆசிரியர் : அஞ்சு வருஷத்துக்கு ஒரு தடவை தேர்தல் ஏன் வருது?

மாணவன் : அரசியல்வாதிங்க அடிச்ச ஊழல் பணத்திலே ஒரு பகுதியாவது மக்களுக்குத் திரும்பக் கிடைக்குமேன்னுதான்...

— கு. அருணாசலம்



"நம்ம பையன்தான். வேலைக்கு ஆர்டர் வந்திருக்கு. இன்னிக்கு டூட்டியில் ஜாயின் பண்ண ஆபீஸ் போறான்."

- ஆலத்தம்பாடி ராஜகோபால்.

திரம் சொல்லுங்கள். நீங்கள் ஏற்பாடு செய்துள்ள நபரின் நடிப்பும் உங்கள் மந்திர நடிப்பும் மிகவும் முக்கியம் என்பதால் தத்ரூபமாக இருக்கும்படி பார்த்துக் கொள்வது அவசியம்!

சிறிது நேரத்திற்குப் பிறகு, அந்த ஆவியை (பேயை)ப் பிடித்து எரிக்கப் போவதாகச் சொல்லி உங்கள் கமண்டலத்திலிருந்து சிறிது நீரை எடுத்துக் கலசமாக்கப்பட்டுள்ள தேங்காயின் குடுமியின் மீது அடியுங்கள். புஸ் என்ற சப்தத்துடன் நீராவி, புகை எல்லாம் கிளம்பும்; பேயைப் பிடித்து எரிப்பதாக நீங்கள் அப்போது சொல்லிக் கொள்ளலாம்!

விஷயம் இதுதான்! முன்னதாகவே நீங்கள் தேங்காயின் குடுமிக்குள் சோடியம் உலோகத்தைக் கொஞ்சம் மறைத்து வைத்திருக்க வேண்டும். (சோடியம் மிகவும் மிருதுவானது. கடைகளில் மண்ணெண்ணெயில் சேமித்து வைத்திருப்பார்கள்) அதில் தண்ணீர் பட்டதும் வெப்பம், நீராவி, புகை, ஹைட்ரஜன் எல்லாம் வெளிப்படும்!

காசையும் விபூதியாக்கலாம்; வரவழைத்தும் தரலாம்!


உங்கள் முன் உள்ள நாணயங்களிலிருந்து அலுமினிய இருபது காசு நாணயமொன்றை எடுங்கள்; உள்ளங்கையில் வைத்து மூடி மந்திரம் ஜெபித்துத் திறந்தால் அந்த நாணயம் சாம்பலாக மாற ஆரம்பிக்கும். பார்வையாளர்களுக்கு அதை விபூதியாக இட்டு விடலாம்!

செய்ய வேண்டியது என்னவென்றால், நிகழ்ச்சிக்கு முன்பாக உங்கள் கையில் மெர்க்குரிக்குளோரைடு கரைசலைப் பூசிக் கொள்ள வேண்டும். பூசப்பட்ட உள்ளங்கையில் அலுமினிய நாணயம் பட்டதும் வேதியல் மாற்றத்தால் அலுமினியம் சாம்பல் பூத்தது போல் ஆகிவிடும். (மெர்குரிக்குளோரைடு விஷம் என்பதால் ஜாக்கிரதையாகச் செயல்படுவது அவசியம்!)

நல்ல வாசனை விபூதியில் துணிக்குப் போடும் 'ஸ்டார்ச்' பௌடரை மிளகு அளவுக்குக் கலந்து பசையாக்கி உருட்டிக் காயவைத்துக் கொள்ளுங்கள். இந்தச் சிறு சிறு உருண்டைகளை விரலிடுக்குகளில் ஒளித்து வைத்துக் கொண்டு, வேண்டும் போது வரவழைத்துப் பிசைந்தால் விபூதி கொட்டும்!

நன்றி : தேசிய அறிவியல் தொழில்நுட்ப தொடர்பியல் கழகம், கலைக்கதிர்.

சுஜாதா பக்கம்



மூன்று பொறியியற் கல்லூரிகளுக்குக் கம்ப்யூட்டர் பற்றி விரிவுரையாற்றச் சென்றிருந்தேன். அண்ணா நகரிலுள்ள வேலம்மாள் கல்லூரி, புதுக்கோட்டை கீரனூரில் மூகாம்பிகை கல்லூரி, தஞ்சை வல்லத்தில் சண்முகா கல்லூரி. தனியார் பொறியியற் கல்லூரிகளில் மாணவர்களை அனுமதிப்பதில் மூன்று வகை இருக்கிறது. ஃப்ரீ சீட், பெய்டு சீட், மேனேஜ்மென்ட் கோட்டா. ("போட்ல வந்தியா, நோட்ல வந்தியா?")

ஃப்ரீ சீட் என்பது வருஷத்துக்குச் சுமார் இரண்டாயிரம். பெய்டு சீட் என்பது வருஷத்துக்குச் சுமார் முப்பத்திரண்டாயிரம்! மேனேஜ்மென்ட் சீட் வருஷத்துக்கு ஒரு லட்சம்! இந்த உத்தேசமான எண்ணிக்கைகள் கல்லூரிக்குக் கல்லூரி மாறுபடுகின்றன. பல வகைகளில் பணம் வசூலிக்கப்படுகின்றது. மாணவர்களிடையே பொருளாதார வேறுபாடுகளுடன் துவக்குவது ஆரோக்கியமானதா என்பதை யோசிக்காமல் செய்துவிட்ட இந்த அமைப்பை எப்படி நிவர்த்தி செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இதற்குத் தீர்வாக எனக்குத் தோன்றுவது இது:

நல்ல கல்லூரியென்றால் பணம் வசூலிப்பதில் தப்பில்லை. (அமெரிக்காவில் இதுதான் வழக்கம்). ஃப்ரீ சீட்டுகளை அரசுக் கல்லூரிகளிலும், பணம் கொடுக்கும் சீட்டுகளைத் தனியார் கல்லூரிகளிலும் பிரித்து, எவ்வளவு பணம் என்பதை ஒரு தாட்சண்ணியமற்ற குழு பரிந்துரைக்க, எல்லா மாணவர்களிடமும் ஒரே தொகையை வாங்குவதுதான் ஆரோக்கியம். அவர்களுக்குக் கல்லூரியிலேயே நூலகம், உணவகம், சோதனைச் சாலை இவைகளில் சின்னச் சின்ன வேலைகள் கொடுத்து சம்பாதிக்க வாய்ப்புத் தரலாம். இறுதியில் எல்லா பொறியியல் கல்லூரிகளையும் தன்மயமாக்குவது (ஆட்டொனமஸ்) மிகவும் முக்கியம்.

சில தரமான கல்லூரிகளில் கம்ப்யூட்டர் வசதிகள் போதுமானதாகவே இருக்கின்றன. நிறைய டெர்மினல்கள், நெட்வொர்க், சர்வர் ஒர்க்ஸ்டேஷன் என்று பெருமையுடன் காட்டினார்கள். வல்லம் கல்லூரி இதில் முதலிடம் வகிக்கிறது. ஆனால் உண்மையாக மாணவர்களை கை வைக்க அனுமதிக்கிறார்களா என்பதை என் இரண்டு மணி நேர விஜயத்தில் அறிந்து கொள்ள இயலவில்லை. விரிவுரையாளர்களின் தரத்தைப் பற்றியும் கொஞ்சம் கவலையாக இருக்கிறது.

காரணம் இந்தக் கல்லூரிகள் கிராமப்புறங்களில் அமைந்திருப்பதும் சம்பளப் பற்றாக்குறையும்தான். என்ன, என்னவோ டி.எஸ்.பி., நியூரல் நெட்வொர்க்ஸ், ஆர்ட்டிபிஷியல் இன்டெலிஜென்ஸ் என்றெல்லாம் கித்தாப்பான எலக்டிவ்ஸை வைத்து விட்டு, மாணவர்கள் ஆர்வத்துடன் தேர்ந்தெடுக்க, கற்றுத்தர ஆளில்லாமல் சோகாக்கிறார்கள்.

சிலபஸ் என்னும் பாடத் திட்டம் பாரதிதாசனிலும் சென்னை பல்கலைக்கழகத்திலும் மதுரை காமராஜிலும் பிற்பட்டதாக இருக்கிறது. அண்ணா பல்கலைக்கழகம் விதிவிலக்கு. மற்றவைகளில் இன்னும் மாணவர்கள் பேசிக், கோபால், ஃபோர்ட்ரான் இவற்றையே கட்டிக்கொண்டு அழுகிறார்கள்! உலகமே ஸி மற்றும் ஸி ப்ளஸ் ப்ளஸ் மொழியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஸி ப்ளஸ் ப்ளஸ் மொழியே இன்னும் ஐந்து வருஷம்தான் தாங்கும். புதிதாக ஜாவா என்கிற மொழி ஆட்சியைப் பறிக்கும் என்று இப்போதே பரபரப்பாக பேசப்படுகிறது. இந்த நிலையைக் குறிப்பிட்டுக் கேட்டால், பாடத்திட்டத்தைத் திருத்தும் கமிட்டி இன்னும் கூடவில்லை என்கிறார்கள். கூடினாலும் கேக்கும் பிஸ்கட்டும் சாப்பிட்டுவிட்டு அடுத்த கூட்டத்துக்கு ஒத்திப் போட்டு விடுகிறார்கள் என்றும் தெரிகிறது!

இதற்கு நிவாரணம் கல்லூரிகளுக்குச் சுயாட்சி நிலை கொடுத்து, பாடத்திட்டத்தை அமைப்பதிலும் சுதந்தரம் அளிப்பதே. திருச்சி ஜோசப், சென்னை லயோலா போன்றவற்றில் இந்த ஏற்பாடு உள்ளது. ஆர்ஈஸி, ஐஐடிக்களும் உதாரணம். பொறியியல் மாணவர்களுக்கு நான் திரும்பத் திரும்பச் சொல்லும் அறிவுரைகள் இவை :

உங்கள் பெற்றோர் நிறைய பணம் கொடுத்து சேர்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கைம்மாறு 'அர்ரியர்ஸ்' வைக்காமல் பாஸ் பண்ணி நான்கு வருஷத்தில் வெளியே வருவது. ப்ராஜெக்ட் பெரிசாக எடுத்துக் கொள்ளாமல் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்கும் படியாக எடுத்துக் கொள்வது. அதை ஓரிரண்டு பேருக்கு மேல் அல்லாமல் தெளிவாக திட்டமிட்டுச் செய்வது.

சிலபஸில் இருக்கிறதோ இல்லையோ, 'ஸி' மொழி, யுனிக்ஸ், 'ஊப்ஸ்' என்னும் 'ஆப்ஜெக்ட் ஓரியன்டட் ப்ரோக்ராமிங், 'டேட்டா கம்யுனிகேஷன், டி.எஸ்.பி., ஒரு முக்கியமான 'ஆர்டிபிஎம்எஸ்', கேட் (CAD) இவைகளைத் தெரிந்து கொள்வது. இந்தியாவில் எந்த ஊரிலும் வேலைக்குச் செல்லத் தயாராக இருப்பது.

பாடங்களைச் சொந்தமாகப் படித்துக் கொள்வது. ஒவ்வொரு வகுப்பிலும் துடியாக இருப்பவனை, 'அம்மா, தாயே' என்று கெஞ்சி, பாடம் எடுக்கச் சொல்வது!

(மீண்டும் அடுத்த வாரம்)

இந்திர

12. மருத்துவரின் சித்து

உடல் முழுக்கக் கம்பளத்தால் போர்த்திய படி வந்து நின்ற உருவத்தைக் கண்டு அலறி விட்ட பணிப்பெண்களைத் தொடர்ந்து வாயிலை நோக்கித் திரும்பிய இளவரசியும் திடுக்கிடத்தான் செய்தாள். தொடர்ந்து அந்த உருவம், கம்பளத்தை முன்புறம் இணைத்திருந்த கயிறுகளை அறுத்து, அதைச் சுழற்றி ஒருபுற மாக எறிந்து, தன்னை யாரென்று காட்டிக் கொண்டதால் அவளது திகைப்பு வியப்பாக மாறியது. அவளிடமிருந்து "யுவான்" என்ற அழைப்பு வியப்புடன் வெளிவந்தது.

அதே சமயத்தில், பணிப்பெண்களின் அலற லைக் கேட்டு, பின்புறத்து மூலிகைத் தோட்டத் திலிருந்து விரைந்து உள்ளே நுழைந்த மருத்து வரின் முகத்தில் யுவானைக் கண்டதும் சற்றுக் கடுமையே பரவியது. "யுவான், உன்னை முதல் ஜாமம் முடிந்த பிறகுதானே வரவேண்டும் என்று கூறியிருந்தேன்" என்றார் மருத்துவர்.

"மன்னிக்க வேண்டும் மருத்துவரே, முதல் ஜாமம் முடியும்வரை காத்திருக்க அவகாச மில்லை. உங்கள் உத்தரவுக்காகத்தான் இத் தனை நேரம் தாமதித்தேன். அந்தப் போலிக் காங்கேயன் சோழ நாட்டிலிருந்து போசள வீரர் களை அழைத்துக் கொண்டு உத்தமபாளையத் தைத் தாக்கச் சென்றிருக்கிறான். சிங்கணனுக் கும் போர் துவங்கி விடலாமென்று செய்தி யனுப்பியிருக்கிறான்" என்றான் படபட வென்று.

மருத்துவர் முகத்திலிருந்த கடுமை மறைந்து, நிதானம் பரவியது. ஆனால் அவரது சொற் களில் மட்டும் விஷமம் ஒலித்தது. "நான் உன்னை மன்னிப்பதிருக்கட்டும் யுவான். முதலில் அதோ வருகிறார்களே அவர்கள் மன்னிக்கிறார்களா என்று சற்று திரும்பிப் பார்" என்றார் மருத்துவர்.

சட்டென்று திரும்பிய யுவான் போசள வீரர் மூவர் அதிவேகமாக வாட்களை உருவிய படி உள்ளே நுழைவதைக் கண்டான். உள்ளே நுழைந்த வீரர்களும் அறைவாயிலில் நின்ற யுவானைக் கண்டு ஒருகணம் திகைத்தார்கள். கரங்களைக் குறுக்கே நீட்டி உடன் வந்த வீரர் இருவரையும் நடுவிலிருந்த வீரன் தடுத்தான்.

"வீரர்களே, இவன் யாங்சின். இடைப்பாடி



நாட்டுக் கோட்டையி லிருந்து எப்படியோ தப்பி இங்கு வந்திருக்கி றான். மிகவும் அபாய மானவன். முடிந்தால் அவனை உயிருடன் பிடிக்கலாம். இல் லையெனில் கொன்று விடத் தயங்க வேண்டாம்" என்று மற்ற இரு வீரர்களை எச்சரித்த அந்த வீரனின் விழிகள் யுவானின் மஞ்சள் முகத்தையும் கழுத் திலிருந்து தொங்கிய அந்தப் பதக்கத்தையும் வெறித்தன.

அடுத்து அந்த வீரர்கள் வாட்களை நீட்டிய படி ஒவ்வொரு அடியாக யுவானை நெருங்க முற்பட்டு சற்று அருகில் வந்ததும் வேகமாகப் பாயவும் செய்தார்கள். சரேலென்று சுழன்று, பக்கவாட்டில் யுவான் ஒதுங்கி விட்டதால், பாய்ந்த வேகத்தில் அறைக்குள் நுழைந்து விட்ட வீரர்கள் மீண்டும் யுவானை நோக்கித் திரும்பவும், யுவானுடைய தோளின் பின்புற மிருந்த அந்த சீனத்துவாள் அவன் கரத்தில் தோன்றவும் சரியாயிருந்தது.

மீண்டும் அலறுவதற்காக வாயைத் திறந்த பணிப்பெண்கள் யுவானின் இடது கரம் உயர்ந்து தங்களை நோக்கி நீண்டு எச்சரித்த தால் திறந்த வாய் திறந்தபடியே நின்று விட் டனர். எதிரில் நடப்பவற்றை, இளவரசி ஒன்றும் விளங்காமல் திகைப்புடன் வெறித்துக் கொண்டிருக்க, போசள வீரர் மூவரும் யுவானை நோக்கிப் பாய்ந்து விட் டார்கள். இம்முறை யுவான் நின்ற இடத்திலிருந்து விலக முயற்சி செய்யவில்லை. அவன் வாள் பிடித்த




துரோக
விஷ்வக்சேனன்



அருள்வாக்கு

தமிழ்நாட்டில் ஒருத்தனுக்கு இலவசமாகச் சாப்பாடு போடுகிற இடத்துக்கு "சத்திரம்" என்று பேர் சொல்கிறோம். வடக்கே போனால், சத்திரம் என்று சொல்லமாட்டார்கள். "தரம் சாலா" என்பார்கள். "தர்ம சாலை" என்பதன் திரிபு அது. இங்கே தக்ஷிணத்தில் மட்டும் ஏன் சத்திரம் என்கிறார்கள்? சத்திரம் என்றால் என்ன? "ஸத்ரம்" என்பதுதான் 'சத்திரம்' என்றாயிருக்கிறது. ஸத்ரம் என்பது ஒரு வகை யாகத்தின் பெயர். அந்த யாகத்திற்கும் மற்ற யாகங்களுக்கும் என்ன வித்தியாசம் என்றால் மற்ற யாகங்களில் யஜமானன் என்கிற ஒருவன், தன் திரவியத்தைச் செலவு செய்து, தக்ஷிணை கொடுத்து, யாகம் பண்ணுகிறான்; ரித்விக்குகள் என்ற பிராம்மணர்கள் (புரோகிதர்கள்) யஜமானிடம் தக்ஷிணை வாங்கிக் கொண்டு அவனுக்காக யக்ஞத்தை நடத்தித் தருகிறார்கள். ஸத்ர யாகங்களில் மட்டும் யாகம் பண்ணும் அத்தனை பேருமே யஜமானர்கள். ஒரு யக்ஞத்தினால் லோக க்ஷேமமும், அதில் கலந்து கொள்கிற எல்லோருக்கும் சித்த சுத்தியும், அதைத் தரிசிப்பவர்களுக்குக் கூட நன்மையும் ஏற்படு கின்றனவென்றாலும், இதனால் விசேஷமாகப் புண்ணியம் அடைவது யஜமானன்தான். ஸத்ர யாகங்களில் ரித்விக்குகளே யஜமானர்களாக இருப்பதால், அத்தனை பேருக்கும் ஸமமான புண்ணியம். இந்த யக்ஞம் தன்னுடையது என்ற உரிமை எல்லோருக்கும் இருக்கிற ஸோஷலிஸ யக்ஞம் இது. இதை வைத்தே, எவரானாலும் உரிமையோடு வந்து, யஜமானர்கள் மாதிரி வயிறாரச் சாப்பிட்டுப் போகிற இடத்துக்கு "சத்திரம்" என்று பேர் வந்து விட்டது. இந்த வார்த்தையிலிருந்து, சத்திரத்தில் சாப்பிடுகிறவனை விடச் சாப்பாடு போடுகிறவன் தன்னை உயர்வாக நினைக்க வில்லை என்ற உயர்ந்த பண்பும் தெரிகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கரம் உயர்ந்து, ஏக காலத்தில் மூன்று வாட்களையும் தடுத்தது. கண்ணிமைக்கும் நேரமே அந்த வாட்களைத் தடுத்த யுவானின் வாள், சரேலென்று ஒருமுறை சுழன்று பக்க வாட்டில் ஒதுங்கிப் பின்புறமாகச் சென்று, மீண்டும் முன்னால் நீண்டு நடுவிலிருந்த வீரன் மார்பை ஊடுருவி மீண்டது. குருதியில் நனைந்து வெளியேறிய அந்த வாள், கூரையை நோக்கி உயர்ந்தது. அது மீண்டும் கீழிறங்கிய போது இடதுபுறத்திலிருந்த வீரனை எதிர் வீச்சாகத் தாக்கியது. அந்தத் தாக்குதலிலிருந்து தப்ப அந்த வீரன் வலது புறம் திரும்பவும், யுவானின் வாள் மீண்டும் பின்வாங்கி அவன் வலப்புறத்து விலாவில் பாய்ந்தது. இருவருக்குமிடையே சரேலென்று புகுந்த யுவானின் வலது கால் உயர்ந்து, நேர் பின்புறத்திற்கு வந்து விட்ட வீரனின் வாள் பிடித்த கரத்தை அதிவேகத்துடன் தாக்கியது. அந்த வீரனின் வாள் அவன் கரத்திலிருந்து மேல் நோக்கிப் பறந்து மேற்கூரையில் செருகி நின்றது!

சண்டை துவங்கிய இரண்டு மூன்று கணங்களுக்குள் இருவரை வீழ்த்தி விட்டு தன்னுடைய வாளையும் பறக்க விட்டு விட்டவனை திக்பிரமையுடன் பார்த்த அந்த வீரன், சட்டென்று திரும்பி பின்புற வாயிலை நோக்கி ஓட ஆரம்பித்தான். பின்புறத்து வாயிலில் நின்று, நடந்த சிறு சண்டையையும், யுவானின் சினத்துப் போர் முறையையும் ரசித்துக் கொண்டிருந்த மருத்துவர், எஞ்சிய வீரன் தானிருந்த வாயிலை நோக்கி ஓடி வருவதைக் கண்டதும் வழி விட்டு சற்று ஒதுங்கினார். ஆனால் அந்த வீரன் அவரைக் கடக்கு முன்பு, அவர் கரம் அந்த வீரனின் பிடரியில் பதிந்தது. அந்த வீரன் ஒரு துள்ளலுடன் குப்புறத் தரையில் விழுந்து உருண்டான். விழிகள் குடிலின் பின்புறத்து இருளில் வெறித்திருக்க, அதன் பிறகு அவனிடம் அசைவேதும் தெரியவில்லை.

மருத்துவர் அப்படியே திரும்பி தோட்டத்தின் இருளை நோக்கி இருமுறை கரங்களைத் தட்டினார். சற்று நேரத்தில் இருளிலிருந்து மருத்துவரின் சீடர்கள் இருவர் வந்தனர். கீழே கிடந்தவனைச் சுட்டிக்காட்டிய மருத்துவர், "இவனை நமது இல்லத்திற்குச் சற்றுத் தள்ளி ஓரமாகக் கிடத்தி விடுங்கள். இவன் உயிருடன் தானிருக்கிறான். ஆனால் எதற்கும் பயனற்றவனாகி விட்டான். உள்ளே கிடப்பவர்களை அப்புறப்படுத்தி தோட்டத்தில் புதைத்து விடுங்கள்" என்றார்.

பணிப்பெண்களை நோக்கித் திரும்பியவர், "நீங்கள் இளவரசியை வேறு அறைக்கு அழைத்துச் சென்று, அவருக்காகத் தயாரித்து வைத்திருக்கும் மூலிகை கலந்த உணவை அளித்து விட்டு, மீண்டும் முன்னறைக்கு அழைத்து வாருங்கள். ஒரு நாழிகையில் அவர் பலவீனம் பறந்து விடும். யுவான், நீ என்னுடன் வா. முன்னறைக்குச் சென்று பேசலாம்" என்றார். அவர் உத்தரவுகள் மளமளவென்று நிறைவேறத் தொடங்கின.

R.C.M. ENTERPRISES, KARUR.

NOVEL SCHEME FOR TEXTILES.

தொடர்ந்து 7 ஆண்டுகளுக்கு பயன்தரும் "புதுமைத் திட்டம்"
இத்திட்டத்தில் நீங்கள் ஒரே ஒருமுறை செலுத்தும் துகை ரூ. 1000/-

1. நீங்கள் செலுத்திய துகை 84 மாதங்கள் (7 ஆண்டுகள்) நிறைவு பெற்றவுடன் நீங்கள் நேரடியாக கரூர் கிளை "CITY UNION BANK" -ல் திரும்பப் பெற்றுக் கொள்ளும் வகையில் ரூ. 1009 /- க்கான 'CUB' -யின் "வாமன விஸ்வரூபா டெபாசிட்" சர்டிபிகேட் உங்கள் பெயரிலேயே வாங்கி அனுப்பி வைக்கப்படும்.
2. மேலும், நீங்கள் பணம் செலுத்திய முதலாண்டு முடிவிலிருந்து, ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் ரூ. 330/- மதிப்பிற்கான கீழ்கண்ட பொருட்களை எங்கள் செலவில் உங்களுக்கு நேரடியாக பதிவுத்தபாலில் அல்லது கூரியர் சர்வீஸ் மூலம் அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு ஆண்டுக்கு ஒருமுறை வீதம் ஏழு ஆண்டுகளுக்கு ஏழு முறை அனுப்பி வைக்கப்படும். இதற்கான அளவு SIZE மற்றும் விலைப்பட்டியல் மார்க்கெட் விலையை அனுசரித்து அவ்வப்பொழுது அனுப்பி வைக்கப்படும்.

பொருட்களின் விபரம்

1. டர்க்கி டவல்ஸ்	5. "லில்லி" உள்பாவாடைகள்
2. பாத்திங் டவல்ஸ்	6. நைட்டீஸ்
3. தலையணை உறை (Pillow Covers)	7. லுங்கிகள் (கைலிகள்)
4. PRINTED BED SPREAD (படுக்கை விரிப்பு)	

3. இந்த ஏழு ஆண்டுகளில் நீங்கள் பெற்றுக் கொள்ளும் பரிசப் பொருட் களின் மதிப்புத் தொகை ருபாய். 2310/- . (330 x 7) இத்துடன் எங்கள் நிறுவனம் ஏழு ஆண்டுகள் நிறைவு பெற்றவுடன் உங்களுக்கு ரொக்கமாக திரும்பச் செலுத்தும் தொகை ருபாய் 700/-

ஆக மொத்தம் : பரிச பொருட்கள்	ரூ.	2310/-
CUB -ன் VVD சர்டிபிகேட்	ரூ.	1009/-
ரொக்கமாக திரும்பப் பெறும் துகை	ரூ.	700/-
		4019/-

பங்கு கொள்வீர்! பயன் பெறுவீர்!

இத்திட்டத்திற்காக பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

R.C.M. ENTERPRISES
26, பிரதட்சணம் ரோடு, A-பிளாட், கரூர் - 639 002.

Advisers to
The Scheme
M/s. P.R.C. GARMENTS
Karur - 639 002. Ph : 21946

குறிப்பு : 1. இத்திட்டத்தில் இந்தியாவில் உள்ள அனைவரும் பங்கு கொள்ளலாம்.

2. இத்திட்டத்தில் சேர விண்ணப்ப படிவம் ஏதும் தேவையில்லை. தங்களின் D.D. (OR) M.O. கிடைக்கப் பெற்றவுடன் வங்கியில் செலுத்தி பெறப்பட்ட VVD (வாமன விஸ்வரூபா டெபாசிட்) CERTFICATE - க்கான விண்ணப்ப படிவம் அனுப்பி வைக்கப்படும்.

முன்னறைக்கு வந்து சேர்ந்ததும் மருத்துவரின் பார்வை யுவானை ஒருமுறை அளவியது.

"என்ன மருத்துவரே, அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்றான் யுவான்.

"யுவான், உன் தந்தையின் சாயலும் நடையும் அப்படியே உன்னிடமிருக்கின்றன. ஆனால் அவரிடமில்லாதது ஒன்றும் சேர்ந்திருக்கிறது!"

"என்ன அது?"

"வேகமும் படபடப்பும் உன்னிடம் தெரிகிறது. மலையே பெயர்ந்தாலும் யாங்சின் பரம நிதானமாகத்தான் செயல்படுவார்."

"மருத்துவரே! சேமகேசி போசன வீரர்களிடம் கூறியதைக் கேட்டபின்பு நான் எத்தனை நேரம் பொறுத்திருக்க முடியும்? பாண்டிய இளவலுக்கும் படைத்தலைவருக்கும் செய்தி கூற வேண்டாமா?" என்றான் யுவான் சற்று வேகத்துடன்.

மருத்துவர் மென்ன நகைத்தார்.

"ஏன் நகைக்கிறீர்?" யுவானின் கேள்வியில் அதே வேகமிருந்தது.

"யுவான்! பாண்டியருக்கு நீ செய்தி அறிவித்துத்தான் அவர்கள் நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. இளவரசியாரும் அந்தப் போலிக் காங்கேயனும் உத்தமபாளையத்திலிருந்து மறைந்து விட்டார்கள் என்றதும் உன்னை படைத் தலைவர் அனுப்பி வைத்திருப்பது பாதுகாப்புக்காகத்தான். அதன் பிறகு உன்னிடமிருந்து வரும் செய்திக்காகக் கையைக் கட்டிக் கொண்டு காத்திருப்பார் என்று எண்ணுகிறாயா? அல்லது கொங்கு நாட்டு மக்கள் தங்கள் இளவரசியைக் காக்கத் திறனற்றவர்கள் என்று எண்ணுகிறாயா?" - மருத்துவரின் கேள்விகள் சரமாரியாக வந்தன.

அவரது கேள்விகளில் உண்மை நிரம்பிக் கிடந்ததை உணர்ந்த யுவான் மௌனம் சாதித்தான்.

"யுவான், கொங்கு நாட்டு மக்கள் படைபலத்தில் குறைந்தவர்களே தவிர, கோழைகளல்ல. இருபத்து நான்கு உபநாடுகளிலும் கொங்கு மண்ணை போசனரிடமிருந்து விடுவிக்கத் துடிக்கும் வீரர்கள் இருக்கிறார்கள். தலைமை தாங்கி வழி நடத்த சோழ மன்னரோ, பாண்டியரோ முன்வர வேண்டும். அவ்வளவு தான்."

அவர் கூறியதன் பொருள் சித்தத்தில் உறைக்கவே சட்டென்று நிமிர்ந்தான் யுவான்.

"அப்படியானால்..."

"ஆம் யுவான். முப்பதாயிரம் வீரர்களைக் கொண்ட படை கொங்கு நாட்டின் முக்கிய இடங்களிலும் கோட்டைகளிலும் காத்துக் கிடக்கிறது. பாதிப் பேர் மலைகளிலும் வனங்களிலுமிருக்கிறார்கள். காலை முதல் நீ இந்த இல்லத்தின் வாசலில் கண்ட மக்கள் கூட்டத்தில் பாதிப் பேர் பல இடங்களிலிருந்து நிலைமையை அறிவிக்க வந்தவர்கள். தானும் என்

சீடர்களை மூலிகைகள் பறித்து வர வெவ்வேறு இடங்களுக்கு அனுப்புவதுண்டு" - மருத்துவரின் வார்த்தைகளைத் தொடர்ந்து ஒரு முறுவலும் அவர் முகத்தில் படர்ந்தது.

அர்த்தபுஷ்டியுடன் அவரது முகத்தில் படர்ந்த முறுவலைக் கவனித்த யுவானின் மனத்தில் சந்தேகம் பரவியது.

அவன் சந்தேகத்தை யூகித்து விட்ட மருத்துவர் பலமாக நகைத்தபடியே, "நீ சந்தேகிப்பது போல் இந்தப் படையின் தலைவன் நானல்ல யுவான். இவர்களைத் தொலைதூரத்திலிருந்து இயக்குபவர் ஒருவர் இருக்கிறார். அவர் கட்டளைகளை நிறைவேற்ற வீரர் தலைவன் ஒருவனுமிருக்கிறான். என் கடமை வெறும் செய்திகளை அனுப்புவது மட்டுமே" என்றார்.

"யார் உங்களை இயக்குபவர்?" யுவானின் கேள்வியில் இன்னும் சந்தேகம் ஒலித்தது.

மருத்துவரின் முகத்தில் விஷமம் சொட்டியது. "படைத் தலைவர் கிருஷ்ணமல்லர். பாண்டிய நாட்டில் படைகளைத் திரட்ட தேவைப்பட்ட அவகாசத்தில் இங்கும் ஒரு படையை உருவாக்கியிருக்கிறார். போதாக்குறைக்கு தஞ்சைத் துறவியாரும் ஏராளமான சோழ வீரர்களை அனுப்பி வைத்திருக்கிறார். இந்த வீரர்களுக்குத் தலைமைதாங்குபவன்..." என்று சற்று நிறுத்திய மருத்துவர் "சூரிய காங்கேயன்" என்றார்.

யுவானின் சிறிய மஞ்சள் விழிகள் வியப்பில் விரிந்தன.

"ஆம் யுவான். சூரிய காங்கேயன், கொங்கு மன்னரின் மெய்க்காவலன். மன்னரின் ஓலையுடன் பாண்டியர் படைத்தலைவரிடம் சென்ற போது, அவன் வழிமறிக்கப்பட்டு, அந்த சேமகேசியால் கத்தியால் குத்தப்பட்டு காவிரியில் எறியப்பட்டது என்னவோ உண்மைதான். காவிரியின் சுழலில் காயங்களுடன் விழுந்தவன் மடிந்து விட்டதாகவே சேமகேசி எண்ணினான். ஆனால் சூரிய காங்கேயன் காவிரியின் மீன்களுக்கும் நீந்தக் கற்றுக் கொடுப்பவன்! காயங்களுடன் கரையேறியவனை என் சீடர்கள் என்னிடம் சேர்த்தார்கள். ஆண்டவன் அருளினாலும், எனக்குக் கொஞ்சம் மருத்துவம் தெரியுமென்பதாலும் அவன் உயிர் பிழைத்து விடுதலைப் படையின் தலைவனாக உலவுகிறான்" என்றார் மருத்துவர்.

உள்ளறையின் வாயிலிலிருந்து இளவரசியின் குரல் வியப்புடன் ஒலித்தது : "அப்படியானால் சூரிய காங்கேயன் இறக்கவில்லையா? இப்போது எங்கிருக்கிறார்?"

இளவரசியின் மலர்விழி கள் முழுவதுமாக மலர்ந்து வியப்பை வெளிப்படுத்தின. மருத்துவர் "உண்மைதான் இளவரசி, காங்கேயன் உயிருடன் தான் இருக்கிறான். அது மட்டுமல்ல. நாளை உங்களை தஞ்சைக்கு துறவியாரிடம் அழைத்துச் செல்லப் போவதும் அவன்தான்" என்றார்.

"என்ன? என் தந்தையைக் காணாமல் நான் நாளை தஞ்சை செல்ல வேண்டுமா?" - இளவரசியின் குரலில் ஏக்கமும் கோபமும் கலந்து ஒலித்தன. அவள் விழிகள் பரிதாபத்துடன் மருத்துவரை நோக்கின.

மருத்துவரின் குரல் திடமாக ஒலித்தது. "ஆம் இளவரசி, போர் துவங்க இன்னும் நான்கு தினங்களே இருக்கின்றன. அதற்குள் தங்களைப் பாதுகாப்புடன் சோழ நாட்டுக்கு அனுப்பி விட வேண்டும். இது கிருஷ்ணமல்லரின் உத்தரவு."

கொங்குநாட்டிற்கு மட்டுமின்றி தமிழகத்தின் விடுதலைக்குமான முதல் போர் அறிவிப்பை சர்வசாதாரணமாக வெளியிட்ட மருத்துவர், மேற்கொண்டு ஏதும் கூறாமல் அறையின் மூலைக்குச் சென்று ஓலைகளை எடுத்துப் பரபரவென்று ஏதோ எழுதத் துவங்கினார்.

ஓலைகளை எழுதி முடித்தபின் யுவானை நெருங்கியவர், "யுவான், சாளுக்கிய சேமகேசி கண்ணனூர் சென்று, சிங்கணனிடம் உத்தரவு பெற்ற பின்புதான் சோழ நாட்டிலிருக்கும் போசள வீரர்களைத் திரட்டிக் கொண்டு உத்தமபாளையம் செல்ல முடியும். நீ அதற்குள் தஞ்சைத் துறவியாரிடம் இந்த ஓலைகளைச் சேர்ப்பித்து விடு" என்றார்.

'மருத்துவர் லேசுப்பட்டவரல்ல' என்று எண்ணியபடியே ஓலைகளை வாங்கி மேலும் கீழுமாகப் புரட்டிய யுவான், "மருத்துவரே, என்ன எழுத்து இது? ஒன்றும் புரியவில்லையே" என்றான்.

மருத்துவரின் பதில் உடனே வந்தது. "மருத்துவர்களின் எழுத்து எந்தக் காலத்திலும் இப்படித்தானிருக்கும். உனக்குப் புரியாது. வேண்டியவர்களுக்குத்தான் அது புரியும். நீ புறப்படு."

சற்றுத் தயங்கிய யுவான், "என் தந்தை?" என்றான் சற்று சலனப்பட்ட குரலில்.

"யுவான், யாங்சின்னைப் பற்றி நீ கவலை கொள்ள வேண்டாம். அவருக்கு யார் உதவியும் தேவையில்லை. இந்தப் போர் முடியும் போது நீ மீண்டும் அவரைக் காணலாம். அதுவரையில் சற்றுப் பொறுத்திரு" என்றார் மருத்துவர்.

மருத்துவர் கூறியது எத்தனை உண்மையென்பதை நிரூபித்துக் கொண்டிருந்தார் யாங்சின், இடைப்பாடி நாட்டின் கோட்டையில்.

(தொடரும்)

● நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது எளிது. ஆனால் உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பது அரிது.

— கெதே; தகவல் : க. மாரியப்பன்

ஆன்லைன் இருக்க கவலை எதற்கு?

''அடடே, வாங்கோ அத்தை, இப்பத்தான் வழி தெரிஞ்சுதா எங்காத்துக்கு வர்றதுக்கு?''

''அப்படியில்லடிம்மா... நேக்கு எங்க நேரம் ஒழியறது... உஸ்... அது சரி, எங்க உன் ஆத்துக்காரன், ஞாயித்துக்கிழமை கூட ஆத்துல தங்காம பொம்மனாட்டிய தனியா விட்டுட்டுப் போயிருக்கான்?''




''அப்படியெல்லாம் இல்ல அத்தை. நான்தான் அவரை Market-க்கு அனுப்பியிருக்கேன்.''

''உன் பேச்சை தட்டறது இல்லேன்னு சொல்லு. ஆமா, நீங்க ஏதோ : பைனான்ஸ் கம்பெனியில Deposit பண்ணியிருக்கேளாமே? பார்த்துடிம்மா... போன வாரம் கூட ஒரு பத்திரிக்கையில தாறுமாறா எழுதியிருக்கான்.''

''பயப்படாதீங்க அத்தை, நாங்க முதலீடு பண்ணியிருக்கிறது Online Financial Services-ல. இந்த கம்பெனிக்கு CARE 'A' (FD) ரேட்டிங் இருக்கிறதால நம்மோட பணத்துக்கு நல்ல பாதுகாப்பு!''

''என்னமோடிம்மா, இப்பல்லாம் சில கம்பெனிக்காரா போட்டி போட்டுண்டு ஊக்கத் தொகை, அதிக வட்டித் தொகைன்னு விளம்பரம் கொடுத்து கலக்கிண்டு இருக்கா. எதை நம்பறதுன்னே புரியலை!''



''அதை பார்த்தப்புறம்தான் நானும், அவரும் Online-ல Deposit பண்ணனும்னு முடிவு பண்ணதே. ஏன்னா, இவாளோட வட்டி விகிதம் RBI-யோட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. அதனால கவலை... போயே போச்!''

''அது மட்டுமில்ல அத்தை, நம்ம சௌகரியத்துக்கு ஏத்த மாதிரி டெபாசிட் முறைகள் இருக்கு. கரெக்டா 'டாண்ணு' வட்டி வந்துடறது. நன்னா Service பண்றா.''

சொல்ல மறந்துட்டேனே... சிங்கப்பூர்ல இருக்கிற எங்க அண்ணாவும், மன்னியும் Online-லதான் Deposit பண்ணியிருக்கா! Online மேல NRI's-க்கே நம்பிக்கையிருக்கு பாத்தேளா?''

''கேட்கறதுக்கு நல்லாதாண்டியிருக்கு. ஆனா Online-ஐ பத்தி எப்படி தெரிஞ்சுக்கறது? ஏன்னா அடுத்த மாசம் உங்க மாமா ரிடயர்டு ஆறார். வர்ற Pension பணத்தை Online-ல போடலாமேன்னுதான்.''

''அப்படின்னா அத்தை... நீங்க 8276768/8265301/8234072-ன்ற எண்ணுக்கு ஃபோன் பண்ணுங்க. இல்ல 8267008-ன்ற எண்ணுக்கு ஃபேக்ஸ் பண்ணுங்க. நீங்க கேட்கிற விவரங்கள் எல்லாம் உங்க ஆத்துக்கே வரும். அவங்களோட தனிப்பட்ட சேவை ஒண்ணு போதும். நான் உங்களுக்கு Online-ஐ சிபாரிசு பண்ண மாதிரி நீங்க வேற ஒருவருக்கு Online-ஐ சிபாரிசு செய்வீங்க.''


''சரிம்மா; நான் கிளம்பறேம்மா... போயி Online-னுக்கு ஃபோன் பண்ணனும்.''

CARE 'A' RATING

ஆன்லைன் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

248, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014.
தொ.பே.: 8276768/8265301/8234072. ஃபேக்ஸ்: 8267008

இந்த விளம்பரம் 'இந்து' நாளிதழில் 29.1.96 அன்று வெளிவந்த சட்ட பூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சியே. இந்த விளம்பர வாசகம் டெபாசிட் விண்ணப்பப் படிவத்திலும் அச்சிடப்பட்டுள்ளது. டெபாசிட் செய்வதற்கு முன் இதை கவனத்தில் கொள்வீர்.





1996 மார்ச் 24
யுவ பங்குனி 11
மலர் : 54
இதழ் : 34

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




வெடிக்கும் கலவரம்; வேதனை தரும் ஆட்சி!

தாம் ஒவ்வொரு நாளும் இருபது மணி நேரம் உழைப்பதாகக் கூறியிருக்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா. அந்த இருபது மணி நேரத்துள் அரை மணி நேரமாவது காவல் துறையினரின் அறிக்கைகளைக் கேட்டுப் பெறுவதற்காக அவர் செலவிடுகிறாரா என்பதே சந்தேகமாயிருக்கிறது.

அத்தகைய வழக்கத்தை அவர் கைக் கொண்டிருந்தால் காமராஜர் மாவட்டத்தில் மாபெரும் கலவரங்கள் வெடித்து, சோகம் சூழ்ந்திருக்காது.

முதல்வருக்கு தினம் தினம் அறிக்கை தரவேண்டும் என்ற கட்டாயத்தினால் காவல் துறையின் ரகசிய போலீஸ் பிரிவு, மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டிருக்கும். தேவேந்திரகுல வேளாளர் ஊர்வலத்துக்கு அனுமதி தரப்பட்டுள்ளதும் அவ்வூர்வலம் கடக்கும் பாதையில் தேவர் சிலை இருப்பதும் முதல்வர் மற்றும் உயர் போலீஸ் அதிகாரிகளின் கவனத்துக்கு வந்திருக்கும். ஊர்வலத்தின் பாதையே மாற்றப்பட்டிருக்கும். அவ்வாறு செய்வதற்கான காலம் கடந்து போயிருக்குமாயின், சிலை உள்ள பகுதியில் கூடுதல் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்.

ஆனால், சட்டம் ஒழுங்கு பராமரிப்பின் முதல் படியான தடுப்பு நடவடிக்கைகளில் தமிழக




அரசு பரிதாபகரமாகத் தவறியிருக்கிறது. கலவரம் வெடித்து, அப்பாவி மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் சேதம் விளைந்த பிறகே விழித்துக் கொண்டிருக்கிறது. இப்போது, கலவரங்களைக் கடுமையாக ஒடுக்கும்படி காவல் துறைக்கு உத்தரவிடுகிறார் முதல்வர். உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கும் உடைமைகளிழந்தவர்களுக்கும் உடனடி நஷ்டஈடு அறிவித்திருக்கிறார்.

இதனால் கலவரங்கள் தாற்காலிகமாக அடங்கலாம்; மக்கள் தற்சமயத்துக்குப் பண உதவியால் ஆறுதல் பெறலாம். ஆனால், காவல் துறையினரின் ஒடுக்குமுறைகள் காரணமாக, ஜாதிக் கலவரம் மீண்டும் முன்னிலும் கோரமாகத் தலைகாட்டும். அதுவும் தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில், அரசியல் தூண்டுதல்களின் உதவியுடன் அவை ஓவர்டைம் வேலை பார்க்கும்.

தேவேந்திர குல வேளாளர் அமைப்பின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, தமது அமைப்பினர் ஊர்வலம் சென்ற போது தேவர் சிலைக்கு எவ்வித சேதமும் விளைவிக்கவில்லை என்றும் தங்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்தவே எதிரிகள் செயல்பட்டிருப்பதாகவும் உறுதிபட கூறியிருக்கிறார்.

சிலைக்குக் கூடுதல் பாதுகாப்பு மட்டும் தரப்பட்டிருக்கு,"மயானால், இந்த அறிக்கைக்கு அவசியமும் இருந்திருக்காது; அதை ஆராய்ந்து, மெய்யா? பொய்யா? என்று விவாதிக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டிருக்காது.

'ஜாதிக் கொடுமைகள் வேண்டாம்!' என்று நம் நாட்டில் இலட்சியப் பாதைகள் வகுக்கப்பட்டன. அந்த உயர்ந்த லட்சியங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இடஒதுக்கீடு முறை



அரசியல் சாசனம் மூலம் உறுதிசெய்யப்பட்டது. ஆனால் அதையே பகடைக்காயாக்கி, இன்று அரசியல்வாதிகள் இந்த நாட்டின் எதிர்காலத்துடன் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். 'ஜாதிகள் வேண்டாம்' என்று சொல்ல எந்த அரசியல்வாதிக்கும் துணிவு இல்லை. இதனால் ஜாதிக் கொடுமைகள் புதிய வடிவங்கள் எடுத்துள்ளன. மிகுந்த தீர்க்க தரிசனமுடைய ஒரு தலைமை நாட்டுக்குக் கிடைக்கும் போது மட்டுமே இந்நிலையில் மாறுதல் வரும்.

ஆனால், இன்றைய நெருப்பான சூழலில், ஜாதிக் கலவரங்கள் நிகழக்கூடிய இடங்களையும் சந்தர்ப்பங்களையும் முன்கூட்டியே அறிந்து, தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கு, பெரிய அளவிலான தீர்க்கதரிசனம் தேவையில்லை. சம்பந்தப்பட்ட சங்கத் தலைவர்களையும், குறிப்பிட்ட பகுதிகளின் அதிகாரிகளையும் அவ்வப்போது அழைத்துப் பேசி, பிரச்னைகளை அறியும் சராசரி ஆட்சிப் பொறுப்பை நிறைவேற்றி வந்தாலே போதுமானது.

ஆனால், தமிழக முதல்வரால் அதைக்கூட சரியாக நிறைவேற்ற முடியவில்லை என்பதையே சமீபத்திய கலவரங்கள் உணர்த்துகின்றன.

லஞ்ச ஊழலில் மிதந்து பணம் குவித்துள்ள ஆளும்கட்சி, நடக்கப் போகும் தேர்தலை பண பலத்தாலும் அரசு இயந்திர துஷ்பிரயோகத்தாலும் கேலிக்கூத்தாக்கிவிடும் என்கிற அச்சம் மட்டுமே இதுவரை இருந்தது. அதோடு 'தேர்தல் முடியும் வரை இங்கு சட்ட ஒழுங்கு நிலைமை கட்டுக்குள் இருக்குமா?' என்ற கவலையும் இப்போது சேர்ந்துள்ளது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, ஜெயலலிதா தலைமையிலான அரசைக் கலைத்து, ஜனாதிபதி ஆட்சிக்கு உத்தரவிட பிரதமர் இனியும் தயங்கக் கூடாது என்று மீண்டும் ஒருமுறை அடித்துச் சொல்ல வேண்டியிருக்கிறது!

"ஒரு நாள் ஆட்டம்!"

ஆய்ந்து ஓய்ந்து அடங்கிப் போய்க் கிடக்கும் உலகக் கோப்பை உற்சாகம் இன்னொரு கோப்பையை நமக்கு நினைவூட்டுகிறது- சேப்பாக்கத்தில் நியூஜிலாந்து Vs ஆஸ்திரேலியா பந்தயத்தின்போது சுறுசுறுப்பாக விற்பனையான கோக கோலா பேப்பர் கோப்பை! முதுகில் ஏதோ ராணுவ உபகரணம் போன்ற ஒரு கெட் அப்புடன் கூட்டத்திடையே முண்டியடித்து, தாமும் நொந்துபோய் பிறரையும் நோகடித்துக் கொண்டிருந்தார் விற்பனையாளர். அவரிடம் ஏழு ரூபாய் கொடுத்துவிட்டு ஒரு காகிதக் கோப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். 'ஃபிஸ்' என்று முதுகு மிஷினில் அழுத்தம் கொடுத்து அவர் கறுப்பு திரவத்தை நம் கோப்பையில் வெளியேற்றுவார். அடுத்த நபரின் கோப்பையை அவர் நிரப்புவதற்குள் நம்முடைய கோப்பையில் நுரையடங்கி, திரவம் ஆழத்துக்குப் போய் விடும்! மீண்டும் ஒரு ரவுண்ட் ஃபிஸ்.. மீண்டும் நுரையடங்கிப் போகும்! மீண்டும் நிரப்புவார் என்று பார்த்தால்.. ஊஹூம்!

கோக கோலாவைத் தவிர வேறு பல ஸ்ட்ராங்கான ஐட்டங்களும் அன்று சேப்பாக் சிதம்பரம் ஸ்டேடியத்தில் ஆறாக ஓடின. பாவம்! விஜய் மல்யாவும் ராமசாமி உடையாரும் மாய்ந்து மாய்ந்து டி.வி.யில் விளம்பரம் செய்து என்ன பயன்? அத்தனையும் அயல்நாட்டுச் சரக்கு! 'கோக கோலா, ஃபான்டா டின்களைத்தானே உள்ளே கொண்டு வரத் தடை?' என்று டின் டின்னாக அயல்நாட்டு பீருடன் வந்திருந்தார்கள் ரசிகர்கள். ஆரம்பத்தில் கொஞ்சம் லஜ்ஜையுடன் காகிதம் சுற்றி மறைத்துக் குடித்தவர்களெல்லாம்கூட, போகப் போக ரொம்ப சகஜமாகி பேப்பரைத் தூக்கிப் போட்டு விட்டார்கள்..!

மது தாராளமாக ஓடினாலும்

• ஹாரிஸ்





• மார்க் வாக்

நிலைமை கட்டுக்குள்ளேயே இருந்தது. ஓரிரு குடிமகன்கள் ஓவராகிப் போய் மைதானத்துக்குள் பாட்டில், காகித ராக்கெட் என்று வீசியபோது பிறரால் 'தடுத்தாட்கொள்ளப்பட்டனர்'! இவர்களும் 'ஒரு நாள் ஆட்டக்காரர்கள்' தானா அல்லது 'டெஸ்ட் மாட்ச்'காரர்களா என்பது தெரியவில்லை!

காவல் துறையின் பணியைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். வெயில் வேளையென்றும் பாராமல் பொறுமையாக வழி காட்டி, போக்குவரத்தை நெறிப்படுத்தியதோடு, ஸ்டேடியம் உள்ளேயும் கசமுசாக்களை முளையிலேயே மத்தியஸ்தம் செய்து அசத்திவிட்டனர்! மிரட்டல்களுக்கும் கறுகறுப்பான மாமூல் வசூலுக்கும் மட்டுமே பழகிய நமக்கு மாறுபட்ட அனுபவம்!

பக்கத்து இருக்கையின் ஏழு வயதுச் சிறுவனிடம் "நீ வெங்கட் விளையாடிப் பார்த்திருக்கியா...?" என்று கேட்டார் ஒரு பெரியவர்.

"அவர் அம்பயராச்சே..."

என்று இலேசாகக் குழம்பிய பொடியனிடம் வெங்கட்ராகவனின் வாழ்க்கை வரலாற்றையே 'படித்து விட்டார்' அவர்.

இதொன்றும் அறியாமல், ஸ்குவேர் லெக்கில் வெங்கட், வேணுகோபால கண்ணன்போல் கால்கள் பின்ன நின்று கடமையாற்றிக் கொண்டிருந்தார். பசுமையான நினைவுகளில் மூழ்க அவருக்கு ஏது நேரம்!

விளக்குகளை நாலரை மணிக்கே 'ஆன்' செய்து விட்டார்கள். பொழுது சாயச் சாய, சுற்றிலும் இருட்டு சூழ்ந்து, மைதானத்தில் மட்டுமே வெள்ளை வெளிச்சம் தெரிந்தது. ஏதோ சயன்ஸ் ஃபிக்ஷன் சினிமா போன்ற effect-ஐ ஏற்படுத்தியது. ஒரு சில வௌவால்களும் காக்கைகளும், மட்டும் குழம்பிப் போய் திசை புரியாது பறப்பதைப் பார்க்க கொஞ்சம் பரிதாபமாகவே இருந்தது.

'ஃப்ரன்ட் லைன்' இதழின் விளம்பர பலூனை ஐந்து மணி சுமாருக்கு இறக்கி விட்டார்கள். பிறகு என்ன நினைத்துக் கொண்டார்களோ... மீண்டும் உயர்த்திக் காட்டினார்கள். பிலிப்ஸ் தயவில் வேறு பல பலூன்களுக்கும் நல்ல வெளிச்சம் கிடைத்தது.

'ஒரு நாள் பந்தயத்துக்கே இலக்கணம் இது' என்று சொல்லும் அளவுக்கு உயிரைக் கொடுத்த நியூஜிலாந்தின் ஆட்டமும், மூச்சைப் பிடித்து அதை விஞ்சிய ஆஸ்திரேலியாவின் முயற்சியும் சென்னை ரசிகர்களுக்குச் சரியான விருந்துதான்.

இருந்தாலும் அவரவரும் தங்களுக்குள்ளேயே சிறிய புதிய விளையாட்டுகளை உருவாக்கி அவ்வப் போது ஆடிக் கொண்டிருந்ததையும் காண முடிந்தது. உதாரணம்: மேல் பகுதி காலரியிலிருந்து முறுக்குகளைக் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டு அசைக்க, அதைக் கீழ்ப் பகுதி ரசிகர்கள் தட்டிப் பறித்துத் தின்னும் ஆட்டம்!



• வெங்கட் ராகவன்

இந்தியா ஆடியிருந்தால் இதற்கெல்லாம் நிச்சயமாக நேரம் இருந்திருக்காது... விட்ட குறை தொட்ட குறையாக அவ்வப் போது "பாகிஸ்தான்... டவுன் டவுன்!" என்று கோஷம் எழுப்பி. பலர் மலிவான மகிழ்ச்சி தேடிக் கொண்டது தான் உறுத்தல்! தலையில் காவித் துணி கட்டிய இளைஞர்கள் நிறையப் பேர் கூட்டத்தில் இருந்ததே இதற்குக் காரணமா...? இந்திய அணியின்மேல் கொண்ட கோபத்தால் ஸ்ரீலங்காவை முழுசாக ஆடவிடாமல் செய்த கல்கத்தா ரசிகர்களை விட நம்மவர்கள் தேவலாம் என்கிறீர்களா? இதோடு, அதுவும் வெட்கக் கேட்டின் உச்சம்தான்!

- மலர்

படங்கள் : சாரி

ரேணுகாவுக்குத் தயக்கமோ, வெட்கமோ, பயமோ, மிரட்சியோ இருக்கவில்லை. 'ஆறு வருஷங்கள் நான் அரவிந்தைக் காதலித்திருக்கிறேன் தெரியுமா?' மிக இயல்பாகத்தான் சொன்னாள்.

நியாயமாக நான் அதிர்ந்து போய், இன்னது செய்வதென்று புரியாமல் தவித்து, இணறி, கோபத்தில் கரைந்து, காணாமல் போயிருக்க வேண்டும்.

ஆனால் அமைதியாக எழுந்து வெளியே போய் விட்டேன். உள்ளுக்குள் பிரஷர் ஏறிக் கொண்டிருந்தது. என் விரல்கள் நடுங்கத் தொடங்கின. உடல் முழுக்கப் பற்றவைத்தாற் போல் திருதிருவென எரிந்து கொண்டே கால் இழுத்த திசையில் நடந்து, துவண்டு போய் மறுபடி வீடு வருகையில் இரவு ஒன்பதாகி விட்டிருந்தது.

அரவிந்த் போய்விட்டிருந்தான். ரேணுகா வாசலில் காத்து இருந்தாள். என்னைப் பார்த்ததும் பதறி வந்து, "எங்கே போயிட்டீங்க?" என்றாள்.



எனக்கு மிகவும் பசித்தது.

"ஏதாவது சாப்பிட வெச்சிருக்கியா?" என்று கேட்டேன். தட்டைக் கொண்டு வந்து என் முன் வைத்து, சாதம் போட்டாள். சாப்பிட்டு ஆனதும் ஒரு பாக்கெட்டைப் பிரித்து, ஸ்வீட்டை எடுத்து நீட்டினாள். "அரவிந்த் வாங்கி வந்திருந்தான்."

நான் ஒரு கணம் அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு, சட்டென்று குனிந்து கொண்டேன்.

"ஸாரி. நான் அப்படி நடந்துண்டிருக்கக் கூடாதுதான். பேசிட்டே இருக்கும் போது நடுவுல எழுந்து போய்.... சே!"

சாப்பிட்டு முடித்துவிட்டு எழுந்து போய் படுத்தேன். பாத்திரங்களை ஒழித்துப்போட்டுவிட்டு, எச்சில் துடைத்து, முகம் கழுவி, ஹால் விளக்கை அணைத்துவிட்டு, என் அருகில் வந்தாள்.

பா. ராகவன்

"காதலிச்சது தப்பா? இல்லை, காதலிச்சேன்னு வெளிப் படையாகச் சொன்னது தப்பா?"

இரண்டுமே தப்பில்லைதான் என்று அப்போது எனக்குத் தோன்றியது.

ரேணுகா எழுந்து போய் ஜன்னலோரம் நின்று, வெளியே பார்த்தாள். அவள் கண்கள் கலங்கி இருந்தன. விசும்பல் சப்தம் லேசாகக் கேட்டது.

சில விஷயங்கள், நாம் விரும்பியோ விரும்பாமலோ அதன் பாட்டுக்கு நடந்து விடுகின்றன. பின்னால் நேரப் போகிறவைகளை முன் கூட்டித் தெரிந்து கொண்டா வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கிறோம்? அரவிந்தை அவள் காதலிக்கத் தொடங்கியது மிக தற்செயலாகத்தான். அணுகு முறையில் ஒரு மென்மை. புன்னகையில் ஒரு நளினம். தோற்றத்தில் ஒரு கம்பீரம். இசை தெரியும். சமையல் தெரியும். கூடுதல் தகுதியாகக் கொஞ்சம் பெண்சாயல். தெரியுமா? பெண் சாயல் கொண்ட ஆண்களைப் பெண்களுக்கு ரொம்பப் பிடிக்கும் என்று ரேணுகா சொன்னாள்.

"வீட்டில் சொல்ல எத்தனை பயந்தேன் தெரியுமா? ஒவ்வொரு முறையும் சொல்ல வாயெடுத்து, விழுங்கி விடுவேன். வாழ்க்கை ஏன் சினிமா போல் சுலபமாக இருக்கக் கூடாது என்று எத்தனை நாள் ஏங்கி இருக்கிறேன்!"

"சேர்ந்தாற்போல நாலைந்து வாக்கியம் பேசவே மாட்டியா?" என்று நான் அவளைச் சில தருணங்களில் கேட்டிருக்கிறேன். அன்று சேர்த்து வைத்துக் கொட்டித் தீர்த்தாள். அவன் கடை வைக்க நொய்டா போனது. அப்பா அவளுக்கு என்னைப் பேசி முடித்தது. பேசத் தயங்கி, மனசுக்குள் செத்தது. அவனுக்கு அலறி அடித்துக் கடிதம் போட்டது. வாழ்த்துக்களுடன் அவன் திருமணத்துக்கு வந்து சேர்ந்தது.

எனக்கு அழலாம் போலிருந்தது. இயல்பில் நான் எத்தனை மென்மையானவன் என்று லேசில் சொல்லிவிட முடியாது.



கனாக் கண்டேன் தோழி

சிக்கல்கள் அற்ற ஒரு சராசரி வாழ்க்கைக்காக யோக்கியமாக உழைக்கிறவன் நான். புரட்சிக்காரன் அல்ல. புதுமை விரும்பி அல்ல. தியாகி அல்ல. சாதாரணன். ரொம்ப சாதாரணன். இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?

கல்லூரி நாட்களிலிருந்து ஆசைகளைப் பட்டியல் போட்டு, அதற்கேற்ப என்னைத் தயார் செய்து கொண்டு வந்தேன். அந்தரங்கமாகப் பழக ஒரு பெண். கிடைத்தால் அது எப்பேர்ப்பட்ட கொடுப்பினை? பிரத்தியேகமான சந்தோஷங்கள். பரஸ்பர நட்பு. கொஞ்சம் கேலி. கொஞ்சம் ஜோலி. இங்கே சீண்டல். அங்கே தீண்டல். கைகோத்து நடக்கிற கம்பீரம் தரும் சந்தோஷம். எட்டிப் பார்க்கும் அண்டை வீட்டுக்காரர்களின் பொறாமை. சொந்தக்காரனின் பெருமை. சில வருஷங்களுக்குப் பின் ஒரு குழந்தை. ஒன்று போதும். ரேஷன் கார்டில் குடும்பத்தலைவன் என்ற பதவி. முடிந்தால் ஒரு சொந்த வீடு. என் கனவுகள் ரொம்ப யோக்கியமானவை. அவற்றை நனவாக்கச் செய்யும் முயற்சியில் நான் எடுத்து அடுக்கி வைக்கிற ஒவ்வொரு செங்கல்லுக்கும் நியாயமான விலை உண்டு.

ரேணுகா திடமாகத்தான் இருந்தாள். 'யாரோ சொல்லி, என்றோ தெரியப் போவதற்குப் பதில், நானே சொல்லி, இன்றே தெரிந்து விட்டதல்லவா? இனி உங்கள் பாடு' என்ற பாவனையில்.

நான் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். இருளிலும் சுடர் விடும் ரேணுகா. அழகிய ராட்சஸி. ஆறு வருஷம் காதலித்து, சொல்ல பயந்தேன் என்று ச. சாதாரணமாகச் சொல்கிறாள். ஆனால், சினிமா போல் அல்லாமல், நிஜத்தில் அது கஷ்டம் தானோ என்று தோன்றியது.

காதல் எனக்கு அறிமுகமில்லாத விஷயம். கல்லூரி நாட்களில் ஆசை இருந்தது. யாரையாவது காதலிக்க வேண்டும் என்று. 'ஆசீர்வதிக்கப்பட்டவர்களுக்கும் சபிக்கப்பட்டவர்களுக்கும்தான் அது சாத்தியம்' என்று அப்போது ராஜகோபால் சொன்னான்.

ரேணுகா ஆசீர்வதிக்கப்பட்டவளா? சபிக்கப்பட்டவளா?

ஊரெல்லாம் சுற்றிவிட்டு, ஓட்டலுக்குத் திரும்பியபோது, ராஜகோபால் காத்து இருந்தான்.

"சரிதான். இடம் தெரியாமல் எங்கேயாவது பேய் முழி முழிச்சிட்டு நின்னுட்டிருக்கியோன்னு கவலைப்பட்டேன்."

"வந்து ரொம்ப நேரம் ஆச்சா?"

"உம்! ஒரு தரம் வந்து அரைமணி வெயிட் பண்ணிட்டு, திரும்பி வீட்டுக்குப் போயி பெண்டாட்டிக்கிட்ட சொல்லிட்டில்ல வரேன்!"

"என்ன சொல்லிட்டு?"

"நைட்டு வர லேட் ஆகும். சினிமாவுக்குப் போற பிளான் அப்படின்னு."

"சே, பாவம்டா உன் ஒய்ஃப். அவங்களையும் கூப்பிட்டு வர வேண்டியது தானே?"

"சரிதான். சீன் ரொம்ப எமோஷனலா இருந்தா அழ ஆரம்பிச்சுடுவா. வல்கரா இருந்தா, எழுந்து போயிடலாம்னுவா. போர் அடிச்சா என்னைத் திட்டுவா."

"அ, நல்ல கேரக்டர்!"

"உனக்கெப்படி வசதி? போகலாமில்லை?"

சாப்பிட்டு விட்டு, அறையைப் பூட்டிக் கொண்டு கிளம்பினோம். உடலூரார் தியேட்டரில் Fools die fast.

காதலனுக்காக, முதலாளியைக் கொலை செய்யவும் துணியும் பெண்ணைப் பற்றிய பழைய படம். கடவுளே! ஏன் எங்கு போனாலும் காதல், காதலாகவே இருக்கிறது? வாழ்க்கையில் ரசனைக்குரிய விஷயம் வேறு கிடையாதா?

பட்டாணி தின்பது. பட்டாம்பூச்சி பிடிப்பது. பஜன் கேட்பது, இஸ்திரி போடுவது. அலவன்ஸ் வாங்கிடுவது. அப்பளம் பொரிப்பது. கோலம் போடுவது...

அன்று மறுநாள் காலை ரேணுகா கோலம் போட்டுக் கொண்டிருந்த போதுதான் போய்க் கேட்டேன்.

"ஆறு வருஷம் அவனைக் காதலிச்சுட்டு, எப்படி என்னைக் கல்யாணம் பண்ணிட்டு, இப்படி இலக்கண சுத்தமான மனைவியாக இருக்கிறாய்?"

இடுப்பில் இழுத்துச் செருகியிருந்த புடைவையைத் தழைய விட்டுவிட்டு, நெற்றியைத் துடைத்தபடி உள்ளே வந்தாள்.

"அவனைக் கல்யாணம் பண்ணிக்கத்தான் நினைச்சேன். உங்களைத்தான் பண்ணிக்கணும்னு எனக்கு இருந்தால் என்ன பண்ண முடியும்?"

இது ஸ்ட்ரோக். காவஸ்கரின் ஸ்கொயர் லெக் ஷாட். க்ளீன் ஷாட். வெகு சுலபத்தில் என்னை மூன்றாம் மனிதனாக்கி விட்டாள். ஆனால் அவள் நேரிடையாகத்தான் சொல்கிறாள். உள் அர்த்தம் ஏதுமின்றி. பட்டாசு வெடிப்பது போல. அவள் இயல்பே அதுதான். அவள் தனித்துவமே அதுதான்.

ஆபீஸுக்குக் கிளம்பும் போது, "மத்தியானம் சாப்பிட வருவீங்களா?" என்றாள்.

யோசித்தேன். "இல்லை. இன்னிக்கு வர முடியாதுன்னு நினைக்கறேன். வெளியில் பார்த்துக்கறேன்" என்றேன்.

என் நடவடிக்கைகள் எனக்கே புதிதாக இருந்தன. அரவிந்த் சென்னையில்தான் இருக்கிறான். இன்றும் அவன் ரேணுகாவைப் பார்க்க வரக் கூடும். என்னைப் பற்றி விசாரிப்பான். நேற்று இரவு நடந்தவைகளை ரேணுகா விவரிப்பாளாயிருக்கும். என்னால் எப்படி இதையெல்லாம் வெகு சாதாரணமாக எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்க முடிகிறது? என் இனிய சுபாவத்தின் மென்மையே! இன்னும் என்னென்ன நடக்கச் செய்து வேடிக்கை பார்க்கப் போகிறாய்?

அலுவலகம் அலறிக் கொண்டிருந்தது. நாட்டில் மிக முக்கிய சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது. டெல்லியில், பம்பாயில், சவுக்கார் பேட்டையில் எல்லாம் பிள்ளையார் பால் குடித்திருக்கிறார். ஆவின் பால், எருமைப்பால் என்ற பேதம் இல்லாமல் கொடுப்பதைக் குடிப்பதாக ஃபேக்ஸ் தகவல்கள் சொல்கின்றன.

எனக்குச் சிரிப்பு வந்தது. போய் அட்டன்டென்ஸில் கையெழுத்துப் போட்டுவிட்டு, அஸைன்மென்ட்டைக் கேட்டுக் கொண்டு புறப்பட்டேன்.

புழுங்கி வடிந்த மனத்துடன் நாளெல்லாம் அலைந்து விட்டு இருட்டியதும் வீட்டுக்குப் போனேன்.

"இன்னிக்கு நம்ம வீட்டுப் பிள்ளையாரும் பால் குடிச்சார் தெரியுமா?"

ஓடி வந்து, விழி விரித்து விவரம் சொன்ன ரேணுகாவைப் புரிந்து கொள்வது மிகவும் சிரமம் என்று தோன்றியது. குழந்தை தானா? குழந்தை போல் இருக்க முயல்கிறாளா? ஆனால் குழந்தை ஆறு வருஷம் ஒருவனைக் காதலிக்குமா? பின், புருஷனிடம் அதை வெளிப்படையாகச் சொல்லுமா? அவன் உணர்வுகள் அதற்குப் புரியுமா? அல்லது, 'எனக்குப் புரியலை' என்று சொல்லாமல் சொல்வதா? ஏதாவது கேட்டால் பெங்களூரில் இதெல்லாம் சகஜம் என்று ஊர்ப் பெருமை சொல்வாளா? நிஜமாகவே இதெல்லாம் சகஜம்தானா? நான்தான் சரியில்லையா?

எனக்கு எதுவும் புரியவில்லை.

"மத்தியானம் அரவிந்த் வந்திருந்தான்."

பல்லைக் கடித்துக் கொண்டு, பேசாமல் இருந்தேன்.

"ரொம்ப வருத்தப்பட்டான் தெரியுமா? 'நான் வந்தது தப்பு ரேணுகா. பேசாமல் எங்கேயாவது காணாமல் போயிருக்கணும்'னு ஒரே புலம்பல். நான் உங்க கிட்ட அப்படி வெளிப்படையாகச் சொன்னது தப்பாம். 'சொல்லாமல் இருந்தாத்தான் தப்பு'ன்னு நான் சொன்னேன்."

"கல்யாணத்துக்கு முன்பே சொல்லாதது தான் தப்பு."


அவள் என்னை உற்றுப் பார்த்தாள். "இதையெல்லாம் பேச நம் சமூகம் நமக்கு இடம் கொடுத்திருக்குன்னு நினைக்கறீங்களா? மனசுக்குள் ஒரு நாளைக்கு நான் நூறு தரம் செத்துப் போறேன் தெரியுமா?"

இரயில் நிலையங்களைச் சுத்தமாகப் பராமரிக்கும் திட்டத்தின் அடிப்படையில் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன் பளிங்கு போல் காட்சியளிக்கிறது என்று பெருமைப் படுகிறது நிர்வாகம். இடித்துத் தள்ளப்பட்ட பழைய கட்டடப் பகுதிகளைப் பக்கத்திலுள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் கொட்டியதால் அங்கு நீர் தேங்கி நிற்பதுடன், டிக்கெட் முன் பதிவு அலுவலகத்தில் கழிக்கப்படும் காகித, கார்பன் பேப்பர் குப்பைகளைத் தொடர்ந்து அதில் கொட்டுவதால் அங்கு பெரிய பரப்பளவில் ஒரு கொசுப் பண்ணையே செழித்து வளர்கிறது என்கிறது மாநகராட்சி சுகாதார இலாகா!

— அ. ஷண்முகசுந்தரம்

KALKI SHOPPING PAGE

என்ன இருந்தாலும் "ராமசந்திரா" சுங்குடி புடைவை உடுத்திற சுகம் அலாதிதான் போ. தரம், டிசைன், மங்களகரம்... இன்னும் 'சொல்லிண்டே போகலாம்' பல பேர் வாங்குகிற காரணம் இப்பத்தான் புரியுது. நீயும் அங்கேதான் வாங்கியிருக்கிறே; பார்த்தாலே தெரியுதே கண்ணுக்கு லட்சணமா!



GRAND REDUCTION SALE

28.3.96 முதல் 3.4.96 வரை

7 நாட்கள் மட்டுமே (Seven Days Only)

No Lunch Break — Open on SUNDAY

Working Hours 9.00 A.M. to 9.00 P.M.

RAMACHANDRA SAREES

(மதுரை சுங்குடி புடவைகளின் உலகம்)

37-B Arya Gowder Road, Postal Colony Bus Stop,
West Mambalam, Madras - 33, Ph : 4896532
Bus Route : 12G, 11R, 11J, 49J, 5T, 49, 9A

எங்களிடம் பெங்கால் காட்டன், வெங்கடகிரி Bathik கோரா காட்டன் புடவைகளும் கிடைக்கும்

வழங்குவோர் : ராமச்சந்திரா சாரீஸ்,
20-B, பழைய குயவர் பாளையம் ரோடு, மதுரை - 9.

மணமக்கள் தேவை
இலவச சேவை

அனைத்து சமூகத்திலும், ஆயிரக்கணக்கான வரன்கள் பெற உடன் பதிவுசெய்ய தொடர்பு கொள்ளவும்.

BEST BRIDE & GROOM/BANK

H.O.: 3rd Floor, Shanthi Complex,
26, Ranganathan Street,
Madras - 600 017.
Phone : 4348560 4347025

B.O.: 13, College Road,
Nanganallur, Madras - 114.
7, Station Road, Tambaram
Sanatorium,
Madras - 600 047.
5, Second Main Road,
New Colony,
Chromepet,
Madras - 600 044.

மணமக்கள் தேவை
கம்ப்யூட்டர் ஜாதகம்

அனைத்துசமூகத்திலும், ஆயிரக்கணக்கான வரன்கள் பெற உடன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில் ஆங்கிலம், தமிழ்	ரூ. 50/-
எதிர்கால கணிப்புடன்	ரூ. 150/-
ஆண்டு பலன் :	ரூ. 50/-
கல்யாண பொருத்தம் :	ரூ. 50/-
NUMEROLOGY PREDICTIONS :	Rs. 50/-

CONSULT DIVINE ASTROLOGER
BRAHMASRI THETHIYUR S.V. SASTRY
WITH PRIOR APPOINTMENT.

ASTROLOGY SOFTWARE FOR SALE

ஸ்வயம்வராலயா

(GOVT. REGD)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 33. போன் : 425822, 4846427
7–ஏ, சாந்தி விஹார் காம்ப்ளக்ஸ், லஸ்,
சென்னை – 4. போன்:846278,
88, 1, 16th Cross, 6th Main, Malleswaram,
Bangalore - 560 055. Ph.:3340146

ஒரு ஆண்டு

1%

போனஸ்

எமது ஆவடி, வேலூர், பாண்டி கிளைகள் துவங்கி 1 ஆண்டு ஆனதை முன்னிட்டு 1.3.96 முதல் 30.4.96 வரை இந்தச் சலுகை!

2 ஆண்டிற்கு மேல்

2%

போனஸ்

ரூ.10,000/- 3 ஆண்டுக்கு செலுத்தி 22% வட்டி பிரதிமாதம் பெறுவீர்

ஒருமுறை ரூ.200/- மட்டும் முதலீடு செய்து 324 மாதங்களில் ரூ.60,000/- பெறுவீர்.

ரூ.5,000/-செலுத்தி 36 மாதங்களுக்கு பிறகு ரூ.9,070/- பெறுவீர்

நீங்கள் எந்த பொருள் ரூ.5,000/-க்கு வாங்கினால் ரூ.100/-மட்டும் ஒரு முறை டெபாசிட் செய்து 240 மாதங்களுக்கு பிறகு ரூ.6,400/-ஆக பெறுவீர்.

ரூ.1,000/- செலுத்தி 180 மாதங்களுக்கு பிறகு ரூ.17,600/- பெறுவீர்.

18% P.A. உடனடி வட்டி!

ரூ.10,000/-மும் அதற்கு மேலும் 1 ஆண்டுக்கு டெப்பாசிட் செய்து 1 ஆண்டு வட்டி உடனடியாக பெறுவீர்.

இன்று உங்கள் பணத்தை முதலீடு செய்து இரு மடங்காக 40 மாதங்களில் பெறுவீர்.

ஒரே ஒருமுறை ரூ.1000/- திருமாங்கல்ய திருமணத்திட்டத்தில் டெபாசிட் செய்து 240 மாதங்களில் கழித்து ரூ.64,000/- பெறலாம்.

ரூ.50,000/- 60 மாதங்கள் முடிந்தவுடன் ரூ.1,50,000/- பெறுங்கள். போனஸ் தனி

சசிநாத் சாஸ்வத நிதி லிமிடெட்

H.O.36, ரங்கநாதன் தெரு, சென்னை-17. Ph: 4348233, 4346786
B.O.35, M.C. ரோடு சென்னை-21. ● 205, N.M. ரோடு, ஆவடி, சென்னை-54. ● 34-C ரயில்வே ரோடு, காஞ்சிபுரம்-631 502. ● 56, கடப்பா டிரங்ரோடு, திருத்தணி-631 209. ● 38, ஆற்காடு சாலை, வேலூர்-632 004. ● 161 S.V. பட்டேல் தெரு, பாண்டி - 605 001.

மக்கள் சேவையில் 18 ஆண்டு

சசிநாத்துடன் இணைவோம் *சௌக்கியமாக வாழ்வோம்.*

சேவா தேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும் ● செவ்வாய் விடுமுறை.

சத்தியம் சீலம் நாணயம் தர்மம் இதுதான் சசிநாத் சத்தியம் சீலம் நாணயம் தர்மம் இதுதான் சசிநாத்

நான் அவனை நெருங்கி, தலையைக் கோதினேன். "படுத்துத் தூங்கு" என்றேன்.

மூக்கை உறிஞ்சியபடி, சுருண்டு படுத்துக் கொண்டான்.

"இதுக்கு மேல் தாங்காது. போலாமா?" என்றான் ராஜகோபால்.

படம் முடிய இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்தன. நான் ஏற்கெனவே பார்த்த படம்.

"சரி" என்று எழுந்தேன். தியேட்டருக்கு வெளியே ஜகஜ்ஜோதியாக உலகம் ஓடிக் கொண்டிருந்தது. இரவு நேரப் பால் வியாபாரம். சாலையோர தாபாக்களில் ரொட்டியும் சப்ஜியும். உரக்கக் கூவி பூடான் லாட்டரி. கார்களின் பிளிறல். எல்லா ஸ்கூட்டர்களின் பின்னாலும் பெண்கள். முன் இருக்கை நபரை இழுத்துக் கட்டிக் கொண்டு, அல்லது இடுப்பைக் கிள்ளிக் கொண்டு. நினைத்துக் கொண்டாற் போல் பச்சக் பச்சக் என்று முத்தப் பூ ஒற்றல்.

"என்னடா இங்க கேர்ல்ஸ் எல்லாம் இப்படி இருக்காங்க?"

"எப்படியும் இருப்பார்கள். நாளைக்கு சாயங்காலம் கோவிந்த்புரி ஹனுமான் மந்திர் போய்ப்பார். இதே பெண்களின் இன்னொரு தோற்றம் பார்க்கலாம்!"

"சரிதான்!"

"ஆனா ஒன்று. பெண்கள்தான் இப்படி. அப்பாக்கள் வேறு ஜாதி. காதல் சங்கதி ஏதும் தெரிய வந்தால் துப்பாக்கி தூக்கிக் கொண்டு வந்து விடுவார்கள். குறிப்பா சிங் அப்பாக்கள்."

ரேணுகாவை என்னால் கடிந்து கொள்ளவோ, அடிக்கவோ, குறைந்த பட்சம் பேசாமல் இருக்கவோ கூட ஏன் முடியாமல் போயிற்று என்று புரியவில்லை.

நான் அதிர்ச்சிகளுக்குப் பழக்கப்படாதவன். வன்முறைக்கு அந்நியன். ஒரு வன்முறையை விலகி நின்று ரிப்போர்ட் செய்ய மட்டுமே தெரிந்தவன். ஒரு பூவை விட மென்மையாக இருந்து பழகிப் போய் விட்டது. என் வளர்ப்பு அப்படி.

ஆனால் பிரச்னைகள் எனக்கு மட்டும் ஏன் விதவிதமான பூத உருவில் வந்து கண்ணாமூச்சி காட்டுகின்றன?

மனத்தில் சப்தமுடன் வட்டமிடத் தொடங்கி விட்ட குழப்பக் குளவி ஓய்வதாக இல்லை.

இரவு முழுவதும் தூக்கம் வராமல் புரண்டு தவித்தேன். பாதிப்புகள் ஏதும் இல்லாதது போல் ரேணுகா குழல் பறக்கத் தூங்கிக் கொண்டிருந்தாள். புதிர் மூட்டையாக ஒரு பெண். கடவுளே! நான் என்ன செய்யப் போகிறேன்?

விடிந்தது தெரியாமல் தூங்கிக் கொண்



" 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஊழலை சுடுகாட்டுக்கு அனுப்புவோம்'னு தேர்தல் சமயத்துல வாக்குறுதி கொடுத்தாங்களே, அதுக்கு இப்பத்தாங்க அர்த்தம் புரியுது!"

— ஆலத்தம்பாடி ராஜகோபால்

டிருந்தேன். கையில் காப்பியுடன் ரேணுகாதான் என்னை எழுப்பினாள்.

"ராத்திரி தூங்கவே இல்லையா நீங்க?"

நான் பதில் சொல்லவில்லை. காப்பியை வாங்கிக் கவிழ்த்துக் கொண்டு, பேப்பரை எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தேன். ரேணுகா பின்னால் வந்து நின்றாள்.

சட்டென்று அவளைத் திரும்பிப் பார்த்து, "உன்கிட்ட கொஞ்சம் பேசணும்!" என்றேன்.

"ரேணுகா, நான் ரொம்ப சாதாரணமானவன். கனவுகள் நிறைய வெச்சிருந்தேன்! சின்னச் சின்னதா... அழகழகா! கல்யாணத்துக்கு அப்புறம்தான் ஒரு முழு மனுஷனா ஆனா மாதிரி உணர்வே வந்தது. சட்டுனு நீ என்னவோ சொல்லி, என்னை உடைச்சுட்டா மாதிரி இருக்கு. இது தப்பு, சரி, நியாயம், அநியாயம்னு எல்லாம் நான் சொல்லவரலை. அப்படிப் பிரித்து யோசிக்கவும் முடியலை என்னால். ஆனால், இந்த நிமிஷம் உன்னோட இருக்கக் கஷ்டமா இருக்கு. ஒரு வேளை நான் தப்பா இருக்கலாம். ஆனால் இந்த நிமிஷம் என் உணர்வுகள் நிஜம். மூடி வைப்பது வெகு நாள் சாத்தியமில்லைன்னு நினைக்கறேன். ஸாரி."

அவள் பதில் சொல்லவில்லை. "குளிச்சிட்டு, சாப்பிட வாங்க" என்றாள்.

சாப்பிட்டு ஆகிறவரை நான் எதுவும் பேசவில்லை. கிளம்புகையில், "மத்தியானம் வருவீங்களா?" என்றாள் வழக்கம் போல்.

"வரேன்."


மத்தியானம் நான் வந்த போது வீடு பூட்டி இருந்தது. பக்கத்து வீட்டில் சாவி இருந்தது. வாங்கி, திறந்து உள்ளே போனதும் டேபிளில் சாதம், குழம்பு, ரஸம் எல்லாம் அழகாக மூடி வைத்திருந்தது. கூடவே ஒரு கடிதமும்

"எல்லாவற்றுக்குமாக மன்னிக்கவும் ரேணுகா.'

ரேணுகா போய்விட்டிருந்தாள்.

(தொடரும்)

தொழில் தொடங்க ஃபோட்டோ-காப்பியர் மெஷின் வாங்கியாச்சு!
கூடவே ஃபாக்ஸ் மெஷினும் இருந்தால் நல்லது.



துண்டு விழும் தொகைக்கு என்ன செய்வது?

சொந்தத்தில் தொழில் நடத்த திருவாளர் ராமசாமிக்கு விருப்பம். இடம் பிடித்து, அட்வான்ஸ் கொடுத்து எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். உரிய நேரத்தில் ஃபோட்டோ-காப்பியர் மெஷினும் வந்து சேர்ந்தது. அப்போது ஒரு யோசனை. அது மட்டும் போதுமா? கூடவே ஃபாக்ஸ் மெஷின் ஒன்றும் இருந்தால்? வருமானத்தைப் பெருக்க அது ஒரு கூடுதல் வாய்ப்பு. ஆனால் கையிருப்பு போதாதே! கடன் வாங்கவும் வழியில்லையே! கவலை மேக மூட்டமாய் சூழ்ந்தது. யோசித்தார். அதன் வெளி வரம்பில் ஒரு ஒளிக்கீற்று ... அதன் பலன்?

ஏற்கெனவே சேர்ந்திருந்த ஸ்ரீராம் சீட்டை இப்போது பயன்படுத்திக் கொண்டார்.

வெளி ஆதரவையோ, உதவியையோ நாடவேண்டிய அவசியமின்றித் தங்கள் பணத்தைக் கொண்டே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் கௌரவமான பாதை ஸ்ரீராம் சீட்டு.

ஸ்ரீராமின்
சித்திரை
கோலாகலம்
ஏப்ரல் 4-13, 1996

நரசிம்மராவ் ப
ஜெ.வுக்



* ஸ்ரீ சிவலிங்கேஸ்வரர் சந்நிதி

அண்மையில், கர்நாடகத்திலுள்ள கோடி மடத்திற்குச் சென்று நாடி ஜோதிடம் பார்த்தார் பிரதமர் நரசிம்மராவ். ஜோதிடம் பார்ப்பதே தன்னம்பிக்கைக் குறைவின் வெளிப்பாடுதான் என்று மனோதத்துவ நிபுணர்கள் சொல்லுவார்கள். இந்த தேசத்தை வழிநடத்திச் செல்ல வேண்டிய பிரதமரே தன்னம்பிக்கையின்றித் தடுமாறுகிற நிலையில், சாதாரண பிரஜைகளான நாம் எம்மாத்திரம்? இந்தியாவின் எதிர்காலம் பற்றியும் தமிழ்நாட்டின் எதிர்காலம் பற்றியும் நாடி ஜோதிடம் என்ன சொல்லுகிறது? நாமும் கோடி மடத்திற்குச் சென்றோம்....

சரியாகச் சொல்ல வேண்டுமானால் பெங்களூரி லிருந்து 176 கி.மீ. தூரத்திலிருக்கிறது ஆர்னஹள்ளி என்னும் சிறு கிராமம். அதிலிருந்து நடை தூரம்தான் கோடி மடம்.

மடம் இருக்கும் இடம் எப்படி? பெரு வேளாண்மை வெகு சொற்பம். கிடைக் தாகம் தணியாமல் தவிக்க வேண்டியிரு

இந்திரா காந்தி, மொரார்ஜி தேசாய் ஏகப்பட்ட வி.ஐ.பிக்கள் வரிசை



யில் இன்று நரசிம்மராவ். களோடு பணக்கார பக்தர்களே நிற்பதால் தேட வேண்டியிருக்கிறது.

ஸ்ரீநீலலோச்சன ஸ்வாமி, ஸ்ரீ சிவலிங் இரண்டு சந்நிதிகள் மற்றும் மடம் என்று ஒன்றாக இருக்கிறது. சந்நிதி கோபுரங்களே போட்டி போடுகிறது.

வெளியே நிற்பது போலவே உள்ளேயும் அம்பாசிடர் கார்கள், கூடவே பல்லக்

...லும் வறட்சியே மேலாண்மை செய்வதால்,
... நீரே குடிநீர் என்கிற நிலையில்
...றது.
...ன்று

...ர்த்த நாடி ஜோதிடம்!
...ந்த என்ன?





• பக்தர்களுக்கு பின்னல் வேக தரிசனம்...

சொந்தமானவை.

நாம் சென்ற சமயம், பெரிய பெரிய டமாரங்களை முழக்கியபடி 'வீரகாசி கட்டியதா ஆட்டா' என்னும் இராமிய நடனம் நடந்து கொண்டிருந்தது. கூட்டம் மிகக் குறைவு.

விசாரித்த போது, "மகாதேஸ்வர ஜாத்ரா" என்றார்கள். அதாவது மடத்தில் ஆண்டுதோறும் நடக்கும் திருவிழாவின் பெயர் அது. மூன்று



• வீரகாசி கட்டியதா ஆட்டா...

பல்லக்கில் பயணம்

...அப்புறம் காண்டசா கார்
... சாதாரண பக்தர்களைத்
...
...கேஸ்வர ஸ்வாமி என்று
... எல்லாம் ஒன்றையொட்டி
...ாடு டிஷ் ஆண்டனாவும்
...
...காண்டசா, டாடா எஸ்டேட்,
...ரும். எல்லாம் மடத்துக்குச்

நான் திருவிழாவின் மூன்றாவது நாள் விழா அன்று.

"இங்குதான் பிரதமர் மனமுருகிக் கும்பிட்டார்!" என்று ஸ்ரீசிவலிங்கேஸ்வர ஸ்வாமி சந்நிதியைக் காட்டினார்கள். நாமும் தரிசித்து விட்டு, "இந்த மடத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்!" என்று அங்கிருந்த பூஜாரியிடம் கேட்டோம். பெங்களூர் நண்பர் அமுதவன் கூட வந்திருந்ததால், கன்னடத்திலேயே கேட்டோம்.

"இந்த மடம் ஸ்தாபிக்கப்பட்டு 1062 வருஷங்கள் ஆகின்றன. இப்போதிருக்கும் ஸ்ரீ சிவானந்த சிவயோகி ராஜேந்திர மகாஸ்வாமிகள் 57-வது பீடாதிபதி. இந்த மடத்திற்கு ஹைதர் அலி நிறையச் செய்திருக்கிறார்."

"நாடி ஜோதிடம் என்பது என்ன?"

"இந்த மடத்தின் பீடாதிபதிகளுள் ஒருவரான சிவலிங்க மகாஸ்வாமிகள் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதியது அது. 'சுக்ர நாடி கிரந்தா' என்று பெயர். பழைய கன்னட பாஷையில் உள்ளது."

"எப்படிப் பார்ப்பார்கள்?"

"சுமார் ஐநூறு பக்கங்கள் கொண்ட அதிலிருந்து ஒரு பக்கத்தை எடுத்துப் படிப்பார்கள். அவரவருக்கேற்ப அதிலிருந்து படிப்பார்கள். பலன்கள் அவ்வளவு துல்லியமாக இருக்கும்."

"சுமார் ஐநூறு பக்கங்களே கொண்ட அதில் யாருக்கு வேண்டுமானாலும் ஜோதிடம் பார்க்க முடியுமா?"

"முடியும்."

"எப்படி?"

"அதைப் படிக்கக்கூடிய ஒரேயொருவர் நீலகண்ட சாஸ்திரிகள்தான். அவருக்குத்தான் முழு விளக்கமும் தெரியும். நீங்கள் அவரிடம் தான் கேட்க வேண்டும்."

"அவர் எங்கேயிருக்கிறார்? நாங்கள் அவரிடம் நாடி ஜோதிடம் பார்க்க ஆசை."

"அந்த கிரந்தம் இப்போது மடத்தில் இல்லை. அது இங்கிருந்து சுமார் முப்பது கி.மீ. தொலைவிலுள்ள 'மாடாளு' என்னும் இடத்தில் இருக்கிறது. அங்கு கொண்டு போய் பத்து வருஷங்கள் ஆகின்றன."

"ஏன் அப்படி?"

"நீலகண்ட சாஸ்திரிகள் மிகவும் வயதானவர். இப்போது அவருக்குக் கண்பார்வையும் சரியில்லை என்பதால் முன்பு போல் படிக்க முடிவதில்லை. அதனால்தான் அங்கு கொண்டு போய் விட்டார்கள். இப்போது ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் பக்தர்களுக்குப் பார்த்துச் சொல்லுகிறார்."

"வேறு யாராலும் அதைப் படித்துச் சொல்ல முடியாதா?"

"ஸ்வாமிஜி சொல்லுவார். ஆனால் அது மிக மிக முக்கியமான வி.ஐ.பிக்களுக்கு மட்டும்தான்!"

"பிரதமருக்கு என்ன பலன் வந்தது?"

"அவருக்குச் சாதகமான பலன் வரவில்லை. ஆபத்துகளும் நிறைய உண்டு என்கிற நிலை. அதனால் விரிவாகப் பார்ப்பதற்கு இன்னொரு முறை வருவதாகச் சொல்லியிருக்கிறார் பிரதமர். இவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்!"

"சுவாமிஜியைப் பார்க்க வேண்டும்."

"தாராளமாகப் பாருங்கள். அந்தப் பக்க முள்ள மாடியில்தான் இருக்கிறார். பார்க்கத்தான் முடியுமே தவிர, பேச முடியுமா என்று தெரியவில்லை. காரணம் அவர் இன்று மிகவும் பிஸி. நாளை டில்லிக்குப் பயணமாகிறார். இருந்தாலும் போய்ப் பாருங்கள்."


மாடிக்குச் சென்றோம். சுவாமிஜி குடிப்பதற்காக பிஸ்லேரி வாட்டர் பாட்டிலை எடுத்துச் சென்று கொண்டிருந்த வேலைக்கார இளைஞர் ஒருவரிடம் நம்மை அறிமுகப்படுத்திக் கொண்டோம்.

"அப்பாயிண்மெண்ட் இருக்கிறதா?"

"இல்லை... நாங்கள் சென்னையிலிருந்து வருகிறோம்..."

"எங்கிருந்து வந்தால் என்ன... அப்பாயிண்ட்மெண்ட் அவசியம். அப்போதுதான் சுவாமிஜியிடம் பேச முடியும். இல்லையென்றால் வெறுமனே தரிசனம்தான் செய்ய முடியும். அந்த அறையில் போய் உட்காருங்கள். சுவாமிஜி வருவார். தரிசித்து விட்டுச் செல்லுங்கள்."

அந்த அறைக்குள் சென்றோம். ஏதோவொரு முக்கியமான போன் என்று சொல்லி



‘சுருக்-நறுக்’ போட்டி முடிவு – 20

சினிமா என்பது....

(ஒவ்வொன்றும் ரூ. 50 பரிசு பெறுகிறது)

● வண்ணத்துப் பூச்சி வேஷமிட்ட ஈக்களின் கூட்டம்; ரோஜா முகமூடி அணிந்த காகிதப் பூக்களின் தோட்டம்.

– கு. வைரச்சந்திரன், திருச்சி-1.

● இன்றைய சமுதாயச் சீரழிவுகளின் மொத்தப் பிரதிபலிப்பு.

– லஷ்மி ஸ்ரீநிவாஸன், பெங்களூர்-79.

● இக்கால சிற்பிகள் புதுப்பிப்பதாய் எண்ணி சிதைத்து விட்ட சிலை.

– அ. சரவணன், குளித்தலை.

● "Wine" மட்டுமே விற்பனையாகும் ஒரு பலசரக்குக் கடை.

– பி.வி. சரகபாலசுப்பிரமணியன், சென்னை-78.

● இரண்டரை மணி நேர உரித்தலுக்குப் பிறகு ஒன்றுமே இல்லை என்பதை உணர்த்தும் ‘வெங்காயம்’.

– எல். பாபு, போளூர்.

● சராசரி மனிதர்களை பைத்தியமாக்க அறிவு ஜீவிகள் அளிக்கும் போதை வஸ்து.

– ஆர். மல்லிகா, மதுரை – 7.

ஒருவர் கார்ட்லெஸ் போனை சுவாமிஜிக்கு எடுத்துப் போனார். நாங்கள் சுவரோரத்தில் இருந்த மெத்தை விரிப்பின் மீது உட்கார்ந்தோம். ஏற்கெனவே மூன்று பக்தர்கள்!

"நான் ஐம்பதாயிரம் ரூபாய் டெபாசிட் செய்து அதன் மூலம் தருமகாரியங்கள் செய்வது சம்பந்தமாக சுவாமிஜியிடம் பேசலாமென்று வந்தேன். இரண்டே இரண்டு நிமிஷம் போதும் எனக்கு. ஆனால் அப்பாயிண்ட்மெண்ட் கிடைக்கவில்லை... என்ன செய்வது...!" என்று ஒரு பக்தர் இன்னொரு பக்தரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில் நம்மிடம் எங்கே பேசப் போகிறார் என்கிற அவநம்பிக்கையுடனேயே காத்திருந்தோம்.

சிறிது நேரத்தில் அந்த அறைக்குள் வந்த சுவாமிஜியிடம், நம்மைத் துரித கதியில் அறிமுகப்படுத்திக் கொண்டு, "இந்தியாவின் எதிர்காலம் மற்றும் தமிழ்நாட்டின் எதிர்காலம் பற்றி மட்டும் கூறினால் போதும்!" என்றோம்.

"ஐ'ஆம் வெரி பிஸி. இம்பாசிபிள்..." என்றார் மற்ற பக்தர்களை ஆசீர்வதித்துக் கொண்டே.

நாம் மீண்டும் விண்ணப்பித்த போது, "நான் கீழே வருவேன்; அப்போது படமெடுக்கலாம்!" என்றார் கேமராவைக் கையிலெடுத்த நமது புகைப்படக்காரரை நோக்கி.

படமெடுக்கும் போது மீண்டும் கேட்கலாம் என்கிற சிறு நம்பிக்கையோடு கீழே வந்தோம். அங்கும் பக்தர்கள்.

சில நிமிடங்களில் கீழுள்ள ஓர் அறைக்கு வந்து அமர்ந்தார் சுவாமிஜி. காத்திருந்த பக்தர்களெல்லாம் காலில் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள்.

நமது போட்டோகிராபர் துரித கதியில் படமெடுக்க ஆரம்பித்தார். அப்போது ஓர் ஓரத்தில் ஒதுங்கி நின்று கொண்டிருந்த நம்மைச் சைகை காட்டி அழைத்தார். நாம் செல்ல, அவரும் எழுந்து நின்று நம் காதோடு சொன்னார்...

"இந்திய தேசம் மிகவும் கடுமையான சோதனைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்த தேசம் எப்போதோ சிதறுண்டு போயிருக்கும். நமது மகரிஷிகளின் ஆசீர்வாதம் இருப்பதால்தான் இந்த அளவுக்காவது சேமமாக இருக்கிறது. தமிழ்நாடும் இதே போல்தான். ஆனால், She will come back!" என்றவர், "ஏப்ரல் மாதத்தில் வந்தால் விரிவாகச் சொல்லுவேன்!" என்றபடியே வெளியில் சென்று பல்லக்கில் ஏறிப் புறப்பட்டு விட்டார்.

‘மகாதேஸ்வர ஜாத்ரா'வின் போது இப்படிப் பல்லக்கில் ஏறி ஊருக்குள் விஜயம் செய்வது வழக்கம் என்றார்கள்.

அவர் சொன்னது பலிக்குமானால்... ரஜினி சொன்னதுதானா என்று நாம் எண்ணிய போது, கோயம்புத்தூரிலிருக்கும் நமது கல்கி வாசகர் கொ. சே. வேங்கடசுப்ரமணியன் நமது அலுவலகத்துக்கு அனுப்பியிருந்த மகாபாரத சம்பவமும் நினைவுக்கு வந்தது.

அதாவது, பாரத யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பு, "கிருஷ்ணா, நீ எல்லாம் அறிந்தவனாயிற்றே! இந்த யுத்தத்தில் யார் ஜெயிப்பார்கள் என்று சொல்லேன்!" என்று துரியோதனன் கேட்டானாம்.

அதற்குக் கிருஷ்ணன் சிரித்துக் கொண்டே, "துரியோதனா, யுத்தத்தில் யார் ஜெயிப்பார் என்பது முன்கூட்டியே தெரிந்து விட்டால் யாராவது போர் புரிவார்களா? ஒன்று மட்டும் சொல்கிறேன், தர்மம் எங்கு உள்ளதோ அந்தக் கட்சியே வெல்லும்!" என்றாராம்.

– **இளங்கோவன்**

அட்டை வண்ணப்படம், படங்கள் : **யோகா**

ஜெ. வண்ணப்படம் : **கிருஷ்ணமூர்த்தி**



தேர்தல் நீதி கேட்கிறாரே ஜெ...?

● எஸ். சீனிவாசன், மதுரை.

? ஜெ.ஜெ. டீவி 'சொல் இல்லை செல்' நிகழ்ச்சியில், சிலப்பதிகாரத்தை எழுதியவர் சாண்டில்யன் என்று அறிவித்தது பற்றி...?

! அறியாமையால் அல்ல; தெரிந்தே சொல்கிறார்கள்... ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தும் இந் தவறைத் திருத்திக் கொள்ளவில்லையே!

● கே. ரமேஷ்பாபு, சேலம் - 1.

? ஹவாலா விவகாரத்தில் எல்.கே. அத்வானி சிக்கிவிட்டதால், பி.ஜே.பியின் தனிப்பட்ட பெருமையும் செல்வாக்கும் மக்களிடையே குறைந்து போகுமா...?

! பணம் வாங்கவேயில்லை என்று முதலில் சொல்லிவிட்டு, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகக் குற்றம் சாட்டி வழக்குப் போடுகிறார்கள் என்று வாதாடி, பிறகு 'கட்சிக்கு வாங்கினால் என்ன தப்பு?' என்று சொதப்பும் போது... இந்தப் படிப்படியான பின்னடைவுக்கு ஏற்ப பி.ஜே.பியின் செல்வாக்கும் பின்னடையத்தானே செய்யும்!

● டி. சீனிவாசன், சென்னை – 79.

? போகிற போக்கைப் பார்த்தால் காங்-அ.தி.மு.க. கூட்டணி ஏற்படும் போல் தெரிகிறதே?

! எனக்கென்னவோ இன்னமும் நம்பிக்கை இருக்குதுங்க... தமிழகப் பெருந்தலைவர்களை மதிக்காமல், சில்லறைகளின் பேச்சைக் கேட்டுப் பிரதமர், ஜெயுடன் கூட்டணிக்கு முயற்சி செய்ய மாட்டார். இத்தனை காலம் அவர் வாய் திறவாமல், தமிழக விஷயத்தில் முடிவெடுக்காமல் இருந்ததே நாடாளுமன்றத்தில் தமது கட்சிக்கு இருந்த பலவீனமான நிலை கருதித்தான். அம்மாவைப் பகைச்சுக்கிட்டு அங்கே ஆபத்தைத் தேடிக்க வேண்டாம்னு யோசிச்சிருப்பாரு.. இனிமே பாருங்களேன்...!

● ஜி. கதிரேசன், சிறுமுகை.

? அ.இ.அ.தி.மு.கவுடன் தான் கூட்டு என்று நரசிம்மராவ் தீர்மானித்து விட்டால், தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் என்ன செய்வார்கள்...?

! ப.சி., மூப்பனார், குமரி, எஸ்.ஆர்.பி., ஜெயந்தி நடராஜன், பீட்டர் அல்போன்ஸ் என்று ஒருவர் விடாமல் அத்தனை பேரும் காங்கிரஸிலிருந்து வெளியேறி, தமிழக காங்கிரஸ் என்று தனியாக ஆரம்பித்து, நேர்மையுடன் வழிநடத்திட செய்வார்களா தெரியாது – செய்ய வேண்டும்!

● அ.க. கிருஷ்ணன், சென்னை – 39.

? சட்டசபையில் ஏற்கெனவே பேசியிருக்கும் முதல்வர்கள் – ராஜாஜி, அண்ணா, கருணாநிதி, எம்.ஜி.ஆர்., எல்லோருமே அம்மாவை விட குறைச்சலான நேரம்தான் பேசினாங்கன்னு சேடப்பட்டி கூறியிருப்பது பற்றி...

! எவ்வளவு நேரம் பேசினாங்க என்கிறதை விட, என்ன பேசினாங்க எப்படி நடந்துகிட்டாங்கன்றதுதான் முக்கியம்னு நான் நினைக்கிறேன். ஆனால், சேடப்பட்டி ஐயாவுக்கு வேற ஐடியா இருக்கிறாப்பல தெரியறது...

● ப்ரியா, பாளையங்கோட்டை.

? இந்திய உலகக் கோப்பை அணியில் அவுட் ஆஃப் ஃபார்ம் ஆட்டக்காரர்கள் நிறைய பேர் உள்ளனரே?

! இந்திய அவுட் ஆஃப் ஃபார்ம் ஆட்டக்காரர்களை அணியிலிருந்து நீக்கி விடலாம். ஆனால் அவுட் ஆஃப் ஃபார்ம் ரசிகர்களை என்ன செய்ய..? பெங்களூர் மாட்சின் போது நூறு ரூபாய் டிக்கெட்டை ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். இந்திய ஆட்டக்காரர் சிக்ஸர் அடித்தால் குதிப்பது; அதையே பாக் அணியினர் அடித்தால் எல்லாவற்றையும் பறிகொடுத்தது போல் முகத்தைத் தொங்கப் போட்



• இன்டர்வெல்..?



• படிப்படியாக...

ங்...ட்டவை — தராசு ... கேட் ... — தரா



டுக் கொள்வது என்று விளையாட்டின் தத்துவத்தை மறந்த வெறியர்கள் போல் நடந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஆர்.எஸ்.எஸ். மிரட்டல் என்ற சமாதானம் வேறு!

● டி.ஆர். பாலசந்தர், திருநெல்வேலி – 6.

? உலகக் கோப்பை யாருக்கு...?

! நமக்கு இல்லேன்னு தீர்மானம் ஆயிடுச்சு. கல்கத்தா விக்கெட்டை சரியா கணிக்காம ஸ்ரீலங்காவை முதலில் பேட் செய்ய விட்டதில் அஷார் கோப்பைக்கு பை பை சொன்னார். ஜெயசூர்யா நமது பேட்ஸ்மென்களின் தன்னம்பிக்கையைத் தகர்த்தார். கல்கத்தா ரசிகர்களோ இந்திய கிரிக்கெட் பண்பாட்டுக்கே சமாதி கட்டி விட்டார்கள்!

● சி.கொ.தி. முருகேசன், கோபி.

? பெட்ரோல் விலை மீண்டும் உயருமாமே...?

! பெட்ரோல் என்ன... வத்திப் பெட்டி முதல் பட்டுச் சேலை வரை சகலமும் விலை ஏறத்தான் போகிறது – தேர்தலுக்குப் பிறகு!

● என். குப்புசாமி, கோவை.

? ரஜினிகாந்த் அறிக்கை 'இடைவேளை' என ஆர்.எம். வீரப்பன் கூறுகிறாரே?

! திரைக்கதையின்படி தம் பங்கு இடைவேளையுடன் முடிந்து விட்டது; அதன் பிறகு தமக்குப் படத்தில் ரோலே இல்லை என்று ரஜினி கூறிவிட்டால் என்ன செய்வது?

● ஜி. மாஜினி, ரெட்ஹில்ஸ்.

? இந்தியாவை ஆங்கிலேயர்கள் சுரண்டியதற்கும் ஹவாலாவில் இப்போது அரசியல்வாதிகள் சுரண்டுவதற்கும் என்ன வித்தியாசம்?

! அந்த சுரண்டலுக்கு முடிவுகட்ட அண்ணல் காந்தி வர வேண்டியிருந்தது. வேறு பெருந்தலைவர்களுடன் இணைந்து பல காலம் போராட வேண்டியிருந்தது. இந்தச் சுரண்டலுக்கு முடிவுகட்ட ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்களுக்கே வாய்ப்பு இருக்கிறது.

● க.க.வே. சித்திரவேலு, கருப்பம்புலம்.

? முதல்வரின் கட்சியில் பணத்துக்குப் பஞ்சம் போலும்... இல்லாவிட்டால் தேர்தல் நிதி கோரி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுப்பாரா...?

! இப்போ, உங்ககிட்டேயே ஒரு கோடி ரூபாய் கறுப்புப் பணம் இருக்கிறதாக வைச்சுக்குவோம்... சும்மா, ஒரு இதுக்குத்தான்... அதை வெளுப்பாக்கி, தேர்தலுக்குச் செலவழிக்கணும்... என்ன செய்யலாம்...? மக்களிடம் நன்கொடை திரட்டலாம். நூறு, ஆயிரம், ஐந்து, பத்து என்று ரசீது போட்டு, அந்த ரசீதுகளைக் கிழித்தெறிந்து விட்டு, கட்சிக்கு வந்த நன்கொடைகளாகக் கணக்கில் வரவு வைக்கலாம். இப்படி ஒன்றா? இரண்டா? இன்றைய அரசியலிலே இதுபோல் எத்தனையோ தில்லுமுல்லுகள்!

● எம். பிரபு, குமராட்சி.

• வேற ஐடியா!



? இப்போது இருக்கும் கட்சிகளுக்குக் கொள்கை பற்றிய நினைப்பு இருக்கிறதா?

! நினைப்பு இருக்கட்டும்... கொள்கை இருக்கிறதா என்று முதலில் கேளுங்கள்!

● டி.வி.எஸ். பாலு, சித்தமல்லி.

? உம்மை அறிவாலும் அழகாலும் கவர்ந்தவர் யார்?

! அறிவிலேயே அழகு உண்டு. ஆனால் அழகிலேயே அறிவைக் காண முடியாது என்பதை மறக்காமலிருந்தால் வேதகாலம் தொடங்கி இன்றுவரை அறிவிலும் அழகிலும் நம்மைக் கவர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கில் உண்டு.

● பி. பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி.

? தமிழக அரசின் கஜானா எந்த அளவில் உள்ளது?

! வளமாக இருக்கிறது – வேறு அட்ரஸில்!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
கே. ரமேஷ்பாபு,
காளியம்மன் கோயில்,
சித்தேஸ்வரா,
சேலம் – 1.

நீங்கள் கேட்டவை — தராசு நீங்கள் கேட்டவை — தராசு

வட்டமேஜை

கண்ணதாசன் வரிகளை மாற்றிப் பாடலாம்!

✉ ஜெயலலிதாவைப் புகழ்ந்து இந்திரகுமாரி உதிர்த்திருக்கும் வாசகங்களைப் படிக்கையில் 'பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமாட்டியே...' என்று கண்ணதாசனின் வரிகளை மாற்றிப் பாடத் தோன்றுகிறது!

கோட்டையூர், தஞ்சை கலைவாணர்தாசன்.

ரூ. 20 பரிசு பெறும் கடிதம்

✉ தலையங்கம் படித்தேன். உண்மை தான்! தேர்தல் நெருங்க நெருங்க தலைவிக்கு மேக்அப் நிறையவே போடுகிறார்கள். பொதுமக்கள் இதனைப் பற்றி கவலைப்பட வேண்டாம்; இவ்வாறு சம்பாதித்த பணம் தேர்தல் நேரத்தில் மூக்குத்திகளாக, தோடுகளாக, குங்குமச் சிமிழ்களாக நமக்கே கிடைக்கக்கூடும்! இனிமேலாவது வோட்டுப் போடுபவர்கள் சிந்தித்து வாக்களித்து, தத்தம் தொகுதிகளுக்கு நல்ல வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பார்களா? கட்சியைப் பார்க்க வேண்டாம்; சின்னத்தைப் பார்க்க வேண்டாம்; வேட்பாளரை மட்டும் பார்த்து வோட்டுப் போட்டால் வருங்காலத்தில் நல்ல ஆட்சி அமைய வழி வகுக்கும்.

திருச்சுழி, சுந்தர் அழகேசன்.

✉ "அழகிரி-பரிதி இளம் வழுதி"யின் உரையாடலில் ஆங்காங்கே நகைச்சுவைகளையும் அள்ளி வீசி, ஜெயலலிதாவை இந்த வாங்கு வாங்கு வாங்கி விட்டார்களே! இந்த உரையாடலை ஏற்படுத்திய உங்களுக்குக் கண்டிப்பாக நன்றி சொல்லித்தான் ஆக வேண்டும்!

சென்னை - 6, ஆசிஃப்பகேஸ்.

✉ பரிதி இளம்வழுதியும் அழகிரியும் நடத்திய விவாதம், அவர்களின் அரசியல் முதிர்ச்சியையும் நாகரிகத்தையும் பிரதிபலிப்பனவாய் இருந்தன.

வேலூர் - 9,

எஸ். பாலசுப்பிரமணியன்.

✉ உண்மையிலேயே சங்கீதா துணிச்சலான நடிகைதான். இவர் தொடர்ந்து கவர்ச்சிப் புயலில் சிக்காமல் தரமான பாத்திரத்தில் நடித்துப் பெயர் எடுக்க ரசிகர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். சங்கீதாவின் துணிச்சலான முடிவுக்கு நமது பாராட்டுக்கள்.

பெண்ணாடம், பூமலை. மணியன்.

✉ சங்கீதாவின் அட்டைப் படம் மிகவும் நன்றாக இருந்தது. கண்ணுக்குள்ளேயே அந்தப் புன்னகை நிற்கிறது. பேட்டியும் தான்!

தூத்துக்குடி-1, எஸ். ராமசுப்பிரமணியன்.

✉ 'கலர் கலராய் ஆசை...' சிறுகதைச் சிகரம் தொட்டிட இன்னொரு மேலாண்மைதான் பிறந்து வர வேண்டும். பாராட்டுக்கள்...!

ஒண்டிப்புதூர், கா. சு. வேலாயுதன்.

✉ 'மாமூல் கிடைக்காத ரூட்டில போட்டுட்டாங்களே' என்ற போலீஸ்காரனின் புலம்பலையும் 'ஃபிளட் லைட் வெளிச்சத்தில் தலைவியின் புகழொளியைப் பார்க்கிறேன்' என்ற அரசியல்வாதியின் பேச்சையும் படித்ததும் உண்மையிலேயே 'Day & Night' சிரித்தேன்!

தேவராயனேரி, மு. கருணாநிதி.

✉ 'பகல் கொள்ளை' கவிதை நன்றாக இருந்தது. கவிதைக்கு 'ஸ்தூபி சிங்க முகங்கள்' வரைந்த ஓவியர் பாராட்டுக்குரியவர்.

வயலூர், ஆர். பார்த்திபன்.

✉ நமது கலாசார பெருமையை ஸ்வீடனில் பறைசாற்றியிருக்கும் மெய்யப்பன், மிக விரைவில் இதர வெளிநாடுகளிலும் நம் தேசத்தின் புகழ் பரப்ப எங்களது வாழ்த்துக்கள்!

திருநெல்வேலி டவுன்,

வீ. முத்தையா.

✉ 'ராவ் வாதாபியை விழுங்கிய ரிஷி போல் கம்மென்று இருக்கிறார்...'

'ஏப்ப சப்தம் மட்டுமே கேட்கிறது.'

'லஞ்சத்தில் நமக்குத்தான் டாக்டர் பட்டம்.'

'லட்டு, மூக்குத்தி, பத்தடி கார் சவாரி இலவசம்.' -ஆகிய வரிகள், சுஜாதாவுக்கே சொந்தமான சொல்லாட்சி!

உடுமலைப்பேட்டை,

எஸ். பொன்னுசாமி.

✉ ஒவ்வோர் ஊரிலும் கோஸ்ருலோ போன்ற இளைஞர்கள் இருந்தால், எந்த அரசும் ஊழலில் இருந்து தப்பித்து விட முடியாது என்பதை உணர்த்தியது "ருலோ போட்ட பிரேக்" கட்டுரை!

மேலப்பாதி, எஸ். நாகராஜன்.

பாக். அரசியல் பற்றி இம்ரான்கான்

"இந்த ஃபாஸிஸ அமைப்புக்கு முடிவுகட்ட வேண்டும்!"



கேள்வி : உலகக் கோப்பை கிரிக்கெட் பந்தயங்களின் போது உங்களை பாகிஸ்தான் டீ.வியில் காட்டக் கூடாது என்று முடிவு கட்டி விட்டதே அரசாங்கம்...? நீங்கள் இதனால் பாதிக்கப்படவில்லையா?

இம்ரான் கான் : இந்த நடவடிக்கை நான் எதிர்பார்த்த ஒன்றுதான். இந்த அரசு ஒரு ஃபாஸிஸ அரசு போல் நடந்து கொள்கிறது. ரஷ்யாவில் ஸ்டாலினும் ஜெர்மனியில் ஹிட்லரும் சரித்திரத்தையே தங்களுக்குச் சாதகமாக மாற்றி அமைத்துக் கொண்ட மாதிரிதான் இதுவும்.. பாகிஸ்தான் டெலிவிஷன் இம்ரான் கான் என்றொரு ஆட்டக்காரர் இருந்தார் என்பதையே இருட்டடிப்புச் செய்ய முனைந்திருக்கிறது. இதன் மூலம் அவர்கள் தங்களைத் தாங்களே முட்டாளாக்கிக் கொள்வதுதான் மிச்சம்! என்னை டீ.வியில் காட்டவில்லை என்பது குறித்து எனக்கு எந்த வருத்தமும் கிடையாது. எனது 'ஷவுகத் கானம் நினைவு கான்ஸர் மருத்துவமனை'யை டீ.வியில் இருட்டடிப்பு செய்கிறார்களே என்பதுதான் என் கவலை. பொது மக்களின் நன்கொடையை நம்பி நடத்தப்படும் ஒரு மருத்துவமனைக்கு டீ.வி. மூலம் விளம்பரம் கிடைப்பது மிகவும் முக்கியம். அந்த அங்கீகாரம், தடையில்லாமல் நன்கொடைகள் கிடைக்க உதவும். ஆனால் பாக். அரசாங்கமோ அந்த மருத்துவமனைக்கு எதிரான பிரசாரத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது. ஹை கோர்ட்டில் மருத்துவமனைக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது. அத்தனை அரசியல்வாதிகளும் சொல்லி வைத்தாற்போல் அதைத் தாக்கியும் எதிர்த்தும் அறிக்கை விடுகிறார்கள். இதையெல்லாம்தான் நான் கவலைக்குரிய பிரச்னையாக நினைக்கிறேன்.

கேள்வி : நீங்கள் அரசியலில் குதிக்கப் போகிறீர்களா இல்லையா என்று மிகவும் குழப்புகிறார்கள் மக்கள்... தெளிவாகச் சொல்லி விடுங்களேன்...?

• **இம்ரான் :** குழப்பத்துக்குக் காரணமே பாகிஸ்தான் அரசின் தவறான பிரசாரம்தான். உலகத்தில் அத்தனை பேரும் பிரதமராக வேண்டும் என்று ஏங்குவதாக அரசியல்வாதிகள் நினைத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு அந்த வெறி இருப்பதால் அப்படித் தவறாக பிறரையும் எடை போடுகிறார்கள். சராசரி ஆசைகள், எதிர்பார்புகளுடன் வாழ்க்கை நடத்தக்கூடிய மனிதர்களும் இருக்கக்கூடும் என்பதே அவர்களுக்குப் புரிவதில்லை... கடவுள் எனக்கு எல்லா நலன்களும் கொடுத்திருக்கிறார். இந்த நாட்டுக்கு இப்போது உடனடியாகத் தேவையானது ஒரு சீர்திருத்த இயக்கம்தான். ஒரு பெரிய மாற்றம் விளைய வேண்டும். ஊழல் ஒழிய வேண்டும். இந்த ஃபாஸிஸ அமைப்புக்கு ஒரு முடிவுகட்ட வேண்டும். பெயரளவில் மட்டுமே இங்கே ஜனநாயகம் நிலவுகிறது. மக்கள் எப்படி சுரண்டப்படுகிறார்கள் பாருங்கள்... எனவே சீர்திருத்தங்களுக்காகப் போராடும் ஓர் இயக்கத்தை ஆரம்பிக்கப் போகிறேன். அதற்கான ஒரு திட்டமும் ஒரு குழுவும் தேவை - அதைத்தான் இப்போது உருவாக்கி வருகிறேன்...

கேள்வி : பாகிஸ்தானில் இதுவரை எந்தவொரு சீர்திருத்த இயக்கமும் ஆரம்பிக்கப்பட வில்லையே... உங்கள் முயற்சி வெற்றி பெறுமா?

இம்ரான் : அல்லாவின் அருளால் எனது இயக்கம் முதலாவதாக இருக்கட்டும். பார்ப்போம்... இந்த நாட்டில் நடப்பவை கண்டு மக்கள் அலுத்து சலித்துப் போயிருக்கிறார்கள். பணத்தை வாரி இறைத்து பதவிக்கு வந்து, பின்னர் அந்தப் பணத்தை மீண்டும் சம்பாதிக்க பதவியை துஷ்பிரயோகம் செய்து... நம் பிரச்னைகள் கவனிக்கப்பட வேண்டும்; உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.

கேள்வி : பெனசிர் புட்டோ உங்கள், சமகாலத்தவர். ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் இருவரும் படிக்கும் போது நட்புடன் இருந்திருக்கிறீர்கள்... இப்போது எதிரிகளாகி விட்டீர்களே?

இம்ரான் : அவரை நான் சந்தித்தே பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது அவர் சித்தாந்தங்கள் என்னவென்று தெரியவில்லை. ஆனால், எங்கள் பார்வைகள் வேறுபடுகின்றன...!

நன்றி : **சண்டே**



புத்தம் புது பழக்குலைகள்



மூன்று வயது முதிர்ந்த மரம்

100% பாதுகாப்பு

முதற்கட்ட பதிவுகள் 13.4.96 உடன் முடிவடைகிறது.

● உங்களுடைய முதலீட்டிற்கு முழு பாதுகாப்புடன் நிலத்தை உங்கள பெயரிலேயே பத்திர பதிவு செய்யப்படுகிறது. ● சென்னையிலிருந்து 100 கி.மீ. தொலைவிற்குள் இந்த நிலங்கள் இருப்பதால் இதன் மதிப்பு பன்மடங்காக உயரும். மேலும் இந்த நிலங்கள் பாலாறு, குசஸ்தலை ஆறுகள் மற்றும் ஏரிகளின் படுகையில் இருப்பதால் நீர்வளமிகுந்தவை. ● நிலத்தில் விளையும் பழக் கொத்துக்களை பாமாயில் தயாரிப்பிற்காக எங்கள் தொழிற்சாலையே பயன்படுத்துகிறது. ● வருமானவரி மற்றும் சொத்துவரியிலிருந்து விலக்கு. ● உலக முன்னோடிகளான ASD-DE COSTA RICA, அமெரிக்க தொழில் நுட்பமும் ஆயில்பாம் விதைச் செடிகளும் இறக்குமதி செய்யப்படுகிறது. ● மூன்றாவது வருடத்திலிருந்து விளைச்சல் தரும் இப்பனைகள், வருடம் முழுவதும் 40 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து விளைச்சல் தரும்.

● இரண்டாவது வருட முடிவிலிருந்து 15% மதிப்பீட்டு உயர்வுடன் நிறுவனமே திரும்பப்பெறும் வாய்ப்பு.

● 20வருடங்களுக்கு இலவச பராமரிப்பு.

ஒரு ஒப்பற்றத் திட்டம்
முழுமையான பாதுகாப்பு +
மிகுந்த ஆதாயம்

A Fortune In Your Palm

KKR பாமாயில் (இந்தியா) லிட்

பதிவு அலுவலகம்:
121, மாதவரம் நெடுஞ்சாலை (வடக்கு) பெரம்பூர்,
சென்னை - 600 011.
போன் : 5375456, 5376796, 5377795
ஃபேக்ஸ் : 044-5377777

கார்பொரேட் அலுவலகம்:
126, Dr. ராதாகிருஷ்ணன் சாலை,
மைலாப்பூர், சென்னை-600 004.
போன் : 8552669

ஒவ்வொரு ஞாயிறும் காலை 9 மணியிலிருந்து எங்கள் ஆயில் பாம் எஸ்டேட் சுற்றுலாவில் கலந்துகொள்ள முன்பதிவிற்காக இந்தக் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்பவும் அல்லது எங்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

பெயர் ________ தங்களின் எண்ணிக்கை ________

விலாசம் ________

போன்:

EFFICIENT/KKR/POL/105(B)96

சிவப்பு ஆறு

தமயந்தி

இன்னும் தாமிரபரணி சலசலத்துக் கொண்டுதானிருந்தது. சபரி ஜன்னலை விசாலமாகத் திறந்து வைத்தான். காற்று நின்றிருந்தது. ஆனாலும் காற்று நிமிண்டின மாதிரி ஆறு சலசலத்தது. அமாவாசையாய் இருக்கும் போல. கும்மிருட்டில் நதி பளபளத்தது. ஆற்றின் பக்கத்தில் ரூம் கிடைத்தது லாபம். கோபமா, சந்தோஷமா, துக்கமா, விரக்தியா, உடல்வலியா... ஜன்னலைத் திறந்ததும் நதி என்ன என்று கேட்கும், விசாரிக்கும், நண்பன், ஸ்நேகிதி, அர்த்தநாரி.

சபரிக்குச் சிரிப்பு வந்தது. புத்தனுக்கு போதி மாதிரி சபரிக்கு ஆறா? தாமிரபரணியா? தாமிரபரணி நீருக்கு உள்ள ருசி சிறுவாணியில் கிடையாது. சொன்னால் பத்மனாபன் சண்டைக்கு வருவான். கோயமுத்தூர்க்காரன். வேலை தேடி கடைசியில் சபரியைப் போலவே ஒரு வாக்வம் க்ளீனர் கம்பெனியில் மூவாயிரம் ரூபாய் சம்பளம், இன்சென்டிவ், பேட்டா என்று காலத்தை ஓட்டுகிறவன். ஒரு பீஸ் விற்றால் இத்தனை கமிஷன். நாய் வேலை. ஆறு மாதிரி சதா சுழலும் வேலை.

ஆனாலும் சுழல்வது சுகம்.

அலுத்தா போகும்? ரோட்டைக் கடந்து நாலைந்து பெண்கள் போனார்கள். கையில் புத்தகங்கள். செல்வியும் இப்படித்தான் ஊரில் ஸ்கூலுக்குப் போய்க் கொண்டிருப்பாள். மாதம் ஒரு கடிதம். 'அண்ணா... நீ அனுப்பிய எம்.ஓ. கிடைத்தது. பீஸ், வாடகை கட்டிவிட்டேன். அம்மா நலம். உன்னை விசாரித்ததாக...'' மொத்தமே எட்டு வரிக் கடிதம். ஆனாலும் சுகம். சரஸ்வதி முகம் போல.

நதி சிலிர்த்துக் கொண்டது. விடிவெள்ளி கண்சிமிட்டாமல் சபரியையே பார்த்தது. சரஸ்வதியைச் சந்தித்த போதும் இப்படித்தான் கண்சிமிட்டாமல் நிற்க முடிந்தது. அழகு என்றெல்லாம் முத்திரை குத்தக் கூடிய முகமில்லை. ஆனாலும் பளிச்சென்ற முகம். காரியத்தில் வேகம், ஆபீஸில் புது அப்பாயின்ட்மென்ட்; அக்கௌண்டன்ட். எத்தனை பீஸ் விற்றிருக்கிறது என்று அவளிடம்தான் கணக்குச் சொல்ல வேண்டும். ஒரு நாளில் எத்தனை வீட்டில் டெமான்ஸ்ட்ரேஷன் என்று கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டும்.

ஒருநாள் அலுத்துப் போய் ஆபீஸுக்குள் நுழைந்து தண்ணீர் குடிக்கும்போது உள் ரூமில் பத்மனாபன் சத்தம் கேட்டது.

"எதை வச்சு அப்படிச் சொல்றீங்க சரஸ்வதி? இன்னைக்கு அமெரிக்கால நல்ல பொசிஷன்ல இருக்கிற இந்தியர்கள்ல பாதி தமிழர்கள்தான்."

"ஆனா ஏன் அவங்க அங்கே போனாங்க? அதுதான் முக்கியம். இங்க வேலையை வாங்கிட்டு... சம்பளம் குறைவு. டிக்னிட்டி ஆஃப் லேபர் நம்ம மக்கள்கிட்ட குறைவு பத்மனாபன். மனுஷனுக்கு அவசியமான ஒண்ணு அது. நான் பூரா லோலோன்னு அலையற உங்களையே எடுத்துக்கோங்களேன். மூவாயிரம் கம்மிதான். இதே வேலைக்கு உங்களுக்கு வேற நாட்டுலே கூட மூவாயிரம்னா நீங்க போக மாட்டீங்களா?''

"ப்ரெயின் ட்ரெயினை நியாயப்படுத்துறீங்களா?'' பத்மனாபனின் குரலில் கோபம் இருந்தது.

"இல்ல. தப்புதான். வளர்ந்த, வளர்த்த நாட்டை விட்டுப் போறது சரின்னு நான் சொல்லலை. ஆனால் காரணம் என்னன்னு இன்னும் எத்தனை வருஷம் ஆராயாம நாம இருக்கப் போறோம்?''

சபரி நிற்பது கவனிக்காமல் சரஸ்வதி ஆவேசமாய் மேஜையைக் குத்தினாள்.

"ரொம்ப ஆவேசமான டிஸ்கஷன் போல!'' சபரி கேட்டதும் சிரித்தார்கள். தினம் தினம் ஏதாவது ஒன்று ஓய்வு நேரத்தில் விவாதிக்கப்பட்டது. ஹவாலா அரசியல்வாதிகளிலிருந்து பிரபஞ்சன் சாகித்ய அகாதமி வாங்கியதற்கு இன்னும் தமிழர்கள் பாராட்டி இருக்க வேண்டும் என்பது வரை. புத்தகங்கள் கைமாறின. பேசியது என்னவோ மற்றவர்களைப் பற்றி என்றாலும் சபரிக்குத் தனக்குள் ஒரு தென்றல் வீசியது தெரிந்தது.

ஆனாலும் சற்று நெருக்கமாய் அவளிடம் அணுகத் தயக்கமாக இருந்தது. ஓர் அழகான இடைவெளியை அவளாகவே ஏற்படுத்தி

யிருந்தாள். ஒருநாள் கூட அவன் குடும்பம் பற்றியோ, அவனைப் பற்றியோ அவன் சொன்ன தில்லை. அந்த அழகான இடைவெளி தாண்டி அவனை நெருங்க ஏதோ நெருடியது.

பத்மனாபனுக்கு இந்த அவஸ்தை பிடிபட்டிருக்க வேண்டும். ரூமில் இதேபோல ஜன்னலைத் திறந்து வைத்துக் கொண்டு நதியின் நெளிசல்களைப் பார்த்துக் கொண்டிருந்த போது ஒருநாள் வந்தான்.

''எல்லா இன்ட்டலெக்சுவல் நட்பும் இப்படித்தான் கலங்கும் போல...''

''என்ன சொல்றே பத்மனாபன்...?''

''மறைக்காதே சபரி, ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட்.''

''ஆனா அவனுக்குப் புரியணுமே?''

''அது கஷ்டம். என்னால உத்தரவாதம் தர முடியாது.''


''ஏன்... ஏன்...?'' மனசு பதறியதில் நதி வேகமாய் நெஞ்சில் அடித்துக் கொண்டது. படகுத் துடுப்பு நீரைக் கிழித்த மாதிரி.

''சரஸ்வதி யாரு? கல்யாணமான பொண்ணா? இல்லையான்னு உனக்குத் தெரியுமா சபரி?''

''பத்மனாபன்...?''







கருத்து : ஜிலி

"தன்னைப் பத்தி எதையுமே அவன் சொன்னதில்லை. நாமளும் அதனால அவ்யூம் பண்ணறதைத் தவிர்க்கிறது நல்லதில்லையா?"

மறுநாள் ஆபீஸில் மெதுவாக ஆரம்பித்தான்.

"எங்களை உங்க வீட்டுக்கு ஒருநாள் இன்வைட் பண்ண மாட்டீங்களா சரஸ்வதி...!"

சரஸ்வதி முகம் மாறினாள். "அக்கௌண்ட்ஸ் ஃபைல் நேத்து நீங்க சப்மிட் பண்ணலையே சபரி?" என்றாள். அதற்குமேல் பேச்சைத் தொடர முடியவில்லை. ஆனால் மனசையும் கட்டுப்படுத்த முடியவில்லை. மனசுக்குள், 'இதுதான் காதலென்பதா?' என்று ஏதோ பாட்டுக் கேட்டது. கனவுகளும் கொஞ்சம் சினிமாத்தனமும்தான் காதலா? அப்படியென்றால் இது வெறும் ஈர்ப்பா? இருபத்தொன்பது வயசில் வெறும் ஈர்ப்புத்தானா? காமம்தானா? யோசனை இல்லையா?

ஞாயிற்றுக்கிழமை தனிமை மேலும் குழப்பியது. காலையில் குடித்த ஒரு கப் டீயோடு மதியம் வரை யோசனையோடு இருந்தான். மத்தியானம் சாப்பிட்டதும் மனசில் ஏதோ அசட்டு தைரியம் முளைத்தது. பார்த்துப் பார்த்து ஷேவ் செய்தான். ஷர்ட் முழுக்க செண்ட் அடித்து மாட்டிக் கொண்டான். இனம்பும் முன் மூன்று தடவை கண்ணாடி பார்த்துக் கொண்டான்.

கதவைப் பூட்டியபோது தயக்கமாய் இருந்தது. வழியில் அரைக்கிலோ மில்க் பேடா வாங்கிக் கொண்டான். பஸ் பிடித்து வீட்டை அடையும் போது நெஞ்சுப் பக்கம் வியர்த்திருந்தது. கைகிலிர்க்க காலிங்பெல்லை அழுத்தினான்.

வரிப்புலியோ கர்ஜனை சிங்கமோ
நாக்கில் விஷம் பரவின விரியனோ
எது குகைக்குள்?
பயந்தபோது
நதிநீர் வெயிலில் மெல்ல
எட்டிப் பார்க்கும் -
நீலி விடும் நிழல்.

இதுபோல நிழல் மனசைத் தீண்டுமா? இல்லை பயந்தமாதிரியே நாக்கில் விஷம் தடவிய விரியனா?

ஒரு மாவுக்கை கதவைத் திறந்தது. சரஸ்வதிதான்.

"வாங்க..." எதிர்பாராத தயக்கம் முகத்தில் தெள்ளத் தெளிவாய்த் தெரிந்தது. "உட்காருங்க..."

"இந்தப் பக்கம் வரவேண்டிய வேலை இருந்தது. அதான்... அப்படியே... உங்களையும்" முகத்தில் பொய்யின் நிழல் படர்ந்தது.

"மம்மி... யாரு...?" ஆறு ஏழு வயதிருக்கும்... குட்டி சரஸ்வதி... இரட்டை ஜடை போட்டிருந்தது.

"நான் சொல்வேன் இல்லே, சபரி அங்கிள்..."

"ஹலோ..." சிரித்தபடி சொன்னாள். "என் பேர் ஐஸ்வர்யா..."

சபரி தடுமாறினான். உள்ளுக்குள் ஏமாற்றம் மலையாய்க் குவிந்தது.

"டீ குடிக்கிறீங்களா, காப்பியா?"

"எனிதிங்."

இரண்டு கோப்பைகளில் நிமிடத்தில் கொண்டு வந்தாள்.

"உங்க ஹஸ்பெண்ட் இல்லையா?"

"அவர் இல்லை."

'என்ன அர்த்தம்? வீட்டில் இல்லையா... இல்லை...?'

யார் முதல்வர்? யார் பிரதமர்? உங்கள் தேர்வு என்ன?

வரும் பொதுத் தேர்தலில் தமிழகத்தின் முதல்வராக யார் வர வேண்டும்; இந்தியாவின் பிரதமராக, யார் வரவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? குறிப்பாக அவர்கள் வரவேண்டுமென்று நீங்கள் கருதுவதற்கு என்ன காரணங்கள்?

முதல்வராக, பிரதமராக வர வேண்டுமென்று நீங்கள் கருதுபவர் பெயர்களை ஒரு போஸ்ட் கார்டில் எழுதுங்கள். அதற்கான மூன்று மூன்று காரணங்களையும் அதே போஸ்ட் கார்டில் எழுதி எங்களுக்கு அனுப்புங்கள்.

பிரசுரமாகும் ஒவ்வொன்றுக்கும் 100 ரூபாய் பரிசு.

போஸ்ட் கார்டிலுள்ள முகவரி பகுதியில் கீழுள்ள கூப்பனைக் கத்திரித்து ஒட்டி அனுப்ப வேண்டியது அவசியம். உங்கள் முகவரி எழுதுவதும் முக்கியம்.

முடிவு தேதி : 1.4.96

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

யார் முதல்வர் - பிரதமர் போட்டி

கல்கி,

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

"எங்க வொர்க் பண்றார்?"

"தெரியல..."

"புரியல சரஸ்வதி..."

"ஆனா எனக்குப் புரியுது சபரி. உங்க மனசு எல்லாம் புரியுது. வேணாம். இது சாக்கடை. விட்டுடுங்க."

"இன்னும் புரியலை சரஸ்வதி."

"பதினைஞ்சி வயசிருக்கும் அப்ப. சினிமா ஆசை. மெட்ராஸ் வந்தேன். பம்பாய்ல ஷூட்டிங்னு கூட்டிப் போனார்கள். ரெட்லைட் ஏரியா... தொடர்ந்து ரெய்ட். எல்லா அசிங்கமும் உண்டு. ஒரு சமூக சேவை நிறுவனம் காப்பாத்திச்சு. எய்ட்ஸ் டெஸ்ட் பார்த்தாங்க. இல்லை. ஆனால் வேறொரு டெஸ்ட் பாசிடிவ். ப்ரெக்னென்சி! கலைச்சிடுன்னாங்க. எனக்கு இஷ்டமில்லை. பெத்துக்கிட்டேன். மேலே படிக்க வச்சாங்க. வேலை கிடைச்சு..." வார்த்தைகள் திக்கித் திணறி வெளியே வந்தன.

"என்னால உங்களைப் புரிஞ்சிக்க முடிஞ்சது சபரி. என் கடந்த காலம் அழுக்கானது. அதுல யாரையும் சம்பந்தப்படுத்த நான் விரும்பல. போறுமா? நாம நல்ல நண்பர்களா இருப்போம். நேத்து எம்.டி. வாசுதேவன் நாயருக்கு ஞானபீடம் கிடைச்சிருக்கு தெரியுமா?"

"ம்." தேநீர் உள்ளே சூடாய்ப் பரவிற்று.

"எதிர்பார்க்கவே இல்லை?"

"ம்..."

"சீன்னு ஆயிருச்சா?"

"இல்லே..."

"எப்படி சபரி? அசிங்கமாத் தெரியலே...?"

"உண்மையைச் சொல்றது அழகு சரஸ்வதி..."

"சபரி..."

வாங்கி வந்த மில்க் பேடாவை நீட்டினான். ஐஸ்வர்யா வெளியே விளையாடிக் கொண்டிருந்தாள். டாட்டா காட்டினாள். நடக்கும்போது சீக்கிரம் ரூமுக்குப் போக வேண்டும் போலிருந்தது. ஜன்னலைத் திறந்து கொண்டு உட்கார வேண்டும். நதி நெளியும். உரசும். மனசோடு பேசும். இதோ பார் சபரி. என்னில் மனிதர்கள் பண்ணாத அசிங்கமா? பிணங்கள், ஆடுகள், மாடுகள், ஏன் கலவரங்களில் சிந்தப்படும் ரத்தங்கள்... அதற்காக நான் சிவப்பாகவேயா ஓடிக்கொண்டிருக்கிறேன்? என்று சபரியை நோக்கி கைநீட்டும்.

நதி அழகானது. சபரி ஜன்னல் திண்டில் உட்கார்ந்து கொண்டான். இன்னும் தாமிரபரணி சலசலத்துக் கொண்டுதானிருந்தது.



மெய்சிலிர்த்துப் போய்விட்டேன்!

- சி. செல்வராஜன்,
பெரம்பலூர்.

அவசரத்திலும் சந்தித்தார் நேரு!

நான் அனந்தபூர் பொறியியல் கல்லூரியில் இறுதியாண்டு படித்த 1956 - ஆம் ஆண்டு. இருபது மாணவர்கள் ஒன்று சேர்ந்து அனைத்திந்திய கல்விச் சுற்றுலா சென்றிருந்தோம். டெல்லிக்குப் போன போது ஒரு நாள் மாலையில் என் வகுப்புத் தோழன் ஸ்ரீரங்கம் என்.ஆர். ராமகிருஷ்ணன் யாருக்கோ போன் செய்து கொண்

அவசரத்திலும் சந்தித்தார் நேரு!

டிருந்தான். யாருக்கு என்ற போது "பிரதமருக்கு!" என்றான். நாங்கள் கேலியாகப் பார்க்க, அவனோ, "நாங்கள் அனந்தபூரிலிருந்து வந்திருக்கும் என்ஜினியரிங் மாணவர்கள். பிரதமரைச் சந்திக்க விரும்புகிறோம்!" என்று அரைகுறை இந்தியில் பேசினான். "அடுத்த நாள் காலை ஏழரை மணிக்குப் பிரதமரைச் சந்திக்கலாம்!" என்று பிரதமர் அலுவலகத்திலிருந்து பதில்!

நம்ப முடியாமலேயே நாங்கள் சென்றோம். பிரதமர் இல்லத்தின் விசாலமான புல்வெளியில் எங்களை அமரச் சொன்னார்கள். சுடச்சுட டீ பரிமாறினார்கள். சரியாக ஏழரை மணிக்குப் பிரதமர் நேரு வெளியே வந்தார். அப்போதுதான் ஷேவ் செய்து முகத்தை அலம்பித் துண்டால் துடைத்துக் கொண்டே சிரித்தபடி வந்தார். அவரது கன்னத்தின் ஓரிடத்தில் பிளேடு பட்டு ரத்தம் கசிந்திருந்ததைக் கூட எங்களால் பார்க்க முடிந்தது; அத்தனை அருகில் வந்து எங்களோடு நின்று போட்டோவுக்கு போஸ் கொடுத்தார். "The future of this country is in your hands. Engineers, gentlemen, I am afraid I have to take leave of you, as I have another engagement to attend to, now..." என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். எங்கே தெரியுமா? நம் நாட்டுக்கு விஜயம் செய்திருந்த ரஷ்யத் தலைவர்கள் குருஷேவ், புல்கானின் ஆகியோரை அன்று காலை எட்டு மணிக்கு விமான நிலையத்தில் வழியனுப்புவதற்காக!

நேருவை அத்தனை கலபத்தில் எங்களால் சந்திக்க முடிந்ததை இன்று நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது.

- இ. கலியராஜன், கோவை - 42.

உயர்வு தாழ்வு இல்லை!

யோகாசனம், தியானம் பற்றிப் புத்தகங்களில் படித்த எனக்குக் கற்றுக் கொள்ளவும் ஆசை வந்துவிட்டது. உடனே அருகிலுள்ள மனவளக்கலை மன்றத்தை அணுகினேன். வேதாத்ரி மகரிஷி அவர்களின் 'எளிய குண்டலினி யோகப் பயிற்சி'யைக் கற்றுத் தரும் மன்றம் அது. மன்றத்தின் ஆசிரியர் எனக்குத் தீட்சை தருவதற்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தார். எழுந்து நின்று, தமது குருவை நினைந்து, "வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!" என்று அவர் ஆரம்பித்தவுடனேயே என்னையுமறியாது உள்ளார்ந்த பக்தியுடன் அவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினேன். ஒருகணம் தயங்கிய அவர் தொடர்ந்து தீட்சை தர, எனக்குள் ஓர் அதீத உணர்வு எழுந்து ஒருவிதப் பரவசத்தில் திளைக்க ஆரம்பித்துவிட்டேன்.

இறுதியில் அவரிடம் விடைபெற்ற போது, "ஓர் ஆர்வத்தில் என் காலில் விழுந்து வணங்கினீர்கள். நமது வேதாத்ரி மகரிஷியின் குண்டலினி யோகப் பயிற்சி முறையில் உயர்வு தாழ்வு ஏதுமில்லை. எனவே குருவின் காலில் விழுந்து வணங்கும் முறையும் கடைப்பிடிக்கப்படுவதில்லை!" என்று கூறிக் கொண்டே அவர் என் காலில் விழுந்துவிட்டார்! ஏற்கெனவே அவர் கொடுத்த தீட்சையில் பரவசமான நான் அவரது இந்தச் செயலால் மீண்டும்

மாலை மயங்குகின்ற நேரம்...

கிருஷ்ணசந்திரனின் கடிதத்தை, அவன் மனைவி தனிமையில் இருந்து படிக்கட்டும் என்று கருதி, மணிவாசகம் வெளி வராந்தாவில் சென்று நின்றிருந்தான்.

இனி என்ன செய்வது என்று யோசிக்கவும் அவனுக்குத் தனிமை தேவைப்பட்டது.

ஆனால், அடிபட்ட மானாய் உதயரேகா கதறவும், விழுந்தடித்துக் கொண்டு உள்ளே ஓடிவந்தான். ''என் னம்மா? என்ன என்ன?'' என்று பதற்றத்துடன் வினவினான்.

பேச மாட்டாமல், கிருஷ்ணசந்திரனுடைய டாக்டர் நண்பனின் சத்தியம், அதை யொட்டிய பகுதிகளை மணிவாசகத்திடம் காட்டினாள் அவள்.

"இல்லையே! நாளைதானே...." என்று யோசித்தவன், உடனே தெளிந்து, "முதலிலேயே நான் உங்களிடம் என்ன சொன்னேன் சிஸ்டர்? கேசி, உங்களிடம் இந்தக் கடிதத்தைக் கொடுக்கச் சொன்ன நாளைக்கு வெகு முன்னதாகவே தருகிறேன் என்றேனில்லையா?" என்று அவளுக்கு நினைவூட்டினான்.

ஒரு நீண்ட நெடுமூச்சுடன், உதயரேகாவும் சற்றே அமைதியுற்றாள்.


"உடனேயே, நாளை தானே என்றால் நாளைக்கேவா?" என்று விழியகல பீதியுடன் வினவிவிட்டு, "மணி சார், எனக்கு ஓர் உதவி செய்யுங்களேன்! ப்ளீஸ்! இந்த அறுவை சிகிச்சையைக் கொஞ்சம் தள்ளி வைக்கச் சொல்ல முடியுமா?– அதிகமில்லை. ஓர் இரண்டு அல்லது மூன்று நாள் தான்" என்று கெஞ்சிக் கேட்டாள்.

உதயரேகாவின் காரணத்தை ஒருவாறு ஊகித்து, "எதற்காக, அம்மா?" என்று மணி தயங்கினான்.

மீறித் துடித்த உதடுகளைக் கட்டுப்படுத்தி, "நான் அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவரைப் பற்றித் தப்பாக–போதை மருந்து எடுக்கிறார் என்று நினைத்தேன். அவரிடமும் சொன்னேன். இன்னும்... இன்னும் அவரிடம், எத்தனை பிறவி எடுத்தாலும் அவர்தான் என் கணவர்; வேறு வாழ்வு எல்லாம் ஒன்றும் கிடையாது என்று சொல்ல வேண்டும்..." என்று யோசித்துக் காரணம் சொன்னாள்.

மணிவாசகம் பேசாமலே நிற்கவும், "இந்த இரண்டு நாட்கள் அவரோடு எனக்கு வேண்டும், மணி சார். வேண்டுமானால் இந்தக் கடிதம் முழுவதும் படித்துப் பாருங்கள். அவர் அருகில் இருந்து நான் அவருக்கு ஆறுதல் அளிக்க வேண்டும்..." என்றவள் சட்டென உடைந்து, "அய்யோ! அம்மா! என்னால் தாங்க முடியவில்லையே!" என்று அழத் தொடங்கி விட்டாள்.

"சிஸ்டர், ப்ளீஸ், வேண்டாம். கேசி ரொம்பவும் பிடிவாதமாகச் சொன்னானே என்று யோசித்தேன். வாருங்கள். முதலில், அவ



னோடு டெலிஃபோனில் பேசுவோம். பிறகு மற்றது யோசிக்கலாம்" என்று கூறவும், உதயரேகாவும் அதற்குச் சம்மதித்தாள்.

ஆனால், பலமுறை முயன்றும் கிருஷ்ணசந்திரன் தங்கியிருந்த மருத்துவமனையோடு தொடர்பு கொள்ளவே இயலாது போயிற்று. ஏதோ, 'டெக்னிகல் ஃபால்ட்' என்று காரணம் சொன்னார்கள்.

24

வெறுப்புடன் ரிசீவரை வைத்துவிட்டு, "சாரிம்மா" என்றான் மணிவாசகம். "இவ்வளவு நேரம் விருதாவாகக் கழியும்படிச் செய்து விட்டேன்" என்றான் கழிவிரக்கத்துடன்.

"இதில் உங்கள் மேல் ஒரு தப்புமில்லையே" என்று முறுவலிக்க முயன்றாள் அவள். "இனி அவர் முகவரி தருகிறீர்களா? நான் கிளம்புகிறேன். இனித் தாமதம் செய்யாதீர்கள்.. ப்ளீஸ்..." என்று அவசரப்படுத் தினாள்.

"இந்த மாதிரி சூழ்நிலையில் உங்களைத் தனியே அனுப்ப நான் அரக்கன் அல்ல, உதய ரேகா. வாருங்கள். நானே அழைத்துப் போகிறேன்" என்று இரண்டு எட்டு எடுத்து வைத்தவன் மீண்டும் யோசனையோடு தயங்கினான்.

"என்ன? உங்களுக்கு வேறு வேலை ஏதேனும் இருந்தால் நானே போய்க் கொள்கிறேனே?" என்றாள் அவள் துன்பம் தோய்ந்த குரலில்.

"கேசியின் அப்பா ஒரு தகவலும் இல்லாமல் உங்கள் இரண்டு பேரையும் காணவில்லை என்றால் ஊரையே தலை கீழாகப் புரட்டி விட மாட்டாரா?"

"அவருக்கும் ஏதோ கடிதம் எழுதியிருக்கிறாராமே.."

"ஆமாம். நாளை தான் அவர் கைக்கு கிடைக்க வேண்டுமாம். நாளைக்கு உள்ளூர் தபாலில் போட நினைத்தேன்."

நெற்றிப் பொட்டை அழுத்தி, உதயரேகா ஒரு கணம் யோசித்தாள். "அதைக் கையோடு எடுத்து வாருங்கள். வழியில் எங்காவது தபால் பெட்டியில் போட்டு விடலாம். நானும் வெளியூர் போவதாக வீட்டுக்கு.. ஃபோன்.. இல்லை வீடு வரை போய் நேரிலேயே சொல்லி விடலாம். கொஞ்சம் துணி மணி... பணம் எடுக்க வேண்டும்.. வாருங்கள். சீக்கிரம் போகலாம். எங்கள் காரில் போகலாமா? அது இன்னும் கொஞ்சம் வேகமாகப் போகும்..." என்றாள் முன்னே நடந்தபடி.



வாய் பேசியபோதும், மனம் எங்கோ இருப்பதை அவளது கண்கள் காட்டின.

வேறு எங்கே? கணவனிடம்தான் என்பதை ஊகித்த மணிவாசகம், பெருமிதமும் கனிவுமாய் நோக்கி, "கேசி சும்மா பெருமை பேசவில்லை, சகோதரி. வாருங்கள் போகலாம்" என்று கூறியபடி, டீ.வி. ஸ்டாண்டின் கீழ்த்தட்டில் இருந்த ஒரு சிறு பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

மணிவாசகம் வெளியூர்ப் பயணத்துக்கு ஆயத்தமாகவே இருந்திருக்கிறான்! எங்கே என்று அறியப் பிரமாதமான மூளை தேவையில்லை! ஆனால் எப்போது, எந்தச் செய்தியின் பின் கிளம்புவதாக இருந்தான் என்று எண்ணிப் பார்க்கும் போதே உதய ரேகாவின் வயிறு, நெஞ்சு எல்லாவற்றையும் ஏதோ இறுக்கிப் பிடித்தாற் போல நடை தடுமாறினாள்.

காரைத் தானே ஓட்டுவதாக மணிவாசகம் கூறவும், சாவியை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டாள்.

வெகு விரைவிலேயே பெங்களூர் மார்க்கத்தில் கார் விரைய, நெற்றியைப் பிடித்தபடி, கதவோரமாய்ச் சோர்ந்து கிடந்தாள் உதயரேகா.

என்னென்னவோ பயங்கரக் கற்பனைகளில் அவளுக்கு அவ்வப்போது உடல் சிலிர்த்து, தூக்கி வாரிப் போட்டது.

ரமணி சந்திரன்



"உங்கள கமண்டலத்திலிருக்கும் புனித நீரில் எனக்கு ஒரு மூணு அவுன்ஸ் தரலாகதா குருவே!"

"ராஸ்கல்! அதில் நான் விஸ்கி ஊற்றிவச்சிருப்பதை தெரிஞ்சுக்கிட்டு கிண்டலா பண்றே?!"

— உ. ராஜாஜி

இவளே இப்படிக் கலங்கிக் கொண்டு இருந்தால், அவனுக்குத் தைரியமூட்டுவது எப்படி?

ஒரு தரம் அவள் அப்படிக் குலுங்கியபோது, "என்னம்மா?" என்று பரிவுடன் மணிவாசகம் வினவினான்.

"ஒன்றுமில்லை.. சும்மாவே தவித்தவரை நான் வேறு என்ன மாதிரி நரகவேதனை அனுபவிக்க வைத்து விட்டேன்!" என்று விழிகளில் ததும்பிய நீரை உள்ளுக்கு இழுக்க முயன்றவாறே வருத்தத்துடன் உரைத்தாள் உதயரேகா.

"இல்லையே, சிஸ்டர்! உங்கள் சாமர்த்தியம், நகைச்சுவை உணர்வு பற்றியெல்லாம் கேசி மிகவும் பெருமையாகத்தானே பேசுவான்" என்று மறுத்தான் மணிவாசகம்.

அவனை வம்புக்கிழுத்து, மடக்கிப் பேசியது எல்லாம் நினைவு வர அவள் விசித்தாள்.

மணிவாசகம் திரும்பிப் பார்க்கவும், "அதில்லை மணி சார். உங்கள் நண்பருக்கு என்னிடம் சும்மாவே மிகுந்த அன்பு. என்னோடு பேசிச் சிரிக்க, பழக எல்லாம் அவருக்கு இயல்பாகவே அதிக ஆசைதான். ஏற்கெனவே அதையெல்லாம் வெளிக்காட்டாமல் மறைக்கவும், அவர் படாத பாடு பட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும். அப்போது போய், நான் அவரை விரட்டிப் பிடிக்க முயன்றபோது தன்னை அடக்கிக் கொள்வது அவருக்கு எவ்வளவு கடினமாக இருந்திருக்கும்! விதி ஒருபுறம் சோதித்தது என்றால் இன்னொரு பக்கம் நானல்லவா அவரைப் பெரிதும் வதைத்து விட்டேன்!" என்று மறுகினாள் அவள்.

"அப்படி அல்ல, சிஸ்டர். பெற்றோரையும், தங்கையையும் எண்ணி உள்ளூர நொந்து கொண்டிருந்தவனின் வாழ்வில் நீங்கள் ஒரு தென்றலாக வந்து, கொஞ்சம் சுகம் கொடுத்தீர்கள். உங்கள் பேச்சும், சிரிப்பும்... ஏதோ எழுபத்தைந்து லட்சமேதான் விலை என்று பெண்ஸ்கார் கேட்டீர்களாமே, அதைச் சொல்லிச் சொல்லி எப்படிச் சிரித்தான் தெரியுமா?"

சற்றே ஆறுதலாக உணர்ந்தவள், கணவனுடைய நண்பனின் புறமாய்த் திரும்பி, நனைந்த விழிகளால் நோக்கி, நன்றி தெரிவித்தாள்.

அதை ஒன்றுமில்லை என்று ஒதுக்கி, "நான் கூட உங்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் சிஸ்டர். வசுமதி விஷயத்தில் ஒரே பிடிவாதமாக நின்று தடுத்தீர்களாமே! நல்லவேளை! இல்லை என்றால் அந்தக் குழந்தையை மனைவியாக எண்ண நான் மிகவும் கஷ்டப்பட நேர்ந்திருக்கும்! கேசிக்கு என்னிடம் மிகுந்த நம்பிக்கை! தங்கையை பாசம் காட்டிப் பாதுகாப்பேன் என்று எண்ணம். ஆனால், மணவாழ்வுக்கு வெறும் பாசமும் பாதுகாப்பும் மட்டும் போதாதே!" என்றான் அவன்.

"அவரது நம்பிக்கையின் காரணம் இப்போது புரிகிறது மணி சார்" என்றாள் அவள் மணிவாசகத்தின் பேச்சில் ஈடுபட்டு. "நான் கூட முதலில் உங்களைத் தவறாக நினைத்திருந்தேன்..."

"கேசி சொல்லியிருக்கிறான். அந்த நினைப்பில் ஏதேனும் மரியாதைக் குறைவாகப் பேசினால்கூடப் பொருட்படுத்த வேண்டாம் என்றான்" என்று முறுவலித்தான் மணிவாசகம்.

"அவர் திரும்பத் திரும்ப உங்களைப் பற்றி உயர்வாகக் கூறியபோதும் அப்போது எனக்குப் புரிந்து கொள்ளத் தெரியவில்லை... தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றாள் உதயரேகா பணிவுடன்.

"இந்த மாதிரி வார்த்தைகளுக்கு அவசியமே இல்லை, சிஸ்டர். அதெல்லாம், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளாத அன்னியர்களிடையே மட்டுமே தேவைப் படுபவை. கேசியின் மனைவி என் சகோதரி அல்லவா?" என்று முடித்து விட்டுப் பேச்சை மாற்றினான் அவன்.

"நளினா விஷயம் வெளியானதும் நீங்கள் என் பங்கைக் கண்டு கொள்வீர்கள் என்று நான் கேசியிடம் சொல்லிக் கொண்டே இருந்



"அவர் சினிமா உலகத்துக்கு ஒன்றுமே செய்ததில்லை. அவரைப் போய் கலை உலகத்துக்கு சேவை செய்ததா பாராட்டி மாலை போடறாங்களே?"


"அவர் நடிகை ஜிகினா ஸ்ரீயை கல்யாணம் செய்துகிட்டு திருமணத்துக்குப் பிறகு நடிக்கக் கூடாதுன்னு சொல்லிட்டாரே, அது பெரிய சேவையில்லையா?"

— பாஸு

மக்கள் சக்தி இயக்கம்



17-A தெற்கு அவென்யூ,
திருவான்மியூர்,
சென்னை - 600 041.
☎ : 411800



என் இனிய தமிழ்ப் பெருமக்களே!

நாம் பாக்கியம் செய்தவர்கள். நம் முன்னோர்கள் உலகிற்கே வழிகாட்டக்கூடிய அறிவையும், ஞானத் தெளிவையும் நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

ஆனால் இன்றையத் தமிழனின் நிலை என்ன?

மக்களின் வரிப்பணமும், சேமிப்பும், பொதுச் சொத்துக்களும் கொள்ளையடிக்கப்படும் நிலையும், அடியாட்களை வைத்து மிரட்டி ஆட்சி நடத்தும் கொடுமையும் நடைபெறுகிறது.

நாம் இதற்கு ஒரு வழி காண வேண்டும்!

நாட்டின் தலைவிதி மக்களின் வாக்குகளால்தான் நிர்ணயிக்கப்படுகிறது. மக்கள் சக்தி ஒன்று திரளுமானால் உங்கள் தீர்ப்பினால் ஒரு அமைதியான பெரும் மாற்றத்தை நாம் கொண்டுவர முடியும். இதைக் கருத்தில் கொண்டு, உங்கள் சார்பில், வரும் பொதுத் தேர்தலில் ஒரு அரசியல் கட்சியாக பங்கு கொள்வது என்று மக்கள் சக்தி இயக்கம் தீர்மானித்திருக்கிறது.

இயக்கம் என்ன செய்தது எட்டாண்டுகளில்?

* தஞ்சை நரிமணத்தில் நாலாயிரம் கோடி ரூபாயில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் வரக் காரணமாயிருந்தது. மதுவிலக்கிற்காக சிறை சென்றது.
* தென்னகத்து நதிகளை இணைக்கக் கோரி கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை 1030 கிலோ மீட்டர் 38 நாட்கள் பாதயாத்திரை நடத்தியது. இன்று நாங்கள் அளித்துள்ள மகாநதி, கோதாவரி, கிருஷ்ணாவை காவிரி, வைகையுடன் இணைக்கும் திட்டம் சாத்தியம்தான் என்று மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது.
* நாமக்கல்லில் கடந்த மூன்றாண்டுகளாக ஒரு புதிய கல்வித் திட்டத்தை அமுல்படுத்தி வருகிறது.
* களக்காடு, பத்மநாபபுரம், அய்யனார்புரம், ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற பல கிராமங்களில் சமுதாயப் பணிகள் பல செய்து கொண்டு இருக்கிறது.

இத்தனையும் எந்த பதவியும் இல்லாமல்!

மாணவர்களே! மாணவிகளே!

மாணவர் சக்தி கிராமங்களுக்குச் சென்று வீட்டுக்கு வீடு, கடைக்குக் கடை, என்று ஊர் ஊராகப் பிரசாரம் செய்யுமானால், மக்கள் இந்த உண்மைகளைத் தெரிந்து கொள்வார்கள்.

மக்கள் சக்தி இயக்கம் நாட்டில் மாற்றம் காண மாணவர் சக்தியை அழைக்கிறது. நடுத்தர வர்க்க சக்தியை அழைக்கிறது. இந்த நாட்டின் கலாச்சாரத்தை காத்து நிற்கும் பெண்கள் சக்தியை அழைக்கிறது.

அநியாயங்களுக்குச் சாட்சியாய் இருந்தது போதும்! அணியாகத் திரளுவோம்!

தம்பி! மகளே! கோயிலில் சாமி இருப்பது உண்மையானால் நீங்கள் நல்லவர்களுக்காக மணியடியுங்கள்!

சகபயணி
எம்.எஸ். உதயமூர்த்தி

குறிப்பு :
1. உறுப்பினராக விரும்புபவர்கள் தலைமையகத்திற்கு எழுதுங்கள். நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. (ஆனால் கண்டிப்பாக ரூ. 1000க்கு மேல் அனுப்ப வேண்டாம்).
2. கட்சி சார்பற்ற நல்லவர்கள் வேட்பாளராக நிற்க விரும்பினால் உடனே தொடர்பு கொள்ளுங்கள். மக்கள் சக்தி இயக்கம் உங்களை ஆதரிக்கும்.

'சுருக்-நறுக்' என்றொரு சொல்லோவியம் - 24

பொறுமை என்பது....

"...கடலினும் பெரிது" என்று வழக்கமாகச் சொல்வார்கள். நமக்கெல்லாம் அதைவிடவே அதிகமாகத்தான் இருக்கிறது. இல்லாவிட்டால் நாட்டு நடப்புகளைப் பார்த்துக் கொண்டு வயிறு எரிந்தாலும் இன்னொரு பக்கம் பிரைம் ஸ்போர்ட்ஸில் மாட்ச் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

போகட்டும். 'பொறுமை' குறித்து நீங்கள் ஒரு சொல்லோவியம் தீட்டுங்கள். சுருக்கென்று இருக்க வேண்டும். சுலபமாக மனசில் உட்கார்ந்து கொள்ளும்படியாகவும் இருக்க வேண்டும். சிறந்த சொல்லோவியங்களுக்கு ரூ. 50/- பரிசு. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

ஆயிற்று, இன்னும் இரண்டே வாரங்கள். டைட்டன் கடிகாரங்கள் உங்களில் யாருடைய மணிக்கட்டுகளை அலங்கரிக்கப் போகின்றன? காத்திருங்கள்!

முடிவு தேதி : 1.4.96

பொறுமை என்பது ....

....

....

....

....

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

தேன். ஆனால், மனதுக்கு அவன் நிறைய வேலை கொடுத்ததால், நீங்கள், இது பற்றி எண்ணிப் பார்க்கவே இல்லை போலத் தெரிகிறது!" என்றான் சற்று இலகுவான குரலில்.

லேசாக முறுவலித்துவிட்டு, "இப்போதுதான்..." என்று தொடங்கியவளின் முகம் உடனே வாடியது. எந்த மாதிரி நேரத்தில் நினைவு வந்தது!

அப்போதும் தப்பாகத்தானே நினைத்தாள்! வசுமதியின் பிறந்த நாளின்போது, இந்த உண்மை விளம்பி, உண்மையை விளம்பாமலே விட்டிருக்கலாமே என்று நினைத்தேனே! ஒரு பொய்யை உண்மையாய் விளம்பி விட்டு வரும்படியான உத்தரவைத்தானே நிறைவேற்றியிருக்கிறான்!

இருவருக்குமே ஆறுதல் கிட்டினாற் போல இருக்கவே, பேச்சு கிருஷ்ணசந்திரனையே சுற்றியது.

நண்பனைப் பற்றிப் பேசிய மணிவாசகம், "இப்போதைய நிலையில், இன்னமும் ஒருசில மாதங்கள் அவன் நல்லபடியாக இந்தத் தலைவலி தவிர வேறு பாதிப்பின்றி வாழ்ந்திருக்க முடியும், சகோதரி. அப்படி வாழ்ந்து முடித்துவிடத்தான் முதலில் அவன் முடிவு செய்திருந்ததும். உங்கள் திருமணத்தின் பின்னரும், வாழும் காலத்தை, உங்களோடு தன் வரையில் சுகித்திருந்துவிட்டு, விதி முடிகிறபோது அவன் பாட்டில் போயிருக்கலாம். ஆனால் அது உங்களுக்குச் செய்யும் நியாயமாகாது என்று நினைத்தான். உயிர்பிழைக்க ஒரு வாய்ப்பு இருந்தால், அதை முயற்சி பண்ணாமல் விட்டுவிடவும் இப்போது அவனுக்கு மனமில்லை..." என்று பெருமூச்சு விட்டான்.

"இப்போது ஏன் மனமில்லை?" என்பது புரிந்ததால் உதயரேகா இன்னமும் நொந்தாள். கணவனின் வாழ்நாளில் சில மாதங்களைக் குறுக்கி விட்டோமோ என்று குமைந்தாள்.

ஆனால், அது அப்படியல்ல என்றான் மணிவாசகம். அந்தக் கட்டியினால் எப்படியும் மரணம் என்கிறபோது - உயிர் பிழைப்பதற்குரிய வாய்ப்பு ஒன்று இருக்கும்போது- அது எவ்வளவு சிறுவாய்ப்பு என்றாலும் முயற்சி செய் வதுதான் சரி என்றான் அவன்.

பேச்சும் யோசனையும் கவலையும் தேற்றலுமாக ஒருவாறு பெங்களூரின் சுற்று வட்டாரத்தில் அமைந்திருந்த மருத்துவ மனையை இருவரும் சென்றடைந்தார்கள்.

கிருஷ்ணசந்திரனின் அறை மணிவாசகத்துக்கு ஏற்கெனவே தெரிந்திருந்ததால், நேரே அங்கே சென்றார்கள்.

அங்கே, தலை முழுவதும் கட்டுகளோடு, மூக்கிலும் கையிலும் குழாய்களோடு, உணர்வற்றுக் கண்மூடிக் கிடந்த கணவனைக் கண்டதும் உதயரேகா மயங்கி விழுந்தாள்!

(அடுத்த இதழில் முடியும்)



பிருதிவிராஜ்

"**த**லை சீவிக்கோ. இந்தப் பவுடரைப் போடு. லேசா டொய்சிவிட்டா சென்டை அடி..." என்றாள் அம்மா.

ரவிக்குமார் சிரித்தான். "டொய்சிவிட்டா லேடீஸ் பார்கீப்பூம்."

"ஆமா. ஸ்ரீவைகுண்டம் பொண்ணுக்கு, 'டொய்சி விட்டா' பார்கீப்பூம் பற்றியா தெரியப் போகுது."

கார் தாமிரபரணி பாலத்திற்கு அருகில் நின்று கொண்டிருந்தது.

"இன்னும் பத்து நிமிஷம் கழிச்சுக் கிளம்புவோம். ராகு காலம் முடிஞ்சிடும். ராகுகாலத்திலா பொண்ணு பார்க்கப் போகிறது?" என்றாள் அம்மா.

ரவிக்குமார் காரை விட்டு இறங்கினான். தாமிரபரணியைப் பார்த்தான். ஓர் அமைதியான அழகிருப்பது போல் தோன்றியது. அழகு ஆற்றில் இருக்கிறதா? அல்லது நம்முடைய ஊரில் ஓடும் ஆறு என்பதால் அழகாகத் தோன்றுகிறதா? கலீல்கிப்ரானுக்கு லெபனான் அழகும், தி.ஜ.ராவுக்கு காவேரி அழகும் இந்த உணர்வினால்தான் உயர்வாகத் தோன்றியதா? பம்பாயில் எத்தனையோ பெண்களைப் பார்த்துப் பழகியிருந்தாலும் கூட, கல்யாணம் என்றவுடன் திருநெல்வேலி வந்து, ஸ்ரீவைகுண்டத்தைப் பார்த்துப் பெண் பார்க்கப் போய்க் கொண்டிருப்பது இந்த உணர்வினால்தானா?

"பொண்ணு பார்க்கவா இரண்டு வாரம் லீவ். பம்பாயிலேயே ஒரு பொண்ணு கிடைக்காதா?" என்று மானேஜர் கேட்டது ஞாபகத்திற்கு வந்தது. சிரிப்பு வந்தது.

அம்மாதான் லெட்டர் போட்டிருந்தாள். நாலு பெண் பார்த்திருப்பதாக எழுதியிருந்தாள். ஒரு நடவை வந்து விட்டுப் போகச் சொன்னாள். போய் வரலாம் என்று தோன்றியது. அம்மா சொன்ன பெண்களில் மூன்றைப் பார்க்காமலே கழித்து விட்டான். இந்தப் பெண் எம்.ஏ. ஆங்கில இலக்கியம் படித்திருந்தது. எம்.ஏ. ஆங்கில இலக்கியம் ஸ்ரீவைகுண்டத்திலேயே சகஜமாகி விட்டது. இவனுடைய பாட்டி அடிக்கடி சொல்லுவாள்.

'எங்கப்பாதான் இந்த ஸ்ரீவைகுண்டத்திலேயே முதல்ல இங்கிலீஷ் படிச்சது. அதனால் அவுகளை 'இங்கிலீஷ் பிள்ளை'ன்னுதான் ஊரே கூப்பிடும்' என்று பெருமை பேசுவாள்.

பெண் எப்படியிருப்பாள்? எம்.ஏ. படித்திருக்கிறாள். நாம் அவளை எப்படி இம்ப்ரஸ் பண்ணலாம்? சில புத்திசாலித்தனத்தைக் காட்டக்கூடிய கேள்விகளை யோசித்தான்.

"அம்மா! போகலாமா! ராகு காலம் போயிடுச்சு" என்ற ரவிக்குமார் உள்ளே ஏறி உட்கார்ந்தான். கார் நகர்ந்தது.

பெரிய காம்பவுண்டிற்குள் கார் உள்ளே நுழைந்தது. பெரிய தோட்டம். மாமரம், தென்னை, வேறு பல செடிகள் இருந்தன. ரவிக்குமார் இறங்கி வீட்டிற்குள் போனான். வரவேற்று உட்கார வைத்தார்கள். விசாலமான ஹால். அந்த ஹாலுக்கு சம்பந்தமில்லாமல், நாலு பிரம்பு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஒரு நல்ல சோபா செட் போட்டால், ஹால் எடுப்பாக இருக்கும். பம்பாயில் இந்த மாதிரி விசாலமான ஹாலே பார்க்க முடிவதில்லை.

பெண்ணைக் கூப்பிட்டார்கள். பெண் சிம்பிளாக வந்து, ஒரு நமஸ்காரம் சொல்லி உட்கார்ந்தது. அலங்காரம் எதுவும்

பண்ணவில்லை. பவுடர், சென்ட் இல்லை. ஒரு சின்ன டிஸ்கோ செயின் மட்டும் கழுத்தில் போட்டிருந்தது.

"உன் பெயர் என்னம்மா?" என்று அம்மா கேட்டது. இவனுக்கு அபத்தமாகத் தோன்றியது.

"விலாசினி" என்றாள். "இது எங்க அம்மா பேரு" என்றார் பெண்ணின் அப்பா, ஏதோ மிகப் பெரிய சரித்திர நாயகியின் பெயர்க் காரணத்தை விளக்குவது போல.

ரவிக்குமார் பேச ஆரம்பித்தான். தன்னுடைய புத்தி சாலித்தனத்தைக் காட்ட முயற்சி செய்தான். "எனக்குத் தெரியலீங்க. நான் சயன்ஸில நல்ல மார்க் வாங்கலை. அப்பாதான் ஆங்கில இலக்கியம் படிக்கச் சொன்னார்."

படுசாதாரணமாகப் பதில் சொன்னது.

"என்னைக் கவர்ந்தவர் கவிஞர் பாரதி. பாரதியைக் கவர்ந்த ஆங்கிலக் கவிஞன் யார் தெரியுமா?"

"யாருங்க?"

"ஷெல்லி. ஒரு சமயம் ஷெல்லிதாசன்னு கூட தம் பெயரை வைத்திருந்தார். நான் ஷெல்லி படித்ததில்லை. அப்படி ஷெல்லியிடம் என்ன விசேஷம்?"

"போன செமஸ்டரில் ஷெல்லி படித்தது. இப்ப ஞாபகம் இல்லை" என்று சொல்லி, நாக்கை வெளியே நீட்டி உள்ளே இழுத்துக் கொண்டது.

ரவிக்குமார் விடாமல் நாலு கேள்வி தொடர்ந்து கேட்டு விட்டுக் கிளம்பினான்.

கார் ஸ்ரீவைகுண்டம் பாலத்தைத் தாண்டுவதற்குள் 'பெண்ணைப் பிடித்து விட்டது' என்று அம்மாவிடம் சொன்னான். அம்மாவிற்கு ரொம்பவே பிடித்திருந்தது. மளமளவென ஏற்பாடுகள் நடந்தன. நாலே நாளில் நிச்சயதார்த்தம். மூன்று மாதம் கழித்து கல்யாணம் என்று முடிவானது.

சித்தி பொண்ணு நர்மதா நிச்சயதார்த்தத்திற்கு முந்தின நாள் வந்திறங்கினாள்.

"டேய், கங்கிராட்ஸ். கடைசியில ஒரு பொண்ணு உன்கிட்டே மாட்டிக்கிட்டா!"

"ஏய் உதைப்பேன்."

"உனக்கு பெண்ணைப் பிடிச்சிருக்கா?"

"சந்தேகமென்ன?"

"அது சரி. அவளை நீ நல்லா இம்ப்ரஸ் பண்ணணும். முதல்ல அவளை நீ நல்லா இம்ப்ரஸ் பண்ணிட்டா, பிறகு லைப் பூரா அவ சரண்டர்."

"அவளை எப்படி இம்ப்ரஸ் பண்ணுவது. ஒரு ஐடியா குடேன்."

"பொதுவாக இப்பவுள்ள பொண்ணுங்களுக்கு என்ன பிடிக்கும்னா..."

"சாருகானையா?"

"அது உங்க பம்பாயில். இப்ப இங்க மேல்ஷாவனிசத்தை எதிர்த்துப் பேசுகிற ஆண்களைத்தான்

உசியம்

பிடிக்கும். நாளை நிச்சயதார்த்தம் முடிந்து அவளிடம் உட்கார்ந்து பேசும் போது மேல் ஷாவனிசத்தைப் பற்றி பேசு... பெரியம்மா, நெல்லையப்பர் கோவிலுக்குப் போவோமா?" என்று கேட்டபடி நகர்ந்தாள்.

ரவிக்குமார் யோசிக்க ஆரம்பித்தான். மறுநாள் பெண்ணிடம் எப்படிப் பேச வேண்டும் என்று யோசிக்க ஆரம்பித்தான்.

நிச்சயதார்த்தம் முடிந்து. விலாசினியுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான். நர்மதா வேறு சேர்ந்து கொண்டாள்.





''என்ன இருந்தாலும் நம்ம கபாலிக்கு திமிரு...''

''ஏன் சார் அப்படிச் சொல்றீங்க...?''

''உங்க டிப்பார்ட்மெண்ட் ஆளுங்களுக்கும் எங்க ஆளுங்களுக்கும் 'ஒன்டே' கிரிக்கெட் மேட்ச் நடத்தலாமான்னு கேக்கறான்!''

– விஜயலட்சுமி பிரட்ரிக்

"தமிழ்நாட்டுக் கவிஞர்கள் எல்லாருமே மேல்ஷாவனிஸ்ட்கள். பெண்ணை ஒரு போகப் பொருளாகப் பார்த்திருக்கிறார்கள்" என்றாள் நர்மதா.

"ஆங்கில இலக்கியம் மட்டும் என்ன வாழ்கிறது? மில்டன் மிகப் பெரிய மேல்ஷாவனிஸ்ட். 'பாரடைஸ் லாஸ்ட்'ல் பெண்ணினத்தையே எவ்வளவு பழித்திருக்கிறார்."

"கவிஞர்களின் இலக்கியம் சமூகத்தின் பிரதிபலிப்புத்தானே! சமுதாயமே ஆணாதிக்கச் சமூகம்தானே!" என்று சொன்னபடி நர்மதா, கண்ணைக் காட்டியபடி நகர்ந்தாள்.

"ஆணாதிக்கச் சமுதாயத்தின் பாதிப்பை, இலக்கியத்திலிருந்து எடுத்துவிட முடியாது. சமுதாய அமைப்பையே ஒட்டுமொத்தமாக மாற்ற வேண்டும்" என்று ரவிக்குமார் பேச ஆரம்பித்தான். கையை ஆட்டி, ஆட்டி நிறைய விஷயங்கள் சொன்னான். விலாசினி இவன் கைகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். "உங்களுக்கு நகம் அதிகம் வளர்ந்திருக்குது. நகத்தை வெட்டிடுங்க" என்று சொன்னாள்.

ரவிக்குமார் மேல்ஷாவனிசத்தைப் பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டு, அவளைப் பார்த்தான்.

"இரண்டு பேரும் சாப்பிட வாங்க!" என்று யாரோ கூப்பிட, விலாசினியுடன் எழுந்தான்.

இரண்டு நாளில் பம்பாய் கிளம்பினான். ஸ்டேஷனுக்கு நண்பன் சந்திரன் வந்திருந்தான். வரும்போதே கையில் ஏதோ ஒரு கிரீட்டிங் கார்டுடன் இருந்தான்.

"டேய், நீ சூப்பர் ஆன்டா. போன கையோட நிச்சயதார்த்தமே முடிச்சிட்டு வந்துட்ட. இதுல ஒரு கையெழுத்துப் போட்டு உன்னோட ஆளுக்கு போஸ்ட் பண்ணு."

"எதுக்கு?"

"இந்தா பாரு. வந்து சேர்ந்தவுடன் ஒரு கிரீட்டிங் அனுப்பு. இது எவ்வளவு அருமையான கார்டு, உனக்காக அலைந்து திரிந்து வாங்கியிருக்கேன். நாளைக்கு இரண்டு கிரீட்டிங் கார்டு. நாளை மறுநாள் நாலு. அப்புறம் எட்டு. அதுக்கப்புறம் பதினாறு. அப்புறம்..."

"நான் செத்தேன். முப்பத்திரண்டு கிரீட்டிங் கார்டா..."

"இல்ல. அங்கதான் சந்திரனோட ஐடியா வருது. ஒண்ணுமே பண்ணாமல் பத்து நாளைக்கு சும்மா இருக்கற. அவங்க தவிச்சுப் போயிடுவாங்க."

"அப்புறம் கார்டு அனுப்பணுமா?"

"இல்லை. ஒருநாள் திடீர்னு போன் செய்யணும். மறுநாள் இரண்டு தடவை பேசணும். அதற்கு அடுத்த நாள் மூணு தடவை பேசணும். திடீர்னு பேசவே கூடாது..."

"அப்புறம்..."

"ஒருநாள் பார்சல்ல நல்ல கிப்ட் அனுப்பணும். ஊருக்குப் போறவங்ககிட்ட கோல்ட் பிரேஸ்லட் வாங்கிக் கொடுத்து விடலாம்..."

"டேய். இப்படி உன் பேச்சை நான் கேட்டால், எனக்கு கல்யாணத்திற்குப் போக காசிருக்காது..."

"அடச்சீ. நீயொரு கஞ்சன். இந்த கார்டிலாவது கையெழுத்துப் போடு."

போட்டான். போஸ்ட் பண்ணினார்கள். சந்திரன் சொல்வதும் சரியாகப்பட்டது. இப்படி ஏதாவது புதுமையாகச் செய்தால், அவளை இம்ப்ரஸ் பண்ணிவிடலாம் என்று தோன்றியது.

கார்டுகள் வாங்கி, வரிசையாக போஸ்ட் பண்ண ஆரம்பித்தான். பிறகு டெலிபோன் பேசினான். கிப்ட் என்ன வாங்கலாம் என்று யோசனை வந்தது. அவளுக்கே எழுதிக் கேட்கலாம் என்று ஐடியா வந்தது. அதுபற்றி எழுதினான். 'அட்ஜஸ்ட் பண்ணற ஆண்களைத்தான் லேடீஸ்க்குப் பிடிக்கும்'ன்னு யாரோ சொன்னது ஞாபகம் வர, கடைசியில் நாலு வரி சேர்த்தான்.

"நீ என்னை இவ்வளவு நாள் கவனித்திருப்பாய். மற்றவர்களும் என்னைப் பற்றிச் சொல்லியிருப்பார்கள். எதையாவது நான் மாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் எழுது. உனக்காக நான் மாறுகிறேன்" என்று எழுதி முடித்தான்.

அவளிடமிருந்து பதில் வந்தது.

''வாழ்க்கையை ஒன்றாகத் துவங்கப் போகும் சகமனிதர்கள் என்ற முறையில் நம்மிடையே இயல்பான நேசம் இருந்தால் போதுமானது. நேசத்தைக் காலம் ஆழப்படுத்தும். நாம் ஒருவரையொருவர் வசியப்படுத்த அதீத முயற்சிகள் எடுக்க வேண்டாம். இயல்பாக இருங்கள். சேர்ந்து வாழும் போது, உங்களுடைய பாதிப்பு என்னிலும், என்னுடைய பாதிப்பு உங்களிடமும் தானாக வரும். நீங்களும் நானும் மாறுவது இயல்பாக நிகழும்" என்று முடித்திருந்தாள்.

ரவிக்குமார் கடிதத்தைப் படித்து விட்டு, பேசாமல் சோபாவில் சாய்ந்து கொண்டான்.

தேனாகப் பாயும் திமிங்கலங்களின் இசை!



பறவைகளின் பாடல்களைக் கவனிக்கவே நம்மில் பலருக்கு நேரமில்லை - ஆனால் திமிங்கலங்களின் இசையை ரசிப்பவர் சில்வியா ஏர்ல் - அமெரிக்க ஆழ்கடல் அரசி!

"ஐம்பதடி தூரத்தில் அவை பாடியபடி நீந்துவதைக் கேட்டிருக்கிறேன். உடம்பே அந்த ஓசையில் அதிரும்..." என்கிறார்.

மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபோது கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த சில்வியாவை ஒரு பேரலை குப்புறத் தள்ளிவிட்டது. குழந்தை பயந்து அலறுவதற்குப் பதில் வியந்து மகிழ்ந்தாள். அன்று ஆரம்பித்தது ஆழ்கடலிடம் காதல்.

இன்று அறுபது வயதை நெருங்கிக் கொண்டிருக்கிறார் சில்வியா - காதலும் கடலைப் போல் பெருகி விரிந்துள்ளது.

உலகின் பல்வேறு கடல்களிலும் மூழ்கி அவற்றில் நிலவும் உயிரியல் அற்புதங்களைப் பதிவு செய்து, ஆராய்ச்சி மேற்கொள்கிறார் சில்வியா.

இந்தத் துறையில் துணிந்து 'குதித்த' முதல் பெண் இவர்தான். இவர் தலைமையில் ஒரு பெண்கள் குழு, கடலுக்கடியில் இரு வாரங்கள் வாழ்ந்தே காட்டியது! ஆழ்கடல் குடியிருப்பிலிருந்து வெளியேறி, ஒவ்வொரு நாளும் 10-12 மணி நேரம் கடல்பரப்படியில் 'உலா' வர வேண்டும்... விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் NASA அமைப்பு, தனிமைப்படுத்தப்படும் மனிதர்களுக்கு ஏதேனும் பாதிப்பு உண்டாகிறதா என்று அறிவதற்காகவே இப்படிப் பெண்களை ஆழ்கடலில் வாழச் செய்யும் சோதனையை நிகழ்த்தியது.

சோதனையின் முடிவில் NASAவுக்கு ஏதேனும் ஞானோதயம் உண்டாயிற்றா என்பது தெரியாது. ஆனால் சில்வியா ஏர்லுக்கு அது உண்டாயிற்று.

கடல் பரப்பின் கீழே, உயிர்த் துடிப்புள்ள தனியொரு உலகமே இயங்கி வருவதை அவர் கண்டார். அது ஒரு நுணுக்கமான தாள கதியுடன் செயல்படுவதை உணர்ந்தார். மனிதர்களின் தலையீட்டினாலும், மீன்பிடிப்பு முதலான இடையூறுகளினாலும் அந்தப் பிரத்தியேக உலகின் தாளகதி தறிகெட்டுப் போய்க் கொண்டிருப்பது அவருக்குப் புலனாயிற்று. முதல் வேலையாக, மீன் சாப்பிடுவதை நிறுத்தினார் சில்வியா.

ஒரு குறிப்பிட்ட வகை மீனைப் பிடிப்பதற்காக வலை வீசப்படும் போது ஆயிரக்கணக்கான வேறு உயிரினங்களும் கடலிலிருந்து வடிகட்டி எடுக்கப்படுகின்றன. ஒன்றையொன்று சார்ந்திருக்கும் உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. அவற்றுள் பல, அடியோடு அழிந்துகூடப் போய்விடுகின்றன — இது சில்வியா ஏர்ல் அனுபவித்தறிந்த உண்மை. இதுவே மீன் உணவைத் தவிர்க்கும் முடிவுக்கு அவரைத் தள்ளியது.

'Ocean Everest' என்றொரு திட்டத்தைத் தொடங்கியுள்ளார் சில்வியா. மலையேற்ற மன்னர்கள் எவரெஸ்ட் சிகரத்தை எட்டுவதற்கு முயன்றது போல் கடலின் மிக ஆழமான 'மரியானா டிரெஞ்ச்' என்ற பகுதியைத் தொட்டுவரும் முயற்சி இது. இதுவரை இரண்டு மனிதர்கள் மட்டுமே அப்பகுதியை அடைந்து, இருபது நிமிடங்கள்வரை இருந்து திரும்பியுள்ளனர்.

"அந்தச் சாதனையை முறியடிப்பேன்..." என்கிறார் சில்வியா ஏர்ல்.

தாக்க வந்த சுறா மீனைச் செல்லமாக மூக்கில் அடித்து அப்புறப்படுத்திய வீராங்கனைக்கு இது ஒரு சாதாரண சபதம்தானே!

— மலர்

நன்றி : பாபுலர் சைன்ஸ்



எஸ்.வி. சேகரின் சமீபத்திய நாடகமான 'தத்துப் பிள்ளை', அவரது வழக்கமான பாணியிலிருந்து விலகி, புதிய தோற்றத்துடன் இருக்கிறது.

ஒரு சாதா காதல் கதையை அஸ்திவாரமாகப் போட்டு, அதற்கு மேலே அரசியல் வீடு கட்டுகிறார் சேகர்.

வழக்கம் போல் மாமனை மணக்க விரும்பும் ஒரு பெண். வேறு பணக்கார வரன் தேடும் தாய். சுபமான முடிவு என்கிற ஃபார்முலாதான்.

ஆனால், நாட்டு நடப்புகளைப் பிடித்துக் கிழிப்பது என்று முடிவு செய்துவிட்டபடியால் கேரக்டர்களுக்கு வெகு லாகவமாக, அரசியல் சாயம் பூசி விட்டார் சேகர்.

பிரேமானந்தாவையும் சந்திராசாமியையும் இணைத்து ஒரு சாமியார் கேரக்டர். அதிலாண்ட நாயகியையும் அன்னாரின் தோழியையும் இணைத்து ஒரு கேரக்டர். மூன்றாந்தர அரசியல்வாதிகளின் ஒட்டுமொத்தக் குறியீடாக ஒரு கேரக்டர்.



வசனங்களின் கூர்மையான நக்கல், மண்டையைத் தாக்குகிறது.

("லைட் ஹவுஸ் பக்கத்துல நல்லதா ஒரு இடம் பார்த்தேன். முடிச்சிடலாம்னா கேக்க மாட்டேங்கறான் சுவாமி!"

"ஏன்?"

"சும்மா இருங்க. அவங்க முடிக்கச் சொன்னது மெரீனா பீச்சை. கவர்மெண்ட் அதை விக்கறதா இல்லையாம்.")

வளர்ப்பு மகன் விவகாரத்திலிருந்து, வருமான வரி ரெய்டு

தத்துப்பிள்ளை





வரை, நெஞ்சுவலியி விருந்து ஹவாலா வரை சகலத்தையும் ஒரு பிடி பிடித்திருக்கிறார்கள். ரஜினியின் அரசியல் முயற்சிகளைக் கூட விட்டு வைக்கவில்லை.

காட்டமான நாடகம். கண்டிப்பாகப் பாருங்கள்!

— கிச்சா

(பி.கு: அருகிலுள்ள படங்கள், தத்துப் பிள்ளை நாடகத்திலிருந்து எடுத்த காட்சிகள். கமெண்ட்களின் காப்பிரைட் மட்டும் நம்முடையது.)

தேர்வு

தி. சிவசுப்ரமணியன்

கடையில் இன்று அதிகக் கூட்டமில்லை. அது, அந்த இளம் யுவதிக்கு வசதியாய் இருந்திருக்க வேண்டும். அவள் பாட்டுக்கு செருப்புக்களைப் பார்ப்பதும், காலில் போட்டு அழகு பார்ப்பதும், ஒதுக்குவதுமாய் இருந்தாள்.

கூட வந்தவர் அவள் தகப்பனாராக இருக்க வேண்டும். வயது சுமார் நாற்பது இருக்கலாம். ஆனால், அது தெரியக்கூடாது என்பதற்காகவே தலைமுடிக்கு 'கறுப்புச் சாயம்' இட்டிருந்தார் போலத் தோன்றிற்று.

அவர் பொறுமையாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் அவளை. அவள் 'ஒரு செருப்பை எடுப்பாள்; காலில் போட்டுப் பார்த்து சரியாக இருக்கிறதா என்று பார்ப்பாள். அப்புறம் அதன் டிசைனை முன்னும் பின்னும் பார்த்து விட்டு,

"இந்த குறுக்கே இருக்கிற 'வார்' நல்லால்லையே, இதே மாடல்ல, இந்த வார் இல்லாம இருக்கிற மாதிரி 'மாடல்' எடுங்களேன்....

"இந்த டிசைன் நல்லாருக்கு ஆனால் கலர்தான் நல்லால்லை. வேற கலர் இருக்குமா?"

என்பாள்.

கிட்டத்தட்டக் கடையில் இருக்கிற எல்லா 'மாடலும்' காட்டியாகி விட்டது. ஒரு வழியாய்த் திருப்திப்பட்ட மாதிரி ஒன்றை எடுத்துக் கொண்டாள். காலில் போட்டுப் பார்த்தாள். எப்படி இருக்கிறது என்று கண்ணாடியில் பார்த்தாள். அப்புறம், "எப்படி இருக்குது?" என்று கூட அமர்ந்திருந்தவரிடம் கேட்க

அவர், "அருமையா இருக்கு ரோசி!" என்றதும்தான் "பில் போடுங்க" என்றாள்.

நான் பில் போட்டு அதை பேக் செய்யும் வரை 'சரியாக இருக்கிறதா, வேறு எடுக்கலாமா?' என்ற சிந்தனை அவளுள் ஓடிக் கொண்டு இருந்ததை, என்னால் படிக்க முடிந்தது.

இருவரும் கிளம்பிப் போனதும், "நேரத்தை 'வேஸ்ட்' பண்ணிட்டுதுங்க. பார்த்தமா, எடுத்தமான்னு இல்லாம! சுத்தக் கழுத்தறுவை" - முதலாளி எரிச்சலுடன் முனகிக் கொண்டார்.

ஆனால் எனக்கு அவ்விதம் தோன்ற வில்லை. அந்தப் பெண் மேல் வெறுப்பும் தோன்றவில்லை.

என்னைப் பொறுத்தவரை, வாழ்க்கையில் தேர்வு என்பது ஒரு அருமையான விஷயம். ஏனோ எனக்கு அது ஒரு போதும் கிடைக்காது போயிற்று.

சின்ன வயசில் படிக்க ஆசைப்பட்டுத் தேர்வு செய்ததை அப்பா ஒத்துக் கொள்ளவில்லை.

"போதும் போதும் 'சைன்ஸ்' குருப் எடுத்துப் படிச்சுக் கிழிச்சிடப் போறே. அப்படியே படிச்சாலும், டாக்டருக்கெல்லாம் படிக்க வைக்க முடியாது என்னால. பேசாம 'அக்கவுண்டன்சி' படி போதும்!

தேர்ட் குருப்பில் தான் அப்பா சேர்த்து விட்டார்.

பி.காம் படித்து விட்டு, "சி.ஏ பண்றேனே" என்றவனைத் தடுத்து, "உத்யோகம் தேடிக்கோ!" என்றார்.

நல்ல வேலை கிடைக்கத் தாமதமான

போது, "எந்த வேலையா இருந்தா என்ன? காசு வருதில்ல. கவுரவம் பார்க்கக் கூடாது!" என்று தம் நண்பர் மூலம் இந்தக் கடையில் 'கேஷியராகச்' சேர்த்து விட்டார்.

படிப்பிலோ, வேலையிலோ, இரண்டிலுமே விரும்பியது கிடைக்காது போயிற்று. விரும்பியதைத் தேர்வு செய்கிற உரிமை கைவராது நழுவிற்று எனக்கு. ஆனால் இந்தப் பெண்ணுக்கு அவ்வித மல்ல. காலணியே ஆனாலும் விரும்பியதைப் பொறுமையுடன் தேர்வு செய்கிற நிலையும், அதைப பொறுமையுடன் அங்கீகரிக்கிற தகப்பனும், கிடைத்திருக்கிறது அரிய விஷயம் என்று எனக்குத் தோன்றிற்று.



யோசனையுடன் நேரமும் நழுவ, கடையைப் பூட்டிக் கிளம்பின போது மணி ஒன்பதரையைத் தொட்டு விட்டிருந்தது. சைக்கிளை எடுக்கையில் சோமு கூப்பிட்டான்.

சோமு எங்கள் கடைக்கு அடுத்தாற்போல் 'பான் ஷாப்' வைத்திருப்பவன். வழக்கமாய் அவனிடம்தான் பீடா வாங்குவேன். "பீடா வாங்கினது இருக்கு, வேணாம்" என்றபடி நகரப் பார்த்த போது, அவனே அருகில் வந்து விட்டான்.

"வந்த பார்ட்டியை அசத்தலாப் பேசி கவுத்திட்டியா?"

"எந்த பார்ட்டி?"

"அதாம்மா. இப்ப வந்துட்டுப் போச்சுதே 'கார்' பார்ட்டி— அதான்! பாவம் கெழவனைக் கட்டிக்கிட்டு காஞ்சு போயி கிடக்குது. நம்ம கடைக்கு எதுனாச்சும் வாங்க வந்தாக் கூட தளுக்கி மினுக்கும். அதான் கேட்டேன்"

"என்னது, கூட வந்தது அந்தப் பொண்ணோட புருஷனா?"

"பின்ன 'நைனா'ன்னு நினைச்சுக்கிட்டியா. பாதிப் பேரு அப்படித்தான் நினைச்சிக்குவாங்க. பாவம் அந்தப் பொண்ணு. ஏழை வூட்டுல பிறந்தது அதும் தப்புதான். அப்பன் காரன் காசுன்னதும் வாயைப் பொளந்துக்கிட்டு பொண்ணைத் தள்ளி விட்டுட்டான்."

"எப்படி சோமு அது சம்மதிச்சுது?"

"யாரு கேட்டது அதும் சம்மதத்தை? இங்லீஷ்ல ஒரு பழமொழி சொல்வாங்களே, என்னது அது?"

"பெக்கர்ஸ் கெனாட் பி சூசர்ஸ்" என்ற போது என் மனசில் பாரம் கூடியிருந்தது.



உணர்ச்சிமயமான புதிய தொடர் ஆரம்பம்!

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka